

# சேவைக்காக முன்னெழுதல்



ரூஹி பயிற்சிக்கழகம்





நூல் 2

# சேவைக்காக முன்னெழுதல்

ரூஹி பயிற்சிக்கழகம்

இந்த தொடர்வரிசையில் வரும் நூல்கள்

ரூஹி பயிற்சிக்கழகத்தினால் வடிவமைக்கப்பட்ட இந்தத் தொடர்வரிசையில் உள்ள தலைப்புகள் கீழே வழங்கப்பட்டுள்ளன. இளைஞர்களும் முதியவர்களும் தங்கள் சமூகங்களுக்குச் சேவை செய்வதற்கான திறனாற்றலை மேம்படுத்துவதற்குரிய ஒரு முறைமையான முயற்சியில் இந்த நூல்கள் பிரதான தொடர்வரிசையாகப் பயன்படுத்தப்படும். பஹாய் குழந்தைகள் வகுப்பு ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்குத் தொடர்வரிசையில் வரும் மூன்றாவது நூலின் கிளைப்பயிற்சித் தொகுப்பு ஒன்றை உருவாக்கி வருவதுடன், இளைய இளைஞர் குழுமங்களுக்கு எனிமேட்டர்களை உருவாக்குவதற்கு நூல் 5'இன் கிளை பயிற்சிகள் தொகுப்பு ஒன்றையும் ரூஹி பயிற்சிக்கழகம் உருவாக்கி வருகின்றது. அவையும் கீழ்காணும் பட்டியலில் குறிப்பிடப்படுகின்றன. களத்தில் அனுபவம் பெருகி, மேம்பாட்டில் உள்ள பாடத்திட்ட அம்சங்கள் பல விரிவாகக் கிடைக்கும் கட்டத்தை அடையும்போது இந்தப் பட்டியலும் மாற்றம் கண்டு, கூடுதல் தலைப்புகள் சேர்த்துக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| நூல் 1 | ஆன்மாவைப் பற்றி பிரதிபலித்தல் |
| நூல் 2 | சேவைக்காக எழுதல் |
| நூல் 3 | சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 1 |
| | சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 2 (கிளை பயிற்சி) |
| | சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 3 (கிளை பயிற்சி) |
| | சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 4 (கிளை பயிற்சி) |
| நூல் 4 | இரட்டை அவதாரங்கள் |
| நூல் 5 | இளைய இளைஞர் சக்திகளை விடுவித்தல் |
| | ஆரம்ப உந்தம்: நூல் 5'இன் முதல் கிளை பயிற்சி |
| | விரிவடையும் வட்டம்: நூல் 5'இன் இரண்டாவது கிளை பயிற்சி |
| நூல் 6 | சமயத்தைப் போதித்தல் |
| நூல் 7 | ஒரு சேவை பாதையில் ஒன்றாகப் நடப்பது |
| நூல் 8 | பஹாவுல்லாவின் திருவொப்பந்தம் |
| நூல் 9 | ஒரு வரலாறு சார்ந்த முன்னோக்கைப் பெறுதல் |
| நூல் 10 | துடிப்பான சமூகங்களை நிர்மாணித்தல் |
| நூல் 11 | லௌகீக வழிமுறைகள் |
| நூல் 12 | (வரவிருக்கின்றது) |
| நூல் 13 | சமுதாய நடவடிக்கையில் ஈடுபடல் |
| நூல் 14 | (வரவிருக்கின்றது) |

பதிப்புரிமை © 2013, 2021 - ரூஹி அறக்கட்டளை, கொலம்பியா
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.
பதிப்பு 1.1.1.PP நவம்பர் 2013
பதிப்பு 2.1.2.PE ஜூலை 2021

Originally published in Spanish as Levantémonos a servir
Copyright © 1987, 1996, 2020 by the Ruhi Foundation, Colombia
ISBN 978-958-52941-0-3

ரூஹி பயிற்சிக்கழகம்
காலி, கொலம்பியா
மின்னஞ்சல்: instituto@ruhi.org
வலைத்தளம்: www.ruhi.org

# உள்ளடக்கம்


பயிற்றுநருக்கான சில சிந்தனைகள் ........ v

போதித்தலில் மகிழ்ச்சி ........ 1

எழுச்சியூட்டும் உவரயாடல்கள் ........ 21

ஆழ்பயிற்சிக்கான கருப்பொருள்கள் ........ 49

# பயிற்றுநருக்கான சில சிந்தனைகள்

ரூஹி பயிற்சிக்கழகத்தினால் வழங்கப்படும் பிரதான பயிற்சி வரிசையில் வரும் இந்த இரண்டாவது நூல், அர்த்தமுள்ள, ஊக்குவிக்கும் உரையாடல்களுக்குப் பங்களித்திட உதவும் செயல்திறன்களின்பால் கவனம் செலுத்துகின்றது. இந்த நூல் கவனம் செலுத்தும் குறிப்பான சேவை செயல் மூன்றாவது பாடப்பிரிவில் விவரிக்கப்படுகின்றது. வகுப்புவாத பந்தங்களை சக்திவாய்ந்த ஆற்றல்கள் பிளந்துவரும் ஓர் உலகில், சமுதாய வாழ்விற்கு மையமாக இருக்கும் கருப்பொருள்களை ஆராய்வதற்காக நண்பர்களையும் அண்டையர்களையும் அவர்களின் இல்லங்களில் சென்று சந்திக்கும் செயலானது, அது கலாச்சாரத்தின் ஒரு முக்கிய அம்சமாகிடுமானால், அதிகரித்துவரும் தனிமையினால் உருவாக்கப்படும் நோய்கள் சிலவற்றிற்கு அது நிவாரணம் அளித்திடக் கூடும். இவ்வாறு உருவாக்கப்படும் தோழமையின் பந்தங்கள், துடிப்பான மற்றும் இணக்கமிக்க சமூகங்களை நிர்மாணிப்பதற்கான செயல்முறையை வலுப்படுத்திட உதவும் எனப் பாடப்பிரிவு கருத்துரைக்கின்றது.

ஓர் அண்டைப்புறம் அல்லது கிராமத்திலுள்ள இல்லங்களுக்கான தொடர்ந்து பராமரிக்கப்படும் விஜயங்களின் ஒரு திட்டத்திற்குத் தொடர்புள்ள நிர்வாக ஸ்தாபனங்கள் மற்றும் முகவாண்மைகளினால் ஆதரிக்கப்படும் நண்பர்களின் மையக்கரு ஒன்றின் ஈடுபாட்டை உள்ளடக்கிய, ஒரு குறிப்பிடும் அளவு ஒழுங்கமைப்பைக் கோருகின்றது. நூலினூடே குழுவினரை வழிநடத்துவதில், பங்கேற்பாளர்கள் இத்தகைய நடைமுறையிலுள்ள முயற்சி ஒன்றில் இணைந்துகொள்வதற்கு அவர்கள் தயார்ப்படுத்தப்படுகிறார்கள் என்பதை பயிற்றுநர் மனதில் கொள்ள வேண்டும். பயிற்சியின் ஓர் அம்சமாக அவர்களுக்கு ஏற்பாடு செய்யப்படும் விஜயங்கள், ஒரு சேவைமிகு வாழ்வின் முக்கிய அம்சமான இத்தகைய முயற்சி ஒன்றில் அவர்கள் ஆண்டுதோறும் பங்குகொள்வதற்கான ஈடுபாட்டிற்கு வழிவகுக்க வேண்டும்.

தெளிவாகவே, ஆன்மீக மற்றும் சமுதாய முக்கியத்துவமிக்க கருப்பொருள்களை ஆராய்வதெனும் வெளிப்படையான நோக்கத்திற்காக இல்லங்களுக்கு விஜயம் செய்யும் நடைமுறையானது, ஒரு சமூகத்தின் கலாச்சாரத்தை வளப்படுத்துகிறது. இல்லத்திலும் பணிமனைகளிலும் பள்ளிகளிலும் சந்தைகளிலும் நடைபெறும் எதேச்சையான பல கலந்துரையாடல்கள், இதனுடன் சமமான முக்கியத்துவம் உடையவையாகும். பின்னர், அவ்வப்போது தினசரி உரையாடல்களில் ஆன்மீகக் கொள்கைகளை அறிமுகப்படுத்துவதானது, கவனத்தைக் கோரும் ஒரு திறமையாகும். அதன் மேம்பாடே இரண்டாவது பாடப்பிரிவின் கவனமையமாகும் மற்றும், இதன்வழி, மூன்றாவது பாடப்பிரிவில் மேற்கொள்ளப்படும் படிப்பாய்விற்கு ஓர் அடித்தலம் அமைக்கப்படுகின்றது.

நமது நண்பர்கள் மற்றும் அண்டையர்களுடன் நடைபெறும் உரையாடல்கள் ஊக்கமளிப்பதாக இருக்க வேண்டுமானால், அவர்களுடனான நமது பரஸ்பர தொடர்புகளில் நாம் மகிழ்ச்சியைக் கொண்டுவர வேண்டும். இதுவே "போதித்தலில் மகிழ்ச்சி" என்னும் முதல் பாடப்பிரிவில் குறித்துரைக்கப்படும் கருப்பொருளாகும். சாரத்தில், ரூஹி பயிற்சிக்கழகத்தினால் பரிந்துரைக்கப்படும் சேவை செயல்கள் அனைத்தும், பஹாவுல்லாவின் திருவெளிப்பாடெனும் சமுத்திரத்தில் நாம் கண்டெடுக்கும் தெய்வீக ஞானமுத்துகளைப் பிறருடன் பகிர்ந்துகொள்வதை உள்ளடக்குகின்றன. முதலாம் பாடப்பிரிவின் படிப்பாய்வு, இந்த முயற்சியில் உள்ளார்ந்துள்ள மகிழ்ச்சியின் விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கம் கொண்டதாகும். பங்கேற்பாளர்கள், கடவுள் திருவாக்கைப் பற்றியும் அதைப் பிறருடன் பகிர்ந்துகொள்வது எத்தகைய ஆசிமிக்கது என்பதைப் பற்றியும் பல பகுதிகளினூடே சிந்தித்திட கோரப்படுகின்றனர். இச்செயலிலிருந்து, நாம் சேவை பாதையில் பயணிக்கும்போது நமது நடையைத் துரிதப்படுத்தும் மகிழ்ச்சி உருவாகின்றது என பாடப்பிரிவு முன்மொழிகின்றது. ஆயினும், இந்த ஆழ்ந்த உண்மையின் மீது நாம் முழு நம்பிக்கை கொண்டாலும், சேவையைத் தனிச்சிறப்புப்படுத்தும் பண்புகள் மற்றும் மனப்போக்குகள் பற்றி சிந்திக்கத் தவறுவோமானால் போதித்தலில் மகிழ்ச்சியை நாம் இழக்கக்கூடும். இவையே வரிசையில் தொடர்ந்துவரும் பல நூல்களின் கலந்துரையாடல் கருப்பொருளாகும். பகுதி 7'இல் பற்றின்மையுடன் ஆரம்பித்து, இங்கு அக்கருப்பொருள்களில் சில மட்டுமே ஆய்வு செய்யப்படுகின்றன. பஹாய் திருவாக்குகளிலிருந்து சில மேற்கோள்கள்—வெளிக் காரணிகளால் சேவையில் களிப்புணர்வு பாதிக்கப்படாமல் இருப்பதற்கு இன்றியமையாத—இந்தப் பண்பின் மீதான பிரதிபலிப்புக்கு அடித்தலம் அமைக்கின்றன. இங்குப் பங்கேற்பாளர்கள் தங்களின் படிப்பாய்விலிருந்து, பற்றின்மை என்பது ஒதுங்கியிருத்தலை அல்லது அக்கறையின்மையை உட்குறிக்கின்றன என்னும் தவறான புரிதலுடன் சென்றிடக்கூடாது என்பது முக்கியமாகும். மேன்மேலும் சிறப்பான விளைவுகளை அடைவதற்கு நாம் முயலும்போது, நமது முயற்சிகளைத் தீவிரப்படுத்துவதற்கும் நமது சேவையின் விளைவாற்றலை அதிகரிப்பதற்கும் நாம் தொடர்ந்து முயல வேண்டும். இதற்குப் பகுதி 8'இல் பரீசீலிக்கப்படும் ஒரு தலைப்பான, 'முயற்சியின் பண்பு' குறித்த ஒருபோதுமான புரிதல் தேவைப்படுகின்றது. நலநோக்கு மற்றும் நன்றியுடைமை என்னும் சேவை பாதைக்கு அடிப்படையான இரண்டு மனப்போக்குகளும் அடுத்த மற்றும் இறுதி பகுதிகளில் சுருக்கமாக விவாதிக்கப்படுகின்றன.

நூலின் இரண்டாவது பாடப்பிரிவான "ஊக்குவிக்கும் உரையாடல்கள்", வாய்க்கும்போது ஆன்மீகக் கொள்கைகளைக் குறிப்பிடுவதன் மூலம் எதேச்சையான உரையாடலின் அளவை உயர்த்துவதற்கான திறமையின் மீது கவனம் செலுத்துகின்றது. அது, பல்வேறு கருப்பொருள்கள் குறித்த பல குறுகிய கூற்றுகளை உள்ளடக்கியுள்ளது. அக்கூற்றுகள் சரியான மேற்கோள்கள் இல்லாவிடினும், அவை அப்துல்-பஹாவின் உரைகள் மற்றும் அவர் பயன்படுத்திய பல சொற்களையும் சொற்றொடர்களையும் உள்ளடக்கியுள்ளன. அனைவரையும் ஈர்க்கவல்ல அவை, எல்லா பின்னணிகளையும் சார்ந்த மக்களின் இலட்சியங்கள் மற்றும் அக்கறைகளின்பால் கவனம் செலுத்துகின்றன. பங்கேற்பாளர்கள் இக்கூற்றுகளைப் படிப்பதன் மூலம், ஆன்மீகக் கொள்கைகளை அப்துல்-பஹா விளக்கிய விதத்திலிருந்து உத்வேகம் பெறுவதுடன், பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு என்னும் சமுத்திரத்தில் வீற்றிருக்கும் முத்துகளைக் கண்டறிய முயலும்போது அவர்பால் திரும்பும்

பழக்கத்தை உருவாக்கிக்கொள்ளவும், அவற்றின் பொருளையும் அவரது திருத்தந்தையார் போதனைகளின் தாத்பரியங்களைப் புரிந்துகொண்டு அவற்றை மற்றவர்களுடன் தாராளமாகப் பகிர்ந்துகொள்வர் எனவும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

பாடப்பிரிவின் குறிக்கோளை அடைவதற்குப் பங்கேற்பாளர்கள் கூற்று ஒவ்வொன்றையும் பலமுறை படிக்கவும் எண்ணங்களின் தொடர்வரிசையை அடையாளங்காணவும் அவற்றை நன்றாக உள்வாங்கி, அதன்மூலம் அவற்றை இயல்பான முறையில் எடுத்துக்கூறவும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இயல்பாகச் சிலர் முதலில் கூற்றுகளை மனனம் செய்து, பின்னர் பாடப்பிரிவில் அவை தோன்றும் விதத்தில் அவற்றை அப்படியே ஒப்புவிப்பர். இது எதிர்ப்பார்க்கப்பட வேண்டிய ஒன்றே. சமயம் பற்றிய அவர்களின் அறிவு ஆழப்பட்டு, அவர்களின் அனுபவம் அதிகரிக்கும்போது, பெரிதும் விரிவான நெடுக்கங்கொண்ட(wider range) உள்ளடக்கமும் வளமான சொற்களஞ்சியமும் அவர்களுக்குக் கிட்டும். இது பிறருடனான அவர்களின் பரஸ்பர செயல்பாடுகளில் பிரதிபலிக்கப்படும். இந்தக் கட்டத்தில், இங்கு நாடப்படுவது இருதன்மையானது என்பதைப் பயிற்றுநர் கண்டுணர வேண்டும்: போதனைகளை விளக்குவதில் ஓரளவு சரளம், அப்துல்-பஹாவின் சிந்தனைகளுடன் இணைவாக இருத்தல்.

ஒவ்வொரு கூற்றின் உள்ளடக்கத்தை வழங்குவதற்குக் குழு உறுப்பினர்கள் கற்றுக்கொண்ட பின், அவர்கள் மற்றொரு நடவடிக்கையை மேற்கொள்கின்றனர்; அதில் அவர்கள் கற்றுக்கொண்ட எண்ணங்களைத் தங்களின் குடும்பங்கள், நண்பர்கள், மற்றும் சகஊழியர்களோடு உடன்தொடர்புபடுத்த அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இதற்காக, உரையாடலின்போது எழுப்பப்படும் சில தலைப்புகள் மற்றும் கேள்விகளைப் பற்றிச் சிந்திக்கும்படியும் அவற்றில் எவை அவ்வெண்ணங்களை ஓர் உரையாடலில் உட்புகுத்துவதற்கான வாய்ப்பை வழங்கும் என்பதைப் பற்றிச் சிந்திக்கும்படியும் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அப்துல்-பஹாவினால் தெளிவாக விளக்கப்பட்ட ஆன்மீகக் கொள்கைகள் எவ்வாறு எல்லா இடங்களிலும் உள்ள மக்கள் அக்கறை செலுத்தும் விஷயங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவருகின்றன என்பதைச் சித்தரிப்பதற்கு ஓரிரண்டு கூற்றுகள் குறிப்பிடப்படுகின்றன. நூலின் படிப்பாய்வு நடப்பிலிருக்கும் போதே, உறுப்பினர் ஒவ்வொருவரும் கூற்றுகளில் ஏதாவது ஒன்றையும் அதில் அடங்கியுள்ள எண்ணங்கள் குறித்தும் உரையாட இரண்டு தனிநபர்களைத் தேர்ந்தெடுக்கப் பயிற்றுநர் உதவிட இயலும்போது, இப்பயிற்சி சிறந்த பலனளிக்கும். இதன்வழியாகப் பங்கேற்பாளர்கள் மீண்டும் ஒன்றுகூடும்போது தாங்கள் ஈடுபட்டுள்ள உரையாடல்களின் இயக்க ஆற்றலை ஒருவர் மற்றவருடன் விவரிப்பதற்கு நேரம் ஒதுக்கப்படக்கூடும்.

பாடப்பிரிவின் ஒவ்வொரு கூற்றுக்கும், பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து மனனம் செய்வதற்காகச் சில உரைப்பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன. முதல் நூலில் சற்று வெளிப்படையாகவே இருக்கும் மனனம் செய்தல் குறித்த ரூஹி பயிற்சிக்கழகத்தின் வலியுறுத்தல், நூல் 2'இல் சற்று அதிகமாகவே காணப்படும். மீண்டும் மீண்டும் திருவாக்குகளிலிருந்து உரைப்பகுதிகளை நினைவிற்குக் கொண்டுவருவதில் பங்கேற்பாளர்கள் பெறும் ஆன்மீக ஊட்டம்

குறித்து அவர்கள் நனவுடன்(conscious) இருப்பர் என கருதப்படுகின்றது. இந்த நூலில், மனித இதயத்தில் திருவாக்குகளின் விளைவுகள் பற்றி அவர்கள் மேலும் பிரதிபலிப்பர். மேலும், இரண்டாவது பாடப்பிரிவைப் போன்றே, மூன்றாவது பாடப்பிரிவில் திருவாக்குகளில் காணப்படும் கொள்கைகள் மற்றும் கருத்துகளை முன்வைத்திட அவர்கள் கற்றுக்கொள்வர், பொருத்தமான நேரத்தில் பத்திகளை நேரடியாகவும் குறிப்பிடுவர். போதனைகளைத் துல்லியமாக விளக்குதல், அவற்றின் தூய வடிவில் அவற்றைப் பிறருக்கு வழங்குதல் ஆகியவை, நாம் சேவை பாதையில் பயணிக்கும்போது உருவாக்கிக்கொள்ள விரும்பும் செயல்திறன்களில் அடங்கும். அப்துல்-பஹாவின் விளக்கங்களைப் படிப்பாய்வு செய்து, அவற்றை அவர் செய்தது போன்றே வெளிப்படுத்திட முயல்வது ஒரு மிகவும் சிறந்த ஆரம்பமாகும் என்பது இரண்டாவது பாடப்பிரிவின் அடித்தலத்தில் வீற்றிருக்கும் எண்ணமாகும்.

மேற்குறிப்பிட்டபடி, “ஆழ்படுத்தப்படுதலுக்கான கருப்பொருள்கள்” எனத் தலைப்பிடப்பட்டுள்ள மூன்றாவது பாடப்பிரிவானது, இந்த நூலில் கவனம் செலுத்தப்படும் சேவை செயலின்பால் திரும்புகிறது: சமூக வாழ்விற்கு முக்கியமாகத் திகழும் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதெனும் வெளிப்படையான நோக்கத்துடன் நண்பர்களையும் அண்டையர்களையும் சென்று காணுதல். பாடப்பிரிவில் மூன்று வகையான உரையாடல்கள் கருத்தில்கொள்ளப்படுகின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட உள்ளடக்கம் பரிந்துரைக்கப்படுகின்றது. முதலாவது வகை, விஜயங்கள் மேற்கொள்வதற்கான ஒரு முறைமையான திட்டமாகும். ஒரு கிராமம் அல்லது ஓர் அண்டைப்புறத்தில் குடியிருப்போருடன் கலந்துரையாடுவதற்கான ஒரு கருப்பொருள்வரிசையைச் சுற்றி அத்திட்டம் வலம் வருகிறது. கோடிட்டுக்காட்டப்பட்டுள்ள உள்ளடக்கம், ஆர்வம் காட்டும் நபர்களிடம் பலவிதமான வழிகளில் பகிர்ந்துகொள்ளப்படலாம் என்றாலும், சமயம் குறித்த குடும்ப உறுப்பினர்களின் அறிவை ஆழப்படுத்திட அவர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குதல் என்னும் கருப்பொருள்களின் ஆரம்ப நோக்கமானது இன்னமும் மிகப் பொருத்தமுடையதாகவே இருந்திடும். ஆதலால், பாடப்பிரிவின் பெரும்பகுதி, இத்தகைய உரையாடல்களுக்கே அர்ப்பணிக்கப்படுகின்றது.

இருப்பினும், கிராமம் மற்றும் நகர அண்டைப்புற நிலையில், குறிப்பாக சிறு சிறு பூகோள அலகுகளில் பயிற்றுனர்கள், இளைய இளைஞர் குழு எனிமேட்டர்கள் மற்றும் குழந்தைகள் வகுப்பு ஆசிரியர்களாகச் செயல்படக்கூடிய தனிநபர் எண்ணிக்கையில் காணப்படும் அதிகரிப்பினால் சமீபத்திய வருடங்களில் இல்லங்களுக்கு விஜயம் செய்தல் என்னும் நடைமுறை புதிய பரிமாணங்களை அடைந்துள்ளது. குறிப்பிடும் வகையில், சமய அறிவை விரிவுபடுத்தும் நோக்கத்திற்காக மட்டும் இந்த நடைமுறை இன்றியமையாததாக தன்னைக் காட்டிக்கொள்ளவில்லை; இளைய இளைஞர்களின் ஆன்மீக சக்தியளிப்பு மற்றும் சிறார்களின் ஆன்மீகக் கல்விக்கான திட்டங்களின் வெற்றிகரமான மடிப்பவிழ்விற்கு இது முக்கியமாக இருக்கின்றது. இதில், அந்த இரண்டு திட்டங்களுக்கும் வடிவம் கொடுக்கும் கருத்தாக்கங்கள் மற்றும் அணுகுமுறைகளைப் பற்றி கலந்துரையாட, அத்திட்டங்களில் பங்கேற்கும் இளையோரின் பெற்றோருக்கு எனிமேட்டர்களாலும் ஆசிரியர்களாலும் வழக்கமான விஜயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தெளிவாகியுள்ளது. பகுதிகள் 14 மற்றும் 15’இல் ஆராயப்படும் இத்தகைய கலந்துரையாடல்கள், இரண்டாவது வகை உரையாடல்களை உள்ளடக்குகின்றன. இந்த இரண்டு பகுதிகளிலும் ஆராயப்படும் உள்ளடக்கம்

விரிவான ஒன்றல்ல; வருங்கால பயிற்சிப் பாடங்களில் இந்த இரண்டு கல்வியல் திட்டங்களுடனும் பங்கேற்பாளர்கள் அதிக பரிச்சயம் பெறுவார்கள். ஆயினும், இத்தகைய உரையாடல்களின் முக்கியத்துவம் குறித்து அவர்கள் கவனமாக இருப்பதும் பெற்றோர்பாலான வருகையின்போது சிறார் வகுப்பு ஆசிரியர்கள் மற்றும் இளைய இளைஞர் குழு எனிமேட்டர்களோடு உடன்செல்வதும் இந்த ஆரம்ப கட்டத்தில் அவர்களுக்கு மிகவும் பயனளிப்பதாக இருக்கும்.

பாடப்பிரிவில் எதிர்ப்பார்க்கப்படும் மூன்றாவது வகையான உரையாடல், ஒரு விசேஷ நோக்கத்தைக் கொண்டுள்ளது. ஆணும் பெண்ணுமாகப் பல இளைஞர்கள் உலகின் மேம்பாட்டுக்குப் பங்களிப்பதற்கான தங்களின் பேராவலை வெளிப்படுத்துவதற்கான மார்க்கங்களைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் சமுதாயத்தை மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படக் காத்துக்கொண்டிருக்கும் ஒரு மகத்தான திறனாற்றல் களஞ்சியத்தைப் பிரதிநிதிக்கின்றனர். அதன் ஒட்டுமொத்த ஆற்றல் மற்றும் அசாதாரண சாத்தியங்களைக் கொண்ட இளமை பருவத்திற்கே உரித்தான வாய்ப்புகள் மற்றும் பொறுப்புகள்மீது பிரதிபலிப்பற்கு அவர்கள் தங்கள் சகாக்களுடன் மேற்கொள்ளக்கூடிய உரையாடல், பெரும்பாலும் சேவையைப் பற்றிய கலந்துரையாடலுக்கு வழிவகுத்து, உலகம் முழுவதுமுள்ள கிராமங்கள் மற்றும் அண்டைப்புறங்களில் நடைபெற்று வரும் பணிகள்மீது அவர்களின் ஆர்வத்தையும் தூண்டிடும். அதற்காக, உருவாகி வரும் தலமுறைகளுக்கு ஆன்மீகக் கல்வி வழங்க, சிறார் வகுப்பு ஆசிரியர்களாகவும் இளைய இளைஞர் குழுக்களின் எனிமேட்டர்களாகவும் பணிபுரிவதற்கான திறனாற்றலைப்பெற பயிற்சிக்கழகப் பாடங்களில் பங்குபெறுவதற்கான அழைப்பை பன்மடங்கானோர் வரவேற்பர். இத்தகைய உரையாடலில் ஆராயப்படக்கூடிய சில யோசனைகளைப் பகுதிகள் 9 மற்றும் 10 வழங்குகின்றன.

நிச்சயமாகவே, தனிநபர்கள் அர்த்தமுள்ள உரையாடல்களை ஆரம்பிக்கவும் நிலைநிறுத்தவும் உதவக்கூடிய செயல்திறன்களைப் பலப்படுத்துவதற்குப் பாடப்பிரிவு அகன்ற கருப்பொருள்களையும் தொடர்புள்ள உள்ளடக்கங்களையும் பரிந்துரைப்பற்கும் அப்பால் கடந்துசெல்ல வேண்டும். எண்ணங்களைத் தெளிவுடன் உரைப்பற்கான திறனுக்கும் மேற்பட்டு, பங்கேற்பாளர்கள் தொடர்புள்ள மனப்போக்குகள் மற்றும் ஆன்மீகப் பண்புகளை உருவாக்கிக் கொள்வது அவசியமாகும். பாடப்பிரிவில் மடிப்பவிழும் பெரும்பாலான விவரங்களுக்கு இவை அடித்தலமாக இருக்கின்றன. ஆனால், கருதப்படும் செயல்திறன்களுக்கான அவற்றின் முக்கியத்துவம் பகுதி 4'இல் வெளிப்படையாக ஆக்கப்பட்டுள்ளது. அதில், ஒரு விஜயத்திற்குத் தயாராக நமது இதயங்களிலும் மனதிலும் எவ்வகையான உணர்வுகள் மற்றும் சிந்தனைகள் நிறைந்திருக்க வேண்டும் என்பதைப் பற்றிப் பங்கேற்பாளர்கள் சிந்திப்பர்; பகுதி 5'இல் பணிவு குறித்த பண்பைப் பற்றி அவர்கள் பிரதிபலிப்பர். இந்தப் பகுதிகளுக்குப்போதுமான கவனம் செலுத்தப்படுவதைப் பயிற்றுநர் உறுதிப்படுத்திக்கொள்ள விரும்புவார். ஏனெனில், நாம் எவ்வளவுதான் அறிவு பெற்றிருந்தாலும் எவ்வளவுதான் நன்றாக யோசனைகளை உரைத்திட முடிந்தாலும் நமது உரையாடல்களின் விளைவுத்திறமானது, நாம் அவற்றுக்குக் கொண்டுவரும் நற்பண்புகள் மற்றும் மனப்பான்மைகளையே சார்ந்திருக்கும்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் நடுமையமாக இருப்பினும், இந்த நூல் வரிசையில் விவரிக்கப்படும் சேவை செயல்கள், அனைத்திற்கும் மேலாக, படிப்பாய்வு மற்றும் செயலின் மூலம் தனிநபர் திறனாற்றலை உயர்த்திடும் நோக்கத்தைக் கொண்ட ஒரு செயல்முறையின் அம்சங்களாகும். அடுத்தடுத்து வரும் நூல்களில் பலக்கியத்தில் (complexity) அதிகரிப்பு காண்கின்ற இந்தச் செயல்கள், ஒன்று மற்றதன் மீது நிர்மாணிக்கின்றது என்பதை ஒவ்வொரு பயிற்றுநரும் உணர வேண்டும். ஒவ்வொரு சேவை செயலையும் விளைவுத்திறத்துடன் மேற்கொள்ள கற்பது, அதற்கடுத்துவரும் செயல்களை மேற்கொள்வதற்கு மிக அவசியமான திறனாற்றலுக்கு மிகுந்த முக்கியத்துவம் உடையதாகும். இந்த நூலில் பரிந்துரைக்கப்பட்டது போன்று, ஓர் இல்லத்திற்கான பல விஜயங்களின்போது தொடர்ந்து நடைபெறும் ஓர் உரையாடலைத் தொடர்ந்து செயல்படுத்துவதானது, நூல் 1'இல் ஊக்குவிக்கப்படும் சொந்தமாகவோ வேறு சிலருடன் சேர்ந்தோ மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கையான, வழிபாட்டுக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்வதைக்காட்டிலும் அதிமான தேவைகளைக் கோரும் ஒன்று என்பது தெளிவு. தொடர்ந்து வரும் கூடுதல் பலக்கியமுடைய சேவை செயல்களை மேற்கொள்வதற்கு, இங்குக் குறித்துரைக்கப்பட்டுள்ள செயல்திறன்களில் பங்கேற்பாளர்கள் மேம்பாடு காண்பது இன்றியமையாதது என்பதை உணர்வது சிரமமல்ல.

நூல் 1'இன் அறிமுக குறிப்புகளில் கூறப்பட்டுள்ளது போன்று, பயிற்சிக்கழகப் பாடங்களின் பங்கேற்பாளர்கள் உலகளாவிய நிலையில் பலவகையான பின்னணிகளிலிருந்து வருகின்றனர். ஆரம்பத்தில், அவர்கள் பஹாய் போதனைகளில் பல்வேறு அளவிலான பரிச்சயத்தைக் கொண்டிருக்கின்றார்கள். இரண்டாம் நூலை ஆரம்பிப்பதற்கு முன்னரே, அவர்கள் ஒவ்வொருவருக்காகவும் பயிற்சிப்பாடங்கள் திறந்துவிடும் சேவை பாதையில் காலடி எடுத்துவைத்திருப்பர். ஆனாலும், சில வேறுபாடுகள் இருக்கவே செய்யும். உதாரணத்திற்கு, இளைஞர்களைப் பொறுத்தவரை, அவர்கள் சிறார்களுக்கும் இளைய இளைஞர்களுக்குமான கல்வியல் திட்டங்களில் பங்கெடுக்காதவரை இந்த நூலில் வழங்கப்பட்டுள்ள பல கூற்றுகளும் கருப்பொருள்களும் அவர்களுக்குப் புதியவையாக இருக்கும்; அதன் படிப்பாய்வு சமயம் குறித்த அவர்களின் சொந்த அறிவைப் பெருக்கிக்கொள்வதற்கான ஒரு வழியாகவும் இருக்கும். ஒவ்வொரு பங்கேற்பாளரும் அர்த்தமுள்ளதும் ஊற்சாகமூட்டுவதுமான உரையாடல்களில் ஈடுபடுவதற்குப் பங்கேற்பாளர்களுக்கு உதவுவது என்னும் பயிற்சியின் பிரதான குறிக்கோள் அடையப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் அதே வேளை, குழுவின் ஒவ்வொரு உறுப்பினரிலும் புரிதலைப் பேணுவதற்குத் தேவையான நெகிழ்வுத்தன்மை, படைப்பாற்றல் ஆகியவற்றை வெளிப்படுத்துவதற்குத் தயாராக இருக்க வேண்டும். மேலும், நூல் பயன்படுத்தப்படும் ஆயிரக்கணக்கான உள்ளூர்களில், நூல்கள் பங்களிக்க முயலும் சமூக நிர்மாணிப்பு செயல்முறை அதே அளவிலான மேம்பாட்டில் இருக்காது. பின்னர், கற்றுக்கொண்டவற்றைச் செயல்படுத்துவதானது, ஒவ்வோர் உள்ளூரிலும் வெவ்வேறு வடிவில் இருந்திடக்கூடும்; இந்தப் பக்கங்களினூடே ஒரு குழுவின் உறுப்பினர்களை வழிநடத்துவதற்கான தேவைகளின்பால் ஒரு பயிற்றுநர் கொண்டிருக்க வேண்டிய அக்கறை, முழு ஈடுபாடு ஆகியவற்றின் குறிப்பீட்டையும் இது வழங்குகின்றது.



# போதித்தலில் மகிழ்ச்சி

## நோக்கம்

போதித்தலில் மகிழ்ச்சியானது கடவுள் திருவாக்கைப் பிறருடன் பகிர்ந்துகொள்வதிலேயே அடங்கியுள்ளது என்பதை மதித்துணர்வது.

## பகுதி 1

*சேவைக்காக முன்னெழுதல்,* ரூஹி பயிற்சிக்கழகத்தினால் வழங்கப்படும் படிப்பையும் செயலையும் இணைக்க முயலும் பயிற்சித் தொடர்வரிசையில் இரண்டாவது நூலாகும். நீங்கள் ஓர் இருதன்மையான நோக்கத்தை நிறைவேற்றிட முயலும்போது, நீங்கள் பிரவேசித்துள்ள சேவை பாதையினூடே தொடர்ந்து மேம்பாடு காண்பதற்கு உதவுவதை அது நோக்கமாகக் கொண்டுள்ளது: உங்களின் சொந்த ஆன்மீக மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியைப் பின்தொடர்வது மற்றும் சமுதாயத்தின் தன்மைமாற்றத்திற்குப் பங்களிப்பது. முதல் பயிற்சியின் உங்கள் பங்கேற்பிலிருந்து, பஹாவுல்லாவின் திருவாக்குகளில் எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது போன்று ஒரு புதிய உலகமுறை குறித்த இலக்கின்பால் நமது பார்வை பதிக்கப்பட்ட, நாம் குறிப்பிடும் அந்தப் பாதையானது, சேவை செயல் வரிசை ஒன்றினால் வரையறுக்கப்படுகின்றது என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர். ஆதலால், “ஒரு சேவை பாதையில் நடப்பது” என நாம் குறிப்பிடும் ஒன்று, நமது சொந்த வாழ்க்கைகளிலும் மானிடத்தின் வாழ்விலும் பஹாவுல்லாவின் போதனைகளைப் பயன்படுத்தும் நமது முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது. அவர் தமது திருவெளிப்பாடு குறித்து இவ்வாறு கூறுகிறார்:

> **“எனது ஊழியர்களே! எனது புனிதமான, தெய்வீகமாக விதிக்கப்பட்ட வெளிப்பாட்டினை ஒரு சமுத்திரத்திற்குச் சமமாகக் கருதலாம்; எண்ணற்ற, மதிப்புமிக்க, இணையற்ற, பிரகாசமிக்க, முத்துக்கள் அதன் ஆழத்தில் மறைந்து கிடக்கின்றன. எழுச்சியுற்று அச் சமுத்திரத்தின் கரையை அடைய கடுமுயற்சி செய்யவேண்டியது தேடுபவர் ஒவ்வொருவரின் கடமையாகும்; அதனால், அவர், தனது தேடுதலின் ஆர்வத்தின் அளவுக்கேற்பவும், அவர் செய்திட்ட முயற்சிக்கேற்பவும், இறைவனின் மாற்றவியலாததும், மறைவாயுள்ளதுமான நிருபங்களில் முன்விதிக்கப்பட்டுள்ள பங்கினைப்பெற்றிடுவார்.”**[1]

இந்த முதல் பாடப்பிரிவில், பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு என்னும் சமுத்திரத்தில் வீற்றிருக்கும் ஞான முத்துகளை நாம் கண்டறிந்து அவற்றைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளும்போது நமது உள்ளங்களில் பெருக்கெடுக்கும் மகிழ்ச்சியின்பால் நமது சிந்தனைகள் திரும்புகின்றன. நூல் 1’இன் உங்கள் படிப்பாய்வுக்கும் அப்பாற்பட்டு பஹாவுல்லாவின் திருவாக்குகளில் காணப்படும் தெய்வீக வழிகாட்டல்கள் என்னும் முத்துகள் எத்தகைய அற்புத அழகினைக் கொண்டுள்ளன என்பதை நீங்கள் ஏற்கனவே கண்டுள்ளீர். சில கூடுதல் எடுபகுதிகள் மீது இப்பொழுது சிந்தனையைச் செலுத்துவோம்:

**“இறைவனின் திருமொழி ஒரு தீபம்; இவ் வார்த்தைகள்தாம் அதன் ஒளி: நீங்கள் ஒரே மரத்தின் கனிகள்; ஒரே கிளையின் இலைகள்.”[2]**

**“எனது பார்வையில் யாவற்றுக்கும் மேலாக அதி நேசிக்கத் தகுந்தது நீதியே; நீ என்னை விரும்பினால் அதனை விட்டு அப்பால் திரும்பிடாதே; அதனைப் புறக்கணிக்கவும் செய்யாதே; அதனால் யான் உன்னில் நம்பிக்கை வைக்கக்கூடும்.”[3]**

**“நீங்கள் வாழும் காலத்தின் தேவைகளில் அக்கறை காட்டி, அதன் உடனடித் தேவைகள், அவசியங்கள், ஆகியவற்றிலேயே உங்கள் கலந்தாலோசனைகளை மையப் படுத்துங்கள்.”[4]**

**“என்றென்றும் தொடர்ந்து முன்னேறிடும் நாகரிகத்தினை மேலும் முன்னேற்றமடையச் செய்யவே மனிதரெல்லாம் படைக்கப்பட்டுள்ளனர்.”[5]**

**“உலகம் கடந்து சென்றுவிடும்; கடவுளின் அன்பே என்றும் நிலையானது”[6]**

**“நீயே எனது தீபம், எனது ஒளி உன்னு ள் இருக்கின்றது. அதிலிருந்து உனது ஒளியைப் பெற்றுக்கொ ள், என்னைத் தவிர வேறெவரையும் தேடாதே. ஏனெனில், யான் உன்னைச் செல்வந்தனாகப் படைத்து எனது சலுகையையும் உன்மீது தாராளமாகப் பொழிந்துள்ளேன்.”[7]**

இக்குறுகிய உரைப்பகுதிகளை நாளடைவில் நீங்கள் மனனம் செய்திட விரும்பலாம்.

## பகுதி 2

இந்த பாடப்பிரிவின் பிரதான கருப்பொருள் மீதான உங்களின் கலந்தாய்வுகளை ஆரம்பித்திட, முந்தைய பகுதியில் குறிப்பிடப்பட்ட முதல் பத்தியை மறுபடியும் படித்து, பின்வரும் அப்பியாசங்களைச் செய்யவும்.

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. _______________, பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு என்னும் சமுத்திரத்தின் _______________ _________________ _______________ நமது கடமையாகும்.

ஆ. பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு என்னும் சமுத்திரத்தின் கரைகளை அடைய நாம் ஒவ்வொருவரும் முயல வேண்டும். அதன்மூலம் இறைவனின் மாற்ற முடியாத மற்றும் மறைந்துள்ள நிருபங்களில் முன்விதிக்கப்பட்டுள்ள _______________ பெற்றுக் கொள்ளலாம்.

இ. பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு என்னும் சமுத்திரத்திலிருந்து நாம் பங்குபெறக்கூடிய பயன்கள் _______________ ___________________ _________________ _______________, ______________________________________________ விகிதாச்சாரத்தில் இருக்கும்.

2. ஒருவர் முனைந்தெழ வேண்டும் என்பதன் பொருள் என்ன? _____________________________
_____________________________________________________________________________________
_____________________________________________________________________________________

3. ஏதாவது ஒன்றை அடைய முயல்வது என்பதன் பொருள் என்ன? __________________________
_____________________________________________________________________________________
_____________________________________________________________________________________

4. தேடுபவர் ஒவ்வொருவரும் எதை அடைய முயல வேண்டும்? ____________________________
_____________________________________________________________________________________
_____________________________________________________________________________________

5. ஒரு பொருள் மற்றொன்றின் விகிதாச்சாரத்தில் இருப்பதன் பொருள் என்ன? _____________
_____________________________________________________________________________________
_____________________________________________________________________________________

6. நாம் எடுக்கும் முயற்சியின் அளவுக்கேற்பவே பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு என்னும் சமுத்திரத்திலிருந்து நாம் பயன்பெற முடியும் என பஹாவுல்லா கூறுகின்றார்.

அ. இந்தப் பயன்களின் பெறுனர்களாக இருப்பதற்கு நாம் எடுக்கக்கூடிய சில முயற்சிகளின் உதாரணங்களை வழங்கவும்:

_____________________________________________________________________________________
_____________________________________________________________________________________
_____________________________________________________________________________________
_____________________________________________________________________________________
_____________________________________________________________________________________

ஆ. இந்தப் பயன்களின் உதாரணங்கள் சிலவற்றை வழங்கவும்:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

## பகுதி 3

பஹாவுல்லாவினுடய திருவெளிப்பாடு ஒரு சமுத்திரம் போன்றதென்றும், அதனுள் விலையுயர்ந்த முத்துகள் மறைந்துகிடக்கின்றன என அறிந்து கொண்டு, நாம் ஒவ்வொருவரும் அதன் பலன்களில் பங்கேற்கவும், மற்றவர்கள் அதன் கரைகளை அடைந்திட உதவவும், முழு முயற்சி எடுக்கின்றோம். ஆனால், இச்சமுத்திரத்தின் கரைகளைச் சென்றடைவதற்கான பயணம் எவ்வளவு நீண்டது என நம்மை நாமே கேட்டுக்கொள்ளலாம். பஹாவுல்லா வலியுறுத்துகின்றார்:

> **“எமது ஊழியர்களே! ஒரே உண்மையான இறைவனே எமக்குச் சாட்சி! இவ்வதிமேன்மையான, ஆழங்காண முடியாத, அலைமோதும் இச்சமுத்திரமானது உங்கள் அருகே, பிரமிக்கத்தக்க அளவு அருகே உள்ளது. பாருங்கள்! அது உங்கள் ஜீவநாடியைக் காட்டிலும் உங்களுக்கு அதிகமான நெருக்கத்தில் உள்ளது. கண் இமைப்பொழுது போன்ற வேகத்துடன் இவ்வழியாத சலுகையை, இறைவனால் வழங்கப்பட்ட இந்த கிருபையை, மாசற்ற இப்பரிசை, சக்திமிகுந்த மற்றும் சொல்லமுடியாத அளவிற்குப் பிரகாசமான இவ்வெகுமதியை நீங்கள் அடைந்து அதில் பங்குக் கொள்ளலாம்.”[8]**

1. “இவ்வதிமேன்மையான, ஆழங்காண முடியா, அலைமோதும் இச்சமுத்திரம்” என்னும் இச்சொற்றொடர் எதைக் குறிக்கின்றது? ____________________________

2. இச்சமுத்திரம் நமக்கு எவ்வளவு அருகில் உள்ளது? ______________________

   ____________________________________________________________

3. எவ்வளவு விரைவில் இச்சமுத்திரத்தை நாம் அடையவியலும்? ________________

   ____________________________________________________________

4. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. இவ்வதிமேன்மையான சமுத்திரமானது நம் அருகே, ________________ __________ அருகே உள்ளது.

ஆ; பஹாவுல்லாவின் திருவெளிப்பாடெனும் சமுத்தியம் நமது ஜீவநாடியைக் காட்டிலும் நமக்கு அதிகமான ________________ உள்ளது.

இ. நாம் விரும்பினால், ________________ ____________ போன்ற வேகத்துடன் நீங்கள் ________________ அவரது திருவெளிப்பாடு என்னும் சமுத்திரத்தில் __________ கொள்ளலாம்.

ஈ. நாம் ________________, கண் இமைப்பொழுது போன்ற வேகத்துடன் நீங்கள் அடைந்து அவரது திருவெளிப்பாடு என்னும் சமுத்திரத்தில் பங்குக் கொள்ளலாம்.

## பகுதி 4

பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு என்னும் சமுத்திரத்தின் கரைகளை அடைந்த நாம், அதன் பொக்கிஷங்களில் இருந்து நாம் தொடர்ச்சியாக, நமது தனிப்பட்ட பயிற்சி, பிரார்த்தனை மற்றும் தியானம், ஆகியவற்றின் மூலமும் அவரது சமயத்திற்கும் மானிடத்திற்கும் சேவை செய்திடும் முயற்சியிலும் கண்டுபிடிக்கும் தெய்வீக வழிகாட்டுதல் என்னும் அதன் முத்துகளை எடுத்து அவற்றை நாம் மற்றவர்களுடன் தாராளமாகவும் எவ்வித நிபந்தனையின்றியும் பகிர்ந்துகொள்கிறோம். இக்கடமை குறித்த புனிதத்தன்மைக்கான நிலையான நினைவூட்டலாக இருக்கும் பின்வரும் பத்தியை மனனம் செய்திட நீங்கள் அவகாசம் எடுத்துக்கொள்ள விரும்பலாம்:

> **“இறைவன் பாதையில் பயணம் செய்வோரே! அவரது அருள் என்னும் மாக்கடலிலிருந்து உங்களின் பங்கை எடுத்துக் கொள்ளுங்கள்; அதன் ஆழத்தில் மறைந்து கிடக்கும் பொருள்களை நீங்கள், உங்களையே இழக்கச் செய்து கொள்ளாதீர். அதன் பொக்கிஷங்களில் பங்குபெற்றோரைச் சார்ந்திருங்கள். இச் சமுத்திரத்தில் இருந்து ஒரே ஒரு பனித்துளியளவு விண்ணுலகங்கள், மண்ணுலகம் ஆகியவையின் மீது விழச்செய்யப்படுமாயின், அதுவே எல்லாம் வல்ல, சகலமும் அறிந்த, சர்வ விவேகியான இறைவனின் வள்ளன்மையைக் கொண்டு அவற்றை மேம்பாடுறச் செய்வதற்குப் போதுமானதாகும். துறவு என்னும் கைகளினால் அதன் உயிரளிக்கும் நீரினை எடுத்துப் படைப்புப் பொருள்கள் அனைத்தின் மீதும் தெளித்திட்டால், அவை மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அனைத்துக் கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டு,**

**இறைவனின் இப்புனிதமானதும் பிரகாசமானதுமான வலுமிக்க அரியாசனத்தை அணுகிடக் கூடும்”[9]**

## பகுதி 5

பயிற்சிக்கழக பாடங்களினூடே நாம் மேம்பாடு கண்டு, அவை கோரும் படிப்பாய்வு, செயல் ஆகியவற்றை மேற்கொள்ளும்போது, சேவைக்கான நமது திறனாற்றல் வளர்ச்சியுறும். அவை, நம் உள்ளங்களில் பெரும் களிப்புணர்வை ஏற்படுத்தி, நமது இருதன்மை நோக்கத்தை நிறைவேற்றுவதில் நமக்கு உதவக்கூடிய, சிறார்களின் ஆன்மீகக் கல்விக்கான வகுப்புகளில் போதித்தல், இளைய இளைஞர்களின் ஆன்மீக சக்தியூட்டல் திட்டத்தில் அவர்களை ஈடுபடுத்தல், மற்றும் பிரதான வரிசையின் நூல்களைப் பயில நண்பர்கள் குழு ஒன்றிற்கு உதவுதல் போன்ற, சேவை செயல்களை நம்மால் மேற்கொண்டிட இயலும். இந்தப் பயணம் முழுவதும், இளையோர் முதியோர் என பிறருடன் நாம் பகிர்ந்துகொள்ளும் கடவுள் திருவாக்கே நமது உத்வேகத்திற்கான நிலையான மூலாதாரமாக இருந்திடும். ஆதலால், அதன் சக்தி, மனித இதயத்தில் அதன் தாக்கம் ஆகியன குறித்து நாம் அடிக்கடி தியானிக்க வேண்டும். பின்வரும் மேற்கோளில், இச்சக்தி குறித்து பஹாவுல்லா உரைக்கின்றார்:

**“இறைவனின் போதனையை ஓர் இளஞ்செடிக்கு ஒப்பிடலாம்; அதன் வேர்கள், மனிதனின் இதயங்களில் பதிக்கப்பட்டுள்ளன. உயிர்நீரான விவேகம், திவ்விய திருமொழிகள் ஆகியவற்றைக் கொண்டு அதன் வளர்ச்சியைப் பேண வேண்டியது உங்கள் கடமையாகும்; அதனால், அதன் வேர்கள் உறுதிப்பெற்று, அதன் கிளைகள் விண்ணுலகளவும், அதற்கு மேலும், உயர்ந்து பரவக் கூடும்.”[10]**

1. இறை திருமொழி எதனுடன் ஒப்பிடப்படலாம்? ________________________________________
   ______________________________________________________________________________

2. இறை திருமொழி என்னும் மரத்தின் வேர்கள் எங்கு ஊன்றப்பட்டுள்ளன? _______________
   ______________________________________________________________________________

3. இம்மரத்தின் வளர்ச்சியை நாம் எவ்வாறு பேண வேண்டும்?____________________________
   ______________________________________________________________________________

4. இந்த மரம் எந்த அளவுக்கு வளர்ச்சியடைய இயலும்? __________________________________
   ______________________________________________________________________________

5. பிறருடன் இறை திருவாக்கைப் பகிர்ந்துகொள்தல் ஏன் மிகவும் முக்கியம் என்பதைச் சில வரிகளில் விளக்கவும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 6

நமது அன்றாட வாழ்வை ஆக்கிரமிக்கும் பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றிச் சிந்திப்போம். நம் உடல்களுக்கு ஊட்டமளிக்கின்றோம். புதிய அறிவைப் பெறுவதற்கும் நமது மனத் திறனாற்றலை விரிவுபடுத்துவதற்கும் நாம் படிப்பாய்வில் ஈடுபடுகின்றோம். நாம் வேலை செய்து சமுதாயத்தின் ஆக்ககரமான உறுப்பினர்களாக வாழ்வதற்கு உதவிடும் திறன்களை உருவாக்கிக்கொள்கின்றோம். நாம் விளையாட்டுகளிலும் பொழுதுபோக்குகளிலும் ஈடுபடுகின்றோம். நமது அறிவாற்றல் மேம்பாட்டிற்கும் லௌகீக நல்வாழ்விற்கும் முக்கியமாகத் திகழும் இவையனைத்தையும் போன்ற எண்ணற்ற நடவடிக்கைகள், நமது நேரத்தின் பெரும்பகுதியை ஆக்கிரமிக்கின்றன. ஒவ்வொரு நாளும் நாம் பிரார்த்தனையில் ஈடுபடும்போது, ஆன்மீக ஆற்றல்கள் நிறைந்த, அந்த விசேஷ தருணங்கள் உள்ளன: நண்பர்களுடனோ தனியாகவோ தெய்வீகப் போதனைகள் குறித்த நமது அறிவை நாம் ஆழப்படுத்திக்கொள்ளும்போது, அல்லது கணக்கிலடங்கா வழிகள் ஏதாவது ஒன்றில், பஹாவுல்லாவின் திருவெளிப்பாடெனும் சமுத்திரத்தில் மறைந்துகிடக்கும் முத்துகளை கண்டறிய நம்மைச் சுற்றியுள்ளோருக்கு நாம் உதவும் தருணங்கள். இவை அளவிடற்கரிய, விலைமதிப்பற்ற தருணங்கள் அல்லவா? இந்தத் தெய்வீக ஆசிகளில் பங்குபெறுவதைவிட பெரும் மகிழ்ச்சி வேறெதுவும் இருக்க முடியுமா?

மானிடத்தின் மேம்பாட்டிற்கு நம்மை அர்ப்பணித்துக்கொள்வதற்கு நம்மை அப்துல்-பஹா எவ்வாறு ஊக்குவித்தார் என்பதை நாம் எப்போதும் நினைவுகூர்ந்திட வேண்டும்.

> **“நாம் அனைவரும் ஒரே தெய்வீக நோக்கத்தில் ஒன்றுபட்டுள்ளோம், நமக்கு எந்த லௌகீக குறிக்கோளும் கிடையாது; உலகம் முழுவதும் கடவுளின் அன்பைப் பரப்புதலே நமது அதி அன்பார்ந்த விருப்பமாகும்!”**[11]

பகுதி 1'லிருந்து நீங்கள் மனனம் செய்துள்ள மேற்கோள்களில் ஒன்றை ஒரு நண்பருடன் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பு உங்களுக்கு ஏற்படுகின்றது என வைத்துக்கொள்வோம். உங்கள் உள்ளத்தில் நீங்கள் உணரும் மகிழ்ச்சி எங்கிருந்து வருகின்றது? இயல்பாகவே, பஹாவுல்லாவின் திருவாக்குகளால் உங்கள் நண்பர் உற்சாகம் பெறுவார் என நீங்கள் எதிர்ப்பார்க்கின்றீர். ஆனால், நீங்கள் எதிர்ப்பார்க்கும் அந்த உற்சாகத்தை உங்கள் நண்பரிடம் காணமுடியவில்லை என்றால் என்ன செய்வது? உங்கள் உள்ளத்தில் ஏற்படும் அந்த மகிழ்ச்சி மறைந்துவிடுமா? ஏன் மறையாது?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

## பகுதி 7

நம் வாழ்வில் நாம் ஈடுபடும் அனைத்திலும், பிறருடன் இறை திருவாக்கைப் பகிர்ந்துகொள்ளும் அத்தருணங்களே விசேஷ ஆசீர்வாதங்களைக் கொண்டவை என்பதை நாம் உணரும்போது, நாம் மிகவும் முக்கியமான ஒரு முடிவிற்கு வருகின்றோம்: அதாவது, சேவையின் மூலம் நாம் அடையும் அந்த மகிழ்ச்சி அந்தச் செயலிலேயே அடங்கியுள்ளது. நிச்சயமாகவே, நாம் மேற்கொள்ளும் சேவை செயல்கள் நல்ல விளைவுகளைக் கொண்டுவரும் என நாம் எதிர்ப்பார்க்கின்றோம். ஆனால், நாம் விளைவுகளின்மீது பற்றுக் கொண்டிருந்தால், பாராட்டு அல்லது குறைவிமர்சனங்களால் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டால், போதித்தலில் மகிழ்ச்சியை நாம் இழந்துவிடுவோம். சேவையாற்றுவதற்குக் கடவுளின் அன்பே நமக்கு உத்வேகமளிக்க வேண்டும்; வெற்றிப்பெற வேண்டும், நன்மையடைய வேண்டும், அல்லது மதிக்கப்பட வேண்டும் என்னும் ஆசையால் அல்ல. இவையனைத்திலிருந்தும் பற்றின்மையுடன் இருப்பதே ஒரு மகிழ்ச்சிமிகு சேவைக்கான முன்தேவையாகும். பின்வரும் மேற்கோள்களைப் படிப்பாய்வு செய்தல் இக்கருப்பொருள்மீது பிரதிபலித்திட உங்களுக்கு உதவும்:

> **"இரு பார்வைகளைக் கொண்டு ள்ள மனிதனே! ஒரு கண்ணை மூடி மற்றதைத் திறப்பாயாக. இவ்வுலகும் அதனு ள் இருக்கும் அனைத்தின் பாலும் ஒன்றை மூடிடு; மற்றதை நேசரின் திருத்தூய்மைமிகு அழகின்பால் திறந்திடு."[12]**

> **"அன்பர்களே! நிச்சயம் அழியக் கூடிய அழகிற்காக நித்திய அழகினைத் துறந்திடாதீர்; புழுதி என்னும் இவ்வநித்திய உலகின்மீது பாசங் கொண்டிடாதீர்."[13]**

**“சொல்லின் மைந்தனே! உனது முகத்தை எனது வதனத்தின்பால் திருப்பி, என்னைத் தவிர மற்றதனைத்தையும் துறப்பாயாக. ஏனெனில் எனது மாட்சிமை நீடிக்கக் கூடியது; எனது அரசும் அழியாதது. நீ என்னையன்றி வேறொன்றைத் தேடுவாயாகில், ஆம், நீ பிரபஞ்சத்தையே நித்தியம் அலசிடினும், உனது தேடுதல் வீணே.”[14]**

**“நட்பைப் பெற்ற அந்நியனே! உனது உள்ளமெனும் மெழுகுவர்த்தி எமது சக்தி என்னும் கையினால் ஏற்றப்பட்டுள்ளது. தன்னலம் மனவெழுச்சி ஆகிய எதிர்காற்றினைக் கொண்டு அதனை அணைத்து விடாதே. உனது நோய் அனைத்தையும் தீர்க்கவல்லது எமது நினைவே, அதனை மறந்து விடாதே. எமது அன்பைச் செல்வமாகக் கொண்டு அதனை உனது கண்ணாகவும் உயிராகவும் பேணுவாயாக.”[15]**

**“பற்றின்மை கதிரவனைப் போன்றது. அது எந்த உள்ளத்தில் பிரகாசிக்கன்றதோ அது தகாவிருப்பு மற்றும் தன்னலம் என்னும் நெருப்பினை அணைத்திடும். எவர் ஒருவரது பார்வை, புரிந்துணர்வு என்னும் ஒளியினால் பிரகாசமடைகின்றதோ அவர் நிச்சயமாக இவ்வுலகிலிருந்தும் அதன் வீண் பெருமைகளிலிருந்தும் பற்றறுத்திடுவார்... உலகமும் அதன் இழிவுகளும் உங்களைத் துக்கப்படுத்த விடாதீர். செல்வங்களால் வீண்பெருமை பெறாத, வறுமையினால் துக்கமடையாத ஒருவர் மகிழ்வெய்துவார்.”[16]**

1. உலகப்பற்றின்றி இருப்பதென்பது ஒரு துறவியைப்போல் வாழ்வதென அர்த்தமா? ________

2. ஒருவர் ஒரே நேரத்தில் உலகப் பற்றற்றவராகவும் லௌகீகப் பொருள்களைப் பெற்றவராகவும் இருப்பது சாத்தியமா? ________________________________________________

3. தன் வாழ்வின் ஒவ்வொரு மணி நேரத்தையும் தன் தொழிலுக்கே அர்ப்பணித்துள்ள ஒருவர் உலக விஷயங்களில் பற்றில்லாதவரா? ______________________________________________

4. தனது தேவைகளை ஈடு செய்திட மட்டுமேபோதுமான அளவு வேலை செய்து அதன் பிறகு ஒன்றும் செய்யாமல் இருப்பவர் உலகப் பற்றில்லாதவரா? ______________________________

5. சேவை களத்தில் அசௌகர்யத்தைச் சகிக்க இயலாமல் இருக்கும் ஒருவர் உலகப்பற்று அற்றவரா?

   ________________________________________________________________________________

6. லௌகீக செல்வங்களன்றி நாம் வேறு பல விஷயங்களிலும் பற்றுடையவர்களாக இருக்கக்கூடும். பின்வருவனவற்றைப் பொறுத்தவரை நீங்கள் எதன்மீது பற்றுக் கொண்டவர்?

– ஒரு சேவை செயலை மேற்கொண்டு அதை எவருமே கண்டுகொள்ளவில்லை என்பதால் அதைக் கைவிட நினைப்பவர். ________________________________________

– தான் பகிர்ந்துகொள்ளும் யோசனையை எவருமே ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால் மனச்சோர்வு அடைபவர். ________________________________________________________

– பிறர் தன்னைப் புறக்கணித்திடுவர் என்பதால் தனது நம்பிக்கையை மறைப்பவர். ______
________________________________________________________________________________

7. பற்றின்மை என்பது ஒதுங்கியிருத்தல் அல்லது அக்கறையின்மையை உட்குறிக்கவில்லை. பின்வருவனவற்றுள் ஒருவர் பற்றின்மையற்றவர் என்பதற்கு எது அறிகுறி?

___ பிறர் மேம்பாடு அடைவதைக் காண்பதில் மகிழ்ச்சியடைதல்
___ சில பிள்ளைகள் தவறாக நடத்துகொள்வதால் ஒரு வகுப்பில் போதிப்பதை நிறுத்துதல்
___ தனது சாதனைகளைப் பற்றி பெருமை பேசுதல்
___ நன்றாகக் கல்வி கற்று தனது மேம்பாட்டில் மனநிறைவடைதல்
___ பொதுநல பணிக்கான திறனாற்றலை மேம்படுத்திட கடுமையாக உழைத்தல்
___ தனது தொழிலில் உன்னதநிலையை அடைவதற்கு முயல்தல்
___ தூய்மையைக் கடைப்பிடித்து இல்லத்தைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருத்தல்
___ தனது உடைமைகளைக் கவனமாக வைத்திருத்தல்
___ பிறர் நல்வாழ்வில் அக்கறை செலுத்துதல்
___ தனது முயற்சிகள் பாராட்டப்படாதபோது மனச்சோர்வு அடைதல்

8. நம் ஒவ்வொருவருக்கும் பற்றின்மை என்பது முக்கியமாதலால், இந்தப் பகுதியில் வரும் அனைத்து மேற்கோள்களையும் நீங்கள் மனனம் செய்யும்படி பரிந்துரைக்கப்படுகின்றது.

## பகுதி 8

மானிடத்திற்கான ஒரு சேவை நிறைந்த, மகிழ்ச்சியான வாழ்வின் அருட்கொடைகளைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்திட தயாராக இருக்க வேண்டும். அத்துடன், இங்கு நமது முயற்சிகளுக்கு ஓரளவு தியாகமும் தேவைப்படலாம். “தியாகம்” என்னும் சொல்லை நமது

அன்றாட வாழ்வில் அடிக்கடி பயன்படுத்துகின்றோம். ஒரு தோழி தனது பயணத்திலிருந்து அதிகாலையில் இல்லம் திரும்புகிறார் என்பதால் அவரை அழைத்துவருவதற்கு நாம் அதிகாலையிலேயே எழுந்திடுவோம். அதற்காக, நாம் சில மணி நேரங்களைத் தியாகம் செய்துள்ளோம் எனக் கூறலாம். நமக்கு மிகவும் வேண்டியவர் நோய்வாய்ப்பட்டுள்ளார்; அவரைக் கவனிப்பதற்காக நமக்கு விருப்பமான பொழுதுபோக்கை சில மணி நேரங்கள் தியாகம் செய்கின்றோம். நம் வாழ்வின் சில சமயங்களில் நாம் கடுமையாக உழைக்க வேண்டிவரும்; அதனால், ஓர் இலக்கை அடைவதற்காக நாம் நமது சௌகர்யத்தை விட்டுக்கொடுக்கின்றோம் என நினைக்கலாம்.

சமயத்திற்குச் சேவை செய்ய வேண்டுமெனும் தீவிர ஆவல் நம் எல்லாருக்கும் உண்டு. நமது நேரத்தை, ஆற்றலை, முடிந்த அளவு நமது லௌகீகச் செல்வங்களின் ஒரு பகுதியைத் தாராளமாக வழங்குகின்றோம். அவ்வாறு செய்கையில், சேவை பாதையில் லௌகீகப் பொருள்களை நாம் தியாகம் செய்கின்றோம்; ஆனால், நாம் ஆன்மீக ரீதியில் வளர்ச்சி பெறும்போது நாம் உண்மையான மகிழ்ச்சியைப் பெறுகின்றோம் என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். இனி வரும் பயிற்சிப்பாடங்களில் தியாகத்தின் இயல்பு குறித்து அதிகமாகப் பிரதிபலிக்கும் வாய்ப்பை நாம் பெறுவோம். ஒரு மரம் உருபெற வேண்டுமானால் விதை தன்னைத் தியாகம் செய்திட வேண்டும் என்பதுபோல், உயர்வான ஒன்றிற்காகத் தாழ்ந்த ஒன்றைக் கைவிடுவதை இது உள்ளடக்கியுள்ளது என்பதை ஆரம்பத்திலிருந்தே உணர்வது முக்கியமாகும். தியாகம் மகிழ்ச்சியைத் தாங்கி வருகின்றது; சீரான முயற்சியை மேற்கொள்ள நாம் இணங்கும்வரை இந்த மகிழ்ச்சி நமதாகா.

பஹாவுல்லா குறிப்பிடுகின்றார்:

> **“அவரை நாம் நாடிட வேண்டுமென்றால் உழைப்பு தேவை; அவருடன் மீண்டும் ஒன்றிணைதல் என்னும் தேனிலிருந்து நாம் பருக வேண்டுமென்றால் ஆர்வம் தேவை; இந்தக் கோப்பையிலுள்ளதைச் சுவைப்போமாயின் நாம் உலகத்தையே துறந்திடுவோம்.”**[17]

அப்துல்-பஹா பின்வருமாறு அறிவுறுத்துகின்றார்:

> **“...இளைப்பாறாதீர், தன்னிறைவமைதியை நாடாதீர், நிலையில்லாத இவ்வுலகின் ஆடம்பரங்களைப் பற்றிக் கொள்ளாதீர், ஒவ்வொரு பற்றிலிருந்தும் உங்களை விடுவித்துக் கொண்டு, இறைவனுடைய இராஜ்யத்தில் முழுமையாக ஸ்தாபிக்கப்பட உள்ளத்தாலும், ஆன்மாவாலும் முயலுங்கள். தெய்வீகப் பொக்கிஷங்களைப்**

**பெற்றுக்கொள்வீராக. நாளுக்கு நாள், மேலும் பிரகாசமடைந்திடுவீராக. ஒருமையெனும் தலைவாயிலை மேன்மேலும் நெருங்கிடுவீராக.”[18]**

நாம் நமது இலக்குகளை அடையவேண்டுமானால், முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென நாம் அனைவரும் நம்புகின்றோம். ஆனால், இந்த எளிமையான நம்பிக்கைக்கு நடைமுறையில் குறிப்பிட்ட சில தாத்பரியங்கள் உண்டென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. முதலாவதாக, தேவைப்படும் ஆற்றல் மற்றும் கையில் உள்ள பணி அல்லது இலக்கினுடைய சிரமத்தின் அளவுக்கும் (அதற்குத்) தேவைப்படும் ஆற்றலின் அளவுக்குமிடையில் ஒரு தொடர்பு உண்டென்பதை நினைவிற்கொள்ள வேண்டும். இதற்கும் குறைவான முயற்சியால் அது சாதிக்கப்படும் என நாம் நினைத்தால் அது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும். ஆனால், முயற்சியின் பரும அளவு மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரே காரணியல்ல. நிலைத்தன்மையும் விடாமுயற்சியும் தேவைப்படுகின்றது; உன்னிப்பான கவனம் தேவைப்படுகின்றது. ஒரு வேலையிலிருந்து மற்றொரு வேலைக்குத் தாவி, பணிகளை அரைகுறையாக விட்டுவிடாமல் அவற்றைப் பூர்த்தி செய்யும் பழக்கம் இன்றியமையாதது. அரைகுறையான மனதுடன் மேற்கொள்ளும் முயற்சிகள் பலன் தராது. சிறார் ஆன்மீகக் கல்விக்கான வாராந்திர வகுப்புகளைக் கற்பனை செய்யுங்கள். ஆசிரியர், ஒவ்வொரு வகுப்பிற்கும் ஆயத்தமாகக் குறிப்பிட்ட சில மணி நேரங்களை அர்ப்பணிக்க வேண்டும், பாட உள்ளடக்கங்களை மாணவர்கள் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவுவதில் அந்த சில மணி நேரம் முழுவதும் முற்றிலும் உன்னிப்பான கவனத்துடன் இருக்க வேண்டும், சிறார்களின் பெற்றோரைக் காலமுறையுடன் சந்திக்க வேண்டும், ஒவ்வொரு வாரமும் அவர்களின் தனிநபர் மேம்பாட்டைக் கவனித்து வரவேண்டும். அவ்வப்போது மட்டுமே தயார் செய்தும் களைப்படையும்போது வகுப்பை முன்னதாகவும் திடீரெனவும் முடிப்பதும் ஒவ்வொரு பிள்ளையைப் பற்றிச் சிந்திப்பதற்குத் தேவையான நேரத்தை ஒதுக்காமலும் அதன் பெற்றோருடன் அப்பிள்ளையின் மேம்பாட்டைப் பற்றிக் கலந்துரையாடாமலும் இருக்கும் ஓர் ஆசிரியரின் வகுப்பினுடைய விதி என்னவாக இருக்கும்? ஆசிரியர், வேற்றூரிலிருந்து வரும் தனது நண்பரைச் சந்திக்க விரும்புவது போன்ற, வேறு வேலைகளின் காரணமாக வகுப்பை இரத்துச் செய்தால் என்னவாகும்?

நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முனைவுக்கும் தேவைப்படும் முயற்சியின் அளவு, தரம் இரண்டின்மீதும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தவதே இச்சில குறிப்புகளின் நோக்கமாகும். இது நாம் ஈடுபடும் சேவை செயல்களுக்கு மட்டும் பொருந்துவன அல்ல; அது நமது மேம்பாட்டிற்கும் பொருந்துவதாகும். இந்தத் தொடர்வரிசையின் முதல் நூலில் நாம் பரசீலித்த ஆன்மீகப் பழக்கங்கள்கூட—அதாவது, காலமுறையுடன் பிரார்த்தித்தல், அன்றாடமும் திருவாக்குகளைப் படித்தல், போதனைகளுடன் நம் வாழ்வை எவ்வாறு இணக்கமாக்குதல், வழிபாட்டுக் கூட்டங்களில் முழுமனதுடன் பங்கேற்றல் ஆகியன—தொடர்ந்தாற் போன்ற முயற்சியைச் சார்ந்துள்ளன. முயற்சியுடன் தொடர்புகொண்ட பல கூற்றுகள் கீழே

வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் எவை உண்மை என்பதைத் தீர்மானித்தல் இவ்விஷயம் குறித்து மேலும் பிரதிபலித்திட உங்களுக்கு உதவிடும்:

___ நீங்கள் புத்திசாலியாக இருப்பின் நீங்கள் கடினமாக வேலை செய்ய வேண்டியதில்லை.

___ ஏன் நீண்ட பாதையிலேயே செல்ல வேண்டும்; எப்போதும் குறுக்குப்பாதையைத் தேடுங்கள்.

___ வலியில்லையேல் இலாபமுமில்லை.

___ பெரிதாகக் கனவு காணுங்கள்; உங்கள் விருப்பங்கள் நனவாகிடும்.

___ பரிசு பெரிதாக இருப்பின் முயற்சியும் அதிகமாக இருக்கும்.

___ முயற்சி அதிகமாக இருப்பின், வெகுமதி இனியதாக இருக்கும்.

___ முதலில் வெற்றிபெறவில்லையெனில், மீண்டும் மீண்டும் முயலவும்.

___ பணிகளை மேற்கொள்வதற்குப் பிறர் இருக்கும்போது நீங்கள் ஏன் சிரமப்பட வேண்டும்?

___ ஒரு விஷயத்திற்கு அதிக முயற்சி தேவைப்பட்டால், அவ்விஷயத்திற்குப் பிராப்தமில்லை

___ அடிக்கடி எடுக்கப்படும் நிலையான சிறிய அடிகள் வெகுதூரம் போகும்.

___ மதிப்புடைய எதுவுமே சுலபத்தில் கிடைக்காது.

___ உன்னதநிலையை அடைவதற்கு முழுமனதுடனான அர்ப்பணம் தேவை.

___ ஆயிரம் மைல்கள் கொண்ட பயணம் ஒரே ஓர் அடியில்தான் ஆரம்பிக்கின்றது.

___ ஒரு காரியத்தில் குறைந்தபட்ச முயற்சி இருந்தால்போதும் என்ற மனப்பான்மை நல்லதல்ல.

___ நடக்கும்வரை காத்திராமல், விஷயங்களை நாமே ஆரம்பிக்க வேண்டும்.

___ வெற்றி என்பது அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது.

___ நமது இருதன்மை நோக்கத்தை மந்திரத்தால் சாதிக்க முடியாது.

___ நம்மை நாம் அன்றாடம் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும்.

நமது ஆன்மீக மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியைச் சாதிக்கும் முயிற்சியிலும் சமுதாயத்தின் தன்மைமாற்றத்திற்குப் பங்களிப்பதிலும் நாம் ஒரு சேவை பாதையில் பயணிக்கின்றோம். இந்த இருதன்மை நோக்கத்தைப் பின்தொடர்வதற்குப் பேரளவு முயற்சி நமது பங்காகக் கோரப்படுகின்றது என்பது தெளிவு. பஹாவுல்லா நமக்குக் கூறுகின்றார்:

> **“ஒப்புவமையற்றப் படைப்போன், மனிதர் அனைவரையும், அவ்வொரே பொருளிலிருந்து படைத்து, அவர்களின் மெய்ம்மையினைத் தமது உயிரினங்களுக்கெல்லாம் மேலாக உயர்த்தியுள்ளார். வெற்றியோ தோல்வியோ, ஆதாயமோ நட்டமோ, யாவுமே மனிதனின் கடுமுயற்சியைப் பொறுத்தே உள்ளன. மேலும் கடுமையாக முயற்சித்தால், அவரது வெற்றி மேலும் அதிகரித்திடும்”**[19]

இன்னமும் அவ்வாறு செய்யாவிடில், மேற்கண்ட உரைப்பகுதிகளை நீங்கள் இப்போது மனனம் செய்திட விரும்பலாம்.

## பகுதி 9

சேவையின் மூலம் மகிழ்வெய்திட வேண்டுமானால், நம்மில் நாம் சில மனப்பான்மைகளைப் பேணிட வேண்டும். உதாரணத்திற்குக் கடவுள் நம்மீது பொழிந்துள்ள சேவை என்னும் அருட்கொடைக்காக நாம் நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும்; கடவுளின் சமயத்திற்குச் சேவை செய்யும்போது நாம் கடவுளுக்கு ஏதோ உதவி செய்கிறோம் எனக் கற்பனை செய்வது நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒன்று. அவநம்பிக்கையைத் தவிர்த்து வாழ்க்கையை உலகம் தொடர்பான நன்னம்பிக்கை கண்ணோட்டத்துடன் அணுகுவதற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும். சேவை பாதையில் எதிர்ப்படும் தடைகள், மேம்பாட்டை அதிகரிப்பதற்கான படிக்கற்களாக மாற்றப்படலாம்; இன்னல்களுக்கு இடையிலும், நம்பிக்கை என்னும் பார்வையுடன் நாம் எதிர்காலத்தை நோக்கலாம். நமது முயற்சிகளை அடையாளப்படுத்த வேண்டிய ஆர்வநம்பிக்கை மற்றும் நன்னம்பிக்கையை அப்துல்-பஹாவின் பின்வரும் சொற்கள் குறிக்கின்றன:

> **“ஆரம்பத்தில், ஒரு விதை எத்துணைச் சிறிதாக இருப்பினும், இறுதியில் அது ஒரு வலிமையான மரமாகிவிடுகிறது. விதையை நீங்கள் கண்ணுறாதீர், மரத்தையும் அதன் மலர்களையும் அதன் இலைகளையும் அதன் கனிகளையும் பாருங்கள்.”** [20]
>
> **“ஆகையால், உண்மையான திருவிவசாயி, தமது கருணை என்னும் கரங்களைக் கொண்டு, ஆண்டவனின் பண்படுத்தப்பட்ட நிலங்களில், இந்தச் சிறிய விதையைப் பயிரிட்டு, அருட்பொழிவுகள், அருட்கொடைகள் என்னும் மழையைப் பொழிந்து, உண்மை பகல் நட்சத்திரத்தின் வெப்பம், ஒளி ஆகியவற்றின் கீழ் இப்போது பேணி வளர்க்கப்படுவதன் இன்றியமையா முக்கியத்துவத்தை அறிவீராக.**
>
> **“ஒரு மரம் வளர்ந்து அபிவிருத்தி அடைவதை நீங்கள் காணும்போது, அதன் விளைவு குறித்து நம்பிக்கையுடன் இருந்திடுக. அது இறுதியில் பூக்கள் பூத்து, கனிகளை ஈன்றிடும். காய்ந்த விறகை அல்லது முதிர்ந்த மரங்களை நீங்கள் கண்டால், கனிகளை ஈன்றிடும் நம்பிக்கை ஏதும் அங்கு இல்லை.”**[22]
>
> **“ஆதலால், கடவுளின் அன்புக்குரியவர்கள், கடும் உழைப்போடு, தங்களின் முயற்சி என்னும் நீரைக் கொண்டு, நம்பிக்கை என்னும் இந்த விருட்சத்தைப் பராமரிக்கவும் ஊட்டமளிக்கவும் பேணிடவும் வேண்டும்.”**[23]

**“கடவுள் வழங்கிடும் ஆசிகளிலிலிருந்து இதயம் அப்பால் திரும்பிடுமாயின் அது மகிழ்ச்சியை எவ்வாறு எதிர்ப்பார்த்திட இயலும்? கடவுள் கருணையின்மீது அதன் ஆர்வநம்பிக்கை, நம்பகம் ஆகியவற்றை வைக்கத் தவறுமாயின், அது வேறெங்கு நிம்மதியைப் பெற முடியும்?”**[24]

மேற்கண்ட பத்திகளின் மீது பிரதிபலித்திட, பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

1. ஆரம்பத்தில் விதை எவ்வளவு சிறியதாக இருக்கின்றது, இருப்பினும் இறுதியில் அது _____ _________________ .

2. ஆதலால், நாம் அந்தச் சிறிய விதையைக் கண்ணுறாமல், இறுதியில் அது _______________ _________________________________________________________________ கண்ணுற வேண்டும்.

3. “ஆகையால், கடவுள் தமது கருணை என்னும் கரங்களைக் கொண்டு, ________________________, _________________________________________________________________, ______________________________________________, ___________________________________________, ________________________________________, _________________________ .

4. ஒரு மரம் வளர்ந்து அபிவிருத்தியடையும்போது நாம் _____________________________________ ________________________________________ வேண்டும்.

5. ஒரு மரம் வளர்ந்து அபிவிருத்தியடையும்போது அது _____________________________________ _______________________ என நாம் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

6. நமது முயற்சி என்னும் நீரைக் கொண்டு நாம் ____________________________________________ வேண்டும்.

7. கடவுள் வழங்கிடும் ஆசிகளிலிருந்து இதயம் அப்பால் திரும்பிடுமாயின் _________________ ________________________________________________________________________________________?

8. இதயம் கடவுளின் கருணை மீது அதன் ஆர்வநம்பிக்கை, நம்பகம் ஆகியவற்றை வைத்திடாவிடில், ________________________________________________________________________________________ ?

இப்பொழுது சற்றுச் சிந்தியுங்கள்: பணிவுமிகு நன்றி கலந்த போக்குடனான நமது மகிழ்ச்சிமிகு ஆர்வநம்பிக்கையுணர்வு பிறர் மகிழ்ச்சிக்கு ஒரு மூலாதாரமாகத் திகழும் என்பதை ஏற்றுக்கொள்கின்றீரா? சமய சேவைக்கு முன்னெழுவதில், மனிதகுலத்தை ஒன்றுதிரட்டும் ஒரு திருநாளான, ஒரு புதிய நாளின் விடியலைக் குறிக்கும் நற்செய்தியை நாம் ஏந்தியுள்ளோம்

என்பதை நாம் மனதில் கொண்டிருக்க வேண்டும். பஹாவுல்லாவின் பின்வரும் சொற்கள் நமது உள்ளங்களில் எதிரொலிக்கட்டுமாக:

> **“செயல்படுவோர், மகிழ்வுறுவர்; புரிந்துகொள்வோர், மகிழ்வுறுவர்; உண்மையைப் பற்றிக்கொண்டு, விண்ணுலகிலுள்ள அனைத்திலிருந்தும் மண்ணுலகிலுள்ள அனைத்திலிருந்தும் பற்றற்று இருக்கும் ஒரு மனிதன் மகிழ்வுறுவான்.”**[25]

## குறிப்பீடுகள்


1. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, CLIII பத்தி 3 பக். 369 (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 1983, 2017 பதிப்பு)
2. மேற்கண்ட., CXXXII, பத்தி. 5, பக். 326
3. *பஹாவுல்லாவின் மறை மொழிகள்* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 2003, 2012 பதிப்பு) CXXXII, பத்தி. 3, பக். 326.
4. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, CVI, பத்தி 1, பக். 241
5. மேற்கண்ட., CIX, பத்தி 2, பக். 243
6. *பெண்கள்*, பஹாவுல்லா: பஹாவுல்லா, அப்துல்-பஹா, ஷோகி எஃபெண்டி மற்றும் உலக நீதிமன்றத்தின் எழுத்தகளிலிருந்து, உலக நீதிமன்றத்தின் ஆராய்ச்சித் துறையினால் தொகுக்கப்பட்டது (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 1986, 1997 பதிப்பு), எண் 53, பக். 26
7. *பஹாவுல்லாவின் மறை மொழிகள்*, எண் 11, பக். 6
8. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, CLIII, பத்தி 5, பக். 370.
9. மேற்கண்ட., CXXIX, பத்தி 1, பக் 316.
10. மேற்கண்ட., XLII, பத்தி 9, பக் 109.
11. அப்துல்-பஹா 19 நவம்பர் 1911'இல் வழங்கிய ஒரு சொற்பொழிவிலிருந்து, "அப்துல்-பஹா 1911'இல் வழங்கிய *பாரீஸ் பேருரைகளில்* பிரசுரிக்கப்பட்டது(வில்மட்: பஹாய் பிரசுரம், 2006, 2016 பதிப்பு), எண் 32.2, பக. 121
12. *பஹாவுல்லாவின் மறை மொழிகள்*, பாரசீகம் எண் 12, பக். 26
13. மேற்கண்ட., பாரசீகம் எண் 14, பக். 26
14. மேற்கண்ட அரபு எண். 15, பக். 7
15. மேற்கண்ட., பாரசீகம் எண். 32, பக். 33
16. பஹாவுல்லா, *பஹாய் உலகம்*: தொகுப்பு 1, 1925-1926 (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 1926, 1980 பதிப்பு), பக். 42
17. *தெய்வீக பேரன்பரின் அழைப்புக்குரல்*: பஹாவுல்லாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட மர்மப் படைப்புகள் (ஹைஃபா: பஹாய் உலக மையம், 2018), எண் 212, பக். 17
18. வட அமெரிக்க பஹாய்களுக்கு அப்துல்-பஹா வெளியிட்ட *தெய்வீகத் திட்டத்திற்கான நிருபங்கள்* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 1993, 2006 பதிப்பு), எண் 13.6, பக். 95-96.
19. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, XXXIV, பத்தி 8, பக். 91
20. *அப்துல்-பஹாவின் வாசகங்களிலிருந்து சில தேர்வுகள்* (வில்மட்: பஹாய் பிரசுரம், 2010, 2015 பதிப்பு), எண் 40.3, பக். 118-19.
21. மேற்கண்ட., எண் 40.3, பக். 119
22. மே 1912'இல் வழங்கப்பட்ட ஓர் உரையிலிருந்து, '*சர்வலோக அமைதிக்கான பிரகடனம்* நூலில் பிரசுரிக்கப்பட்டது: அப்துல்-பஹா ஐக்கிய அமெரிக்கா மற்றும் கெனடாவுக்கு 1912'இல் விஜயம் செய்தபோது வழங்கப்பட்ட உரைகள் (வில்மட்: பஹாய் பிரசுரம், 2012), பத்தி 2, பக். 153.
23. *அப்துல்-பஹாவின் வாசகங்களிலிருந்து சில தேர்வுகள்*, எண் 206.13, பக். 356-57.
24. "அப்துல்-பஹா 21 நவம்பர் 1911'இல் வழங்கிய *பாரீஸ் பேருரைகளில்* பிரசுரிக்கப்பட்டது, எண் 34.8, பக். 133
25. பஹாவுல்லா, *ஓநாயின் மைந்தனுக்கான நிருபம்* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 1988, 2016 பதிப்பு), பக். 139



# எழுச்சியூட்டும் உரையாடல்கள்

## நோக்கம்

ஓர் உரையாடலில் ஆன்மீகக் கோட்பாடுகளை
அறிமுகப்படுத்தும் திறன் பெறுதல்

## பகுதி 1

இந்த நூலின் முதல் பாடப்பிரிவில் பஹாவுல்லாவினால் வெளிப்படுத்தப்பட்ட இறைமொழியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்போது, அளவிடமுடியாத இன்பத்தைப் பெறுவோம் என்பதைப் பற்றி நாம் பேசினோம். சேவை பாதையில் நாம் பயணிக்கும்போது, பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டிலிருந்து நாம் பெறுகின்ற அகப்பார்வைகளை நமது நண்பர்களுடனும் அறிமுகமானோருடனும் கலந்துரையாடுவதற்குப் பன்மடங்கான வாய்ப்புகள் நம்மை வந்தடையும். அர்த்தமுள்ள மற்றும் எழுச்சியூட்டும் உரையாடல்களுக்குப் பங்களித்திட உதவும் செயல்திறன்களே நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டிய முக்கிய செயல்திறன்களாகும். இந்தப் பாடப்பிரிவும் அடுத்து வரும் பாடப்பிரிவும் இதன் தொடர்பில் உங்களுக்கு உதவும் நோக்கம் கொண்டவையாகும். இங்குத் தேவை ஏற்படும்போது ஆன்மீகக் கொள்கைகளைக் குறிப்பிடுவதன் மூலம் உரையாடலின் தரத்தை உயர்த்துவதில் நீங்கள் அக்கறை செலுத்துவீர். உங்கள் கிராமம் அல்லது அண்டைப்புறத்தில் ஒரு துடிப்பான சமூகத்தை உருவாக்கும் முறைமையான முயற்சியின் ஒரு பகுதியாகக் குறிப்பிட்ட சில கருப்பொருள்கள் மீது எவ்வாறு உரையாடல்களைத் தொடங்குவது மற்றும் பாரமரிப்பது என்பது பற்றி அடுத்தப் பாடப்பிரிவில் சிந்திப்பீர்.

தொடர்ந்துவரும் பகுதிகளில், குறிப்பான மேற்கோள்களாக இல்லாவிட்டாலும், அவை அனைத்தும் அப்துல்-பஹாவின் உரைகள் மற்றும் நிருபங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், அவரது சொற்றொடர்கள் பலவற்றையும் உள்ளடக்கியுள்ள பல்வேறு கருப்பொருள்கள் குறித்த பல கூற்றுகளை நாம் பரிசீலிப்போம். அக்கூற்றுகள் ஒவ்வொன்றையும் நீங்கள் பலமுறை படித்தும், அவற்றில் அடங்கியுள்ள எண்ணங்கள் தொடர்வரிசையை அடையாளங்கண்டும், அவற்றை இயல்பாக வெளிப்படுத்த முடியும்வரை உங்கள் குழுவினர் ஒவ்வொருவராக அவற்றை உரக்கக் கூற வேண்டும். இந்த முறையிலான பயிற்சி, பொருத்தமான ஒரு நேரத்தில், சமய போதனைகளின் பயனைப் பெறுவதன் மூலம் ஓர் உரையாடலை மேம்படுத்துவதற்குத் தயாராகிட உதவும்.

நிச்சயமாகவே, இப்பாடப்பிரிவிலும் திருவாக்குகளிலிருந்து மேற்கோள்களைத் தொடர்ந்து மனனம் செய்வீர். ஏனெனில், மனித உள்ளத்தை ஊடுருவும் ஒரு விசேஷ சக்தி திருவாக்குகளுக்கு உண்டு; அவற்றை உங்கள் உரையாடல்களில் நீங்கள் பயன்படுத்தும்போது செவிமடுப்பவரில் அது ஓர் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தும். இருப்பினும், திருவாக்குகளிலிருந்து குறிப்பிடுவதற்கு விவேகம் அவசியமாகும். திருவாக்குகளிலிருந்து நேரடியாகக் குறிப்பிடுவது, சமய போதனைகளை விளக்குவதற்கு ஒருவரின் சொந்த சொற்களைப் பயன்படுத்துவது ஆகியற்றுக்கிடையில் ஒரு சமநிலை அவசியமாகும். இந்தச் சமநிலையை அடைவதற்குத் திருவாக்குளைப் படிப்பாய்வு செய்வதற்கு அதிக நேரம் மற்றும் சக்தியை அர்ப்பணிக்க வேண்டும். அத்திருவாக்குகள், உங்கள் சிந்தனைகள் மற்றும் உணர்வுகளை வடிவமைப்பதற்கு விடவேண்டும்.

## பகுதி 2

நீங்கள் படிப்பாய்வு செய்திட கோரப்படும் முதல் கூற்று, மானிடத்திற்குக் கல்வியாளர் ஒருவரின் அவசியம் பற்றியதாகும்.

வாழ்வைப் பற்றி பரிசீலிக்கும்போது, தாது, காய்கறி, விலங்கு மற்றும் மனித இராஜ்யங்கள், ஒவ்வொன்றுக்கும் கல்வியாளர் ஒருவர் தேவை என்பதை நாம் அவதானிக்கின்றோம். ஒரு தோட்டத்திற்குத் தோட்டக்காரர் ஒருவர் தேவை. ஏராளமான அறுவடையளிக்க, விளைநிலத்திற்கு விவசாயி ஒருவர் தேவை. மனிதன் ஒருவன் வனாந்திரத்தில் தனியே விடப்பட்டால், அவன் மிருகத்தின் வழிகளையே பின்பற்றுவான். அவன் கல்வியறிவு பெற்றிருந்தால், சாதனைகளின் மிக உயர்ந்த உச்சங்களை அடைந்திட முடியும். கல்வியாளர் இல்லையெனில், நாகரிகமே இருந்திருக்காது.

கல்வி மூன்று வகைப்பட்டது; லௌகீக, மானிட மற்றும் ஆன்மீகக் கல்விகள். லௌகீகக் கல்வி உடல் வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்டது; மானிடக் கல்வி நாகரிகம் மற்றும் முன்னேற்றத்துடன் சம்பந்தப்பட்டது; அரசாங்க நிர்வாகம், சமுதாய முறை, வர்த்தகம் மற்றும் தொழில்துறை, கலைகள் மற்றும் அறிவியல், மாபெரும் கண்டுபிடிப்புகள் மற்றும் மகத்தான முனைவுகள் ஆகியவற்றுடன் அது செயல்தொடர்பு கொள்கிறது. ஆன்மீகக் கல்வியானது தெய்வீகப் பூரணத்துவங்கள் அடையப்படுவதை உள்ளடக்கியுள்ளது. இதுவே உண்மையான கல்வி. ஏனெனில், அதன் துணையைக் கொண்டு, மனிதனுடைய உயர்ந்த இயல்பான அவனது ஆன்மீக இயல்பு மேம்பாடடைகிறது.

மனுக்குலம் முன்னேற்றம் காண்பதற்கு, அதற்கு லௌகீக, மனித மற்றும் ஆன்மீக பயிற்சியாளர் என்னும் முறையில் தெளிவான அதிகாரத்தைப் பெற்றுள்ள கல்வியாளர் ஒருவர் தேவை. “நான் பரிபூரண அறிவினைப் பெற்றுள்ளேன். ஆதலால், எனக்கு இத்தகைய கல்வியாளர் ஒருவர் தேவையில்லை” என ஒருவர் கூறுவாராயின், அவர் அப்பட்டமான ஒன்றை மறுக்கிறார். அது, “எனக்குக் கல்வி தேவையில்லை; நான் என்னுடைய சிந்தனை மற்றும் அறிவாற்றலுக்கு ஏற்ப செயல்பட்டு, பூரணத்துவத்தை நானாகவே அடைந்து விடுவேன்” என்று ஒரு குழந்தை கூறுவதைப் போன்றிருக்கும்.

உடலின் ஊட்டம் மற்றும் ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட விஷயங்களை ஏற்பாடு செய்திட உதவவும், அறிவு, ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள் ஆகியவற்றில் முன்னேற்றமடைய ஊக்குவிக்கவும், அதிமுக்கியமாக, அதனுள் ஆவியின் ஜீவனை உள்ளேற்ற உதவிடவும் மனித குலத்திற்கு இத்தகைய பரிபூரண கல்வியாளர் ஒருவரின் தேவை எப்போதுமே இருந்து வந்துள்ளது. சாதாரண மனிதர் எவராலும் இத்தகைய மிகக்கடினமான பணிகளைச்

சாதித்திட முடியாது. இறைவனுடைய அவதாரங்களுக்கு மட்டுமே அவற்றைச் சாதிப்பதற்கான சக்தி உள்ளது. இவர்களே, காலத்திற்குக் காலம் மனிதகுலத்தின் சர்வலோகக் கல்வியாளர்களாக இருந்திட, இறைவனால் அனுப்பப்படுகின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட ஆன்மாக்கள்.

1. உங்கள் குழுவில் இக்கூற்றுகளைப் பலமுறை வாசித்து, அதன் உள்ளடக்கத்தைக் கற்றிட ஒருவர் மற்றவருக்கு உதவிடுங்கள். வழங்கப்பட்டுள்ள எண்ணங்களுடன் தொடர்புள்ள கேள்விகளை ஒருவர் மற்றவரிடம் கேட்க வேண்டும்; அவற்றை இயல்பாகவும் சுலபமாகவும் உரைத்திட பயிற்சி செய்திடுக.

2. அடுத்து, இங்கே தெளிவுடன் உரைப்பதற்காக நீங்கள் கற்றுக்கொண்ட கருத்துகளை எவ்வாறு ஓர் உரையாடலில் அறிமுகப்படுத்தலாம் என்பதை உங்கள் குழுவில் கலந்துரையாடவும். நீங்கள் திடீரென்று கல்வி என்பது மூன்று வகையானது என உங்கள் நண்பர்களிடம் சொல்லப் போவதில்லை. ஆதலால், மேற்கண்ட கருத்துகள் பொருத்தமானவை என்பதை நிரூபிக்கும் பரஸ்பர செயல்பாடுகளின் வகையைப் பற்றி நீங்கள் சிந்திப்பது பயனுள்ளதாக இருக்கும். சமுதாயத்தின் தார்மீக வீழ்ச்சி அல்லது உலகின் முன்னேற்றத்திற்காக எவ்வாறு செயல்படுவது என்பது விவாதத்திற்கு உட்பட்ட விஷயமாக இருக்கக்கூடும். நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அறிமுகமானவர்களுடன் நீங்கள் ஈடுபடும் பல்வகையான உரையாடல்களைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அவர்களின் மனதை ஆக்கிரமிக்கும் பிரச்சினைகளில், இந்தக் கூற்றுரையில் சொல்லப்பட்ட கருத்துகள் குறித்த விவாதத்திற்கு இடங்கொடுக்கும் பிரச்சினைகள் ஏதேனும் உள்ளதா?

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

3. நீங்கள் சற்றுமுன் படித்த தலைப்புகள் சம்பந்தமான உரையாடல்களில் பல கேள்விகள் பெரும்பாலும் எழும். “நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கும் இந்தக் கல்வியாளருள் சிலர் யார்” என்று ஒருவர் கேட்டால் நீங்கள் என்ன பதில் அளிப்பீர்?

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

4. பஹாவுல்லாவின் திருவாசகங்களிலிருந்து மானிடத்திற்கான கல்வியாளர் ஒருவரின் தேவை பற்றிய சில மேற்கோள்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றிப் பிரதிபலித்து, அவற்றில் ஏதாவது ஒன்றை மனனம் செய்ய முயலவும். இம்முறையில், பொருந்தும்போது நீங்கள் திருவாசகங்களிலிருந்து சில பகுதிகளை உங்கள் உரையாடலில் புகுத்திடலாம்.

**“என்றென்றும் தொடர்ந்து முன்னேறிடும் நாகரிகத்தினை மேலும் முன்னேற்றமடையச் செய்யவே மனிதரெல்லாம் படைக்கப்பட்டுள்ளனர்.”[1]**

**“ஒரே மெய்க் கடவுளானவர், அவரது ஒளி மேன்மைப்படுத்தப்படுமாக, தன்னை, மனிதர்களுக்கு வெளிப்படுத்துவதன் நோக்கம், அவர்களின் உள்ளார்ந்த மெய்ம்மை என்னும் சுரங்கத்தில் மறைந்துகிடக்கும் அவ்விரத்தினங்களை வெளிக்கொணர்வதேயாகும்."[2]**

**“மனிதர்பால் தனது தீர்க்கதரிசிகளை அனுப்புவதற்கு இறைவன் இரட்டைக் குறிக்கோளைக் கொண்டுள்ளார். முதலாவது, மனிதரின் குழந்தைகளை அறியாமை என்னும் இருளிலிருந்து விடுவித்து, அவர்களை மெய்யறிவு என்னும் ஒளியின்பால் வழிநடத்துவது. இரண்டாவது, மனித இனத்தின் சமாதானத்தையும் அமைதியையும் உறுதிப்படுத்தி, அதனை நிலைநாட்டுவதற்கான வழிவகைகளைக் கிடைக்கச் செய்வதுமேயாகும்.”[3]**

**“எல்லாக் காலங்களிலும், எல்லாச் சூழ்நிலைகளிலும், அவனுக்கு உற்சாகமளிக்கவும் வழிகாட்டவும் கற்பிக்கவும் ஒருவர் தேவைப்பட்டே இருந்து வந்திருக்கின்றார்.”[4]**

## பகுதி 3

பின்வரும் பத்திகள் கடவுளை அவரது அவதாரங்களின் மூலமாக மட்டுமே அறிந்துகொள்ள முடியும் என்பதை விவரிக்கின்றன; நண்பர்களுடன் நீங்கள் உரையாடும்போது இது உங்களுக்கு உதவியாக இருக்கும்.

எல்லையற்ற பிரபஞ்சத்தை எண்ணிப் பாருங்கள். படைத்தவர் ஒருவரின்றி அது படைக்கப்பட்டிருக்க முடியுமா? அல்லது அவர் படைத்தவற்றைக் கொண்டு அவரது மெய்நிலையைப் புரிந்துகொள்ள முடியுமா? படைப்பு முழுவதையும் நாம் உன்னிப்பாகக் கவனித்தோமென்றால், கீழ் நிலையிலிருக்கும் ஒன்று அதனைக் காட்டிலும் மேலான

நிலையில் இருக்கும் ஒன்றின் சக்தியைப் புரிந்துகொள்ள முடியாது. ஆதலால், கல்லும் மரமும் பரிணாமத்தில் எத்துணை வளர்ச்சி அடைந்திருந்தாலும் பார்வை மற்றும் செவிப்புலன்களின் சக்தியை அவற்றால் புரிந்துகொள்ள இயலாது. மிருகமானது மனிதனின் மெய்நிலையைப் புரிந்துகொள்ளவோ மனித ஆன்மாவின் சக்திகள் குறித்த விழிப்புணர்வைப் பெறவோ முடியாது. ஆதலால், படைப்புகளாகிய நாம் நம்மைப் படைத்தவரின் மெய்நிலையை எவ்வாறு புரிந்துகொள்வது?

மனிதனுடைய புரிதல் இறைவனை எட்டவே முடியாது என்றாலும், அவரைப் பற்றி அறிந்துகொள்வதை இழந்திடாமலிருக்க, காலத்திற்குக் காலம், உலகில் இறைவனுடைய அவதாரமான ஒரு விசேஷ திருவுரு தோன்றுகிறது. ஒரு தெளிவான மெருகேற்றப்பட்ட கண்ணாடியில் பிரகாசிக்கின்ற கதிரவன்போல் இறைவனுக்கே உரிய பூரணத்துவம், அருட்கொடை, பேரொளி ஆகிய அனைத்தும் இறைவனுடைய புனித அவதாரத்தில் காணப்படுகின்றன. இந்தக் கண்ணாடிகள் கதிரவனைப் பிரதிபலிக்கின்றன என்று கூறுவது, கதிரவன், அதன் உச்ச நிலையிலிருந்து கீழே இறங்கி கண்ணாடியுடன் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது என்பது பொருள் அல்ல. அதே போன்று கடவுள் புனிதமெனும் சுவர்க்கத்திலிருந்து இப்படைப்புலகிற்குக் கீழிறங்கி வருவதில்லை. அதன் பொருள் இதுவே: இறைவனுடைய பெயர்கள், பண்புகள் மற்றும் தவறற்ற நிலை ஆகியவற்றைப் பற்றி மனிதகுலம் அறிந்துள்ள, கற்றுக்கொண்ட, மற்றும் புரிந்துகொண்ட அனைத்துமே இறைவனுடைய புனித அவதாரங்களையே குறிக்கும்.

1. இந்த உரைக்கூற்றை உங்கள் குழுவில் பலமுறை படித்து, அதன் உள்ளடக்கங்கள் சம்பந்தமாக நீங்கள் ஒருவருக்கொருவர் கேட்டுக்கொண்ட கேள்விகளுக்குப் பதில் அளித்த பிறகு, உங்கள் சொந்த சொற்களில் அவ்வெண்ணங்களை வெளிப்படுத்திடப் பயிற்சி செய்ய வேண்டும்.

2. நீங்கள் இங்குக் கற்றுக்கொண்ட கருத்துகளை எவ்வாறு இயல்பான முறையில் ஓர் உரையாடலில் ஈடுபடுத்தலாம் என்பதை இப்போது உங்கள் குழுவில் விவாதிக்கவும். உதாரணமாக, கடவுளின் உள்ளமை அல்லது வாழ்க்கையின் நோக்கம் பற்றிய விவாதத்தில் இதை எளிதாகச் செய்திட முடியும். இந்த யோசனைகளைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்கும் உங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் மத்தியில், நடந்த உரையாடலின்போது எழுப்பப்பட்ட வேறு சில தலைப்புகள் மற்றும் கேள்விகள் யாவை?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

3. உங்கள் நண்பர்களுடன் நீங்கள் உரையாடும்போது, நீங்கள் சற்றுமுன் படித்த தலைப்பினை அறிமுகப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கிறது என வைத்துக் கொள்வோம். கீழ்கண்ட கேள்வியை ஒருவர் கேட்டால், நீங்கள் எவ்வாறு பதிலளிப்பீர்: “இறைவனைப்பற்றி அவரது அவதாரங்கள் மூலம் தெரிந்து கொள்ளும் சில விஷயங்கள் எவை?”

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

4. பஹாவுல்லாவின் கீழ்கண்ட திருவாசகங்களை நீங்கள் மனனம் செய்ய விரும்பலாம். அதன் மூலம் இப்பொருள் குறித்து உங்கள் நண்பர்களுடன் உரையாடும்போது, அவற்றை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**“மெய்மைக் கதிரவனிடமிருந்து தோன்றும் இந்த ஒளிமிக்கோர் பற்றிய அறிவின் மூலமும் அவர்களை அடைவதன் மூலமும் அன்றி, அனைத்திற்கும் தோற்றிடமான அவரைப் பற்றிய அறிவும் அவரை அடைதலும் அறவே இயலாது.”**[5]

**“அவதாரமானவர், என்றுமே, இறைவனின் பிரதிநிதியாகவும், பேச்சாளராகவும் இருந்து வந்திருக்கின்றார். உண்மையாகவே, அவர், இறைவனின் அதிசிறந்த பட்டங்களின் பகலூற்றும், அவரது மேன்மைமிகு பண்புகளின் தோற்றிடமும் ஆவார்.”**[6]

**“அதுமட்டுமன்றி, அவர்களுடன் ஏதாவது தொடர்புடையவையோ வருங்காலத்தில் அவர்கள் வெளிப்படுத்தவிருப்பவையோ அவை அனைத்தும் இறைவனால் விதிக்கப்பட்டவையும் அவரது விருப்பம், நோக்கம் ஆகியவற்றின் பிரதிபலிப்புமேயாகும் என்பதை உறுதியாக நம்புவீராக.”**[7]

## பகுதி 4

சமயங்களின் ஒருமை பலரின் ஆர்வத்துக்குரிய ஒரு விஷயமாகும்; பல சூழல்களில் பின்வரும் யோசனைகள் உங்களுக்குப் பயனளிப்பதாக இருக்கும்.

ஒளி எந்த விளக்கிலிருந்து தோன்றினாலும் அதை நேசிப்போராக நாம் இருந்திட வேண்டும். ரோஜா மலர் எந்தத் தோட்டத்திலிருந்து மலர்ந்தாலும் அதை நேசிப்போராக நாம் இருந்திட வேண்டும். உண்மை எந்த மூலாதாரத்திலிருந்து வந்தாலும் அதைத் தேடுவோராக நாம் இருந்திட வேண்டும். ஒரு விளக்கின் மீது கொண்ட பற்று, வேறொரு விளக்கில் தோன்றும் ஒளி மதித்துணரப்படுவதைத் தடுத்திடலாம். உண்மையைத் தேடுவதில், முற்கோள் (preconceived) எண்ணங்களை நம்மிலிருந்து நாம் அகற்றி, நமது தப்பெண்ணங்களைக் கைவிட வேண்டும். நமது கோப்பை தன்னகத்தால் நிறைந்திருந்தால், அதில் ஜீவ நீருக்கு இடமிருக்காது.

சமயமே உலகின் ஒளியாகும். அது நமது கால்களுக்கு வழிகாட்டி, முடிவில்லா மகிழ்ச்சிக்கான கதவுகளைத் திறந்துவிடுகின்றது. மதப்பிடிவாத நம்பிக்கைகளின் கட்டுப்பாட்டிலிருந்தும் கண்மூடித்தனமான பின்பற்றலிலிருந்தும் விடுபட்டு, உலகின் பெரும் சமயங்கள் அனைத்தின் போதனைகளையும் நாம் ஆராய்ந்தோமானால், அவை அனைத்தும் ஒரே அடித்தலத்தில் அமைந்துள்ளன என்பதை உணர்வோம். அவை அனைத்தும் கடவுளின் அறிவை வெளிப்படுத்துகின்றன. அவை மானிட உலகின் மேம்பாட்டை நாடுகின்றன.

நிச்சயமாகவே, காலம் மற்றும் இடத்தின் தேவைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு சமயமும் பரப்பிடும் சமுதாய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கிடையில் வேறுபாடுகள் உள்ளன. ஆனால், அவற்றின் சாராம்சத்தில் அவை அனைத்தும் ஒன்றே. அவை, மெய்நம்பிக்கை, அறிவு, திடநம்பிக்கை, நீதி, பக்தி, உயர்ந்த நோக்கம், நம்பகம், கடவுள் மீது அன்பு, பரோபகாரம், ஆகியவற்றைப் பண்படுத்துகின்றன. அவை தூய்மை, பற்றின்மை, பணிவு, அருளிரக்கம், பொறுமை, மாறாத்தன்மை ஆகியவற்றைப் போதிக்கின்றன. இந்த மனித நற்பண்புகள் ஒவ்வோர் அருளாட்சி காலத்திலும் புதுப்பிக்கப்படுகின்றன.

துரதிர்ஷ்டவசமாகத் தப்பெண்ணங்கள், கண்மூடித்தனமான பின்பற்றல் ஆகியவற்றின் காரணமாக, மதங்களின் அடித்தல ஒருமையைக் காண்பதிலிருந்து பலர் தடுக்கப்படுகின்றனர். உண்மையே மானிடத்திற்கான கடவுளின் வழிகாட்டியாகும்; உண்மைக்குப் பிரிவுகள் கிடையாது; அது ஒன்றே ஆகும். நமது முற்கோள் எண்ணங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, உண்மையை சுதந்திரமாக ஆராய்வோமானால், நமது தேடல் நம்மை ஒற்றுமைக்கு வழிநடத்தும். மதம் நம்மை ஒற்றுமைப்படுத்த வேண்டும்; அது மக்களிடையே அன்பின் பந்தங்களை ஸ்தாபிக்க வேண்டும். அதுவே பகைமைக்கும் சச்சரவுக்கும் காரணம் ஆகுமானால், அஃது இல்லாமல் போவதே விரும்பத்தக்கதாகும்.

1. கடந்த பகுதியைப் போன்றே, இந்த உரைக்கூற்றை உங்கள் குழுவில் நீங்கள் பலமுறை படித்து, அதிலுள்ள யோசனைகளுடன் தொடர்புடைய கேள்விகளை ஒருவர் மற்றவரிடம் கேட்டு, அவற்றை நன்கு வெளிப்படுத்த பயில வேண்டும்.

2. உங்கள் குழுவில் நீங்கள் படித்த கருத்துகளை, உதாரணத்திற்கு மக்கள் மனங்களில் அடிக்கடி தோன்றுகின்ற மதமுரண்பாடுகளை, ஓர் உரையாடலில் எவ்வாறு இடைச்செருகுவது என்பதைப் பற்றிச் சிந்தியுங்கள். ஆனால், பல நண்பர்களிடையே உண்மையை ஆராய்வதன் முக்கியத்துவம், தப்புப் பிரச்சாரங்களினால் சூழ்ச்சியுடன் கையாளப்படாமல் இருப்பது பற்றி நீங்கள் விவாதிக்கலாம். நண்பர்கள், அண்டையர்கள், சகபணியாளர்கள் மற்றும் அறிமுகமானவருடனான உங்கள் அண்மைய உரையாடல்களைப் பற்றி மீண்டும் சிந்தியுங்கள். இந்த யோசனைகள் சார்ந்த கலந்துரையாடலின் மூலமாகப் பயனடையக்கூடிய, அவர்களின் மனதில் தோன்றும் சில பிரச்சினைகள் எவை?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

3. மேற்கண்ட கருத்துகளை, உரையாடல் மூலம் பகிர்ந்துகொண்ட பிறகு, ஒருவர், பின்வரும் கேள்வியை உங்களிடம் கேட்டால், நீங்கள் எவ்வாறு பதிலளிப்பீர்? “எல்லா சமயங்களுக்கும் பொதுவான சில உண்மைகள் எவை?”

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

4. பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து பின்வரும் மேற்கோள்களில் ஒன்று அல்லது இரண்டை நீங்கள் மனனம் செய்திட பரிந்துரைக்கப்படுகின்றது:

**“உலக மக்கள் அனைவரும், அவர்கள் எந்த இனத்தையோ மதத்தையோ சேர்ந்தோராயினும், அவ்வொரே தெய்வீகத் தோற்றுவாயிலிருந்தே தங்களின் அருள்தூண்டலைப் பெற்றிடுகின்றனர் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது”**[8]

**“சகல சமயங்களைப் பின்பற்றுபவர்களுடன் அன்புடனும் தோழமையுடனும் பழகுங்கள்.”[9]**

**“இறைவனின் சமயத்திற்கும் அவரது மதத்திற்கும் உயிரூட்டும் அடிப்படை நோக்கம்: மனித இனத்தின் நன்மையைப் பாதுகாத்து, அதன் ஒற்றுமையை வளர்ச்சியடையச் செய்து, மனிதரிடையே அன்புணர்ச்சியையும், சகோதரத்துவத்தையும் பேணுவதேயாகும்…”[10]**

**“இறைவனின் மதம் அன்புக்கும் ஒற்றுமைக்குமேயாகும்; அதனைப் பகைமைக்கும் கருத்து வேற்றுமைக்கும் காரணமாக்கிடாதீர்.”[11]**

## பகுதி 5

அறிவியலுக்கும் சமயத்திற்கும் இடையிலான உறவே நீங்கள் அடுத்து ஆய்வு செய்திட கோரப்படும் விஷயமாகும்.

சமயம் அறிவியலுடன் ஒத்திருக்க வேண்டும். எஃது உண்மை என்பதை உணர்வதற்கு கடவுள் நமக்குப் பகுத்தறிவை வழங்கியுள்ளார். அறிவியல், சமயம் இரண்டுமே பகுத்தறிவின் தரங்களுக்கு உட்பட்டிருக்க வேண்டும். ஆதலால், அவை ஒன்று மற்றொன்றுடன் இணக்கமாக இருக்க வேண்டும். மானிடம் பறந்திட இயலச் செய்யும் இந்த இரண்டு இறைக்கைகளும் மனித அறிவாற்றல் பெரும் உச்சங்களை அடைவதற்கான இரண்டு இறக்கைகளாகும். ஓர் இறக்கை மட்டும் போதாது.

அறிவியல் கடவுளின் அருட்கொடையாகும். அது பௌதீக உலகின் சட்டங்களைக் கண்டறிந்து, இயற்கை நம்மீது சாற்றியுள்ள கட்டுப்பாடுகளை மீறுவதற்கு நமக்கு உதவுகின்றது. அறிவியல் கருவிகளின் உதவியுடன், கண்களுக்குப் புலப்படாதவற்றைக் காணவும் ஒரு நொடியில் பரந்த தூரங்களினூடே தொடர்புகொள்ளவும் நம்மால் முடிகிறது. அறிவியல், நிகழ்காலத்தையும் கடந்தகாலத்தையும் இணைப்பதுடன், எதிர்காலத்தின் மர்மங்களை ஊடுருவுகின்றது. ஒரு குறிப்பிட்ட மக்களின் முன்னேற்றம் அறிவியல் ரீதியான சாதனைகளையே சார்ந்துள்ளது.

கடவுளின் சமயமே உண்மையை ஊக்குவிக்கின்றது; அஃது அறிவினை ஆதரிப்பதுடன் மனித இனத்தை நாகரிகப்படுத்துகின்றது. சமயமின்றி, அறிவியலானது லௌகீகவாதத்தை ஊக்குவிக்கும் கருவியாகி, இறுதியில் நம்பிக்கையிழப்பிற்கு வழிவகுக்கின்றது. சமயம்

அறிவியலுக்கு எதிராகும்போது, அது மூடநம்பிக்கையாகிவிடும். சமயமும் அறிவியலும் நல்லிணக்கத்துடன் கைகோர்த்துச் செல்லும்போது, தற்போது மானிடத்திற்குத் துன்பத்தை வரவழைக்கும் பெரும்பாலான வெறுப்புணர்வு, கசப்புணர்வு ஆகியன ஒரு முடிவிற்கு வந்துவிடும்.

1. எப்போதும் போன்று, உங்கள் குழுவில் அறிக்கையை ஒவ்வொரு பத்தியாகப் பலமுறை படித்து, ஒருவர் மற்றவரிடம் கேள்விகள் கேட்டு அதை இயல்பாக உரைக்கும் வரை உள்ளடக்கத்தை நன்றாகக் கற்க வேண்டும்.

2. பின்வருமாறு கூறும் ஒருவருக்கு நீங்கள் எவ்வாறு பதிலளிப்பீர்: “மதம் என்பது காலங்கடந்த ஒன்றாகும்; அறிவியல் மானிட பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்துவிடும்.” சமயம் மூடநம்பிக்கையைச் சார்ந்த ஒன்றல்ல. ஆனால், அறிவியலின்றி அது மூடநம்பிக்கையாகிவிடும். மேலும், சமயமின்றி அறிவியலானது லௌகீகத்திலிருந்து பிறக்கும் நம்பிக்கையிழப்பிற்கும் வழிவகுத்திடும் எனத் தெளிவுபடுத்துவது உதவியாக இருக்குமா? இஃது எவ்வாறு நிகழும் என்பதற்கான உதாரணங்களை நீங்கள் வழங்க முடியுமா?

________________________________________

________________________________________

________________________________________

3. பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து பின்வரும் பத்திகளில் ஒன்றை அல்லது இரண்டை மனனம் செய்திட பரிந்துரைக்கப்படுகின்றது:

**“எல்லாம் வல்லவர் மனிதனுக்கு வழங்கியுள்ள இச்சலுகைகளில் முதன்மையானது உணருந்திறம் என்னும் கொடையாகும்.... இக்கொடை மனிதனுக்கு அனைத்துப் பொருள்களின் உள்ளுமுள்ள மெய்ம்மையினை அறிந்துகொள்ளும் ஆற்றலை வழங்குகின்றது; எது சரியோ அதற்கு வழிகாட்டுகின்றது; அவனுக்குப் படைப்பின் இரகசியங்களைக் கண்டுபிடிக்கவும் உதவுகின்றது.”**[12]

**“உலகத்தைப் பாருங்கள்; அதனைக் குறித்து ஆழ்ந்து சிந்தியுங்கள். உலகம், தன்னையே குறித்த திருநூலை உங்கள் கண்களுக்கு முன்னால் திரைவிலக்குகின்றது; அதன்வழி, உருவாக்குபவரும், சகலமும் அறிவிக்கப்பட்டவருமான அவர், அதனுள் பொறித்துள்ளதனை வெளிப்படுத்தியுள்ளார்.”**[13]

**“மனித வாழ்வுக்கு அறிவு சிறகைப் போன்றது; உயர்ந்தெழுவதற்கு ஏணியைப் போன்றது. அதனைப் பெறுவது ஒவ்வொருவருக்கும் கடமையாகின்றது.”**[14]

## பகுதி 6

இன்று, மனிதகுல ஒருமை எல்லாவிடங்களிலும் உள்ள மக்களின் உள்ளங்களில் ஒத்ததிர்வான ஒரு விஷயமாகும்; கீழே வழங்கப்பட்டுள்ள யோசனைகளை உங்களுடன் கலந்துரையாட பலர் விரும்புவர்.

பல நிறங்களிலும் மணங்களிலும், அருகருகே வளர்ந்து கொண்டிருக்கும் மலர்களைக் கொண்ட தோட்டமே, கண்ணுக்கு விருந்தாக இருக்கும். வெவ்வேறு வகைப்பட்டிருந்தபோதும், அவை ஒவ்வொன்றும் அதே மழையினால் புத்துணர்வு பெற்று, அதே சூரியனின் வெப்பத்தைப் பெறுகின்றன. இந்த உண்மை மனிதகுலத்திற்கும் பொருந்தும். அது பல்வேறு இனத்தவரையும், நிறத்தவரையும் கொண்டுள்ளது. ஆனால், அனைவரும் ஒரே இறைவனிடமிருந்து வந்தவர்கள், அனைவரின் தோற்றுவாய் ஒன்றே. இசையில் பல்வேறு சுரங்கள் ஒன்று சேர்ந்து ஒரு பூரணமான சுர இயைபை (a perfect chord) உருவாக்குவதுபோல், மனிதகுடும்பத்திலுள்ள பல்வகைமை அன்பிற்கும் இணக்கத்திற்கும் காரணமாக இருக்க வேண்டும்.

வாழ்க்கைக்கு ஒற்றுமை அவசியம். அன்பே உயிரினங்களுக்கான காரணமாகும். லௌகீக உலகில் அனைத்துமே, ஈர்ப்பு விதியினால் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளன. ஈர்ப்பு விதியானது சில தனிமங்களை ஓர் அழகான மலரின் வடிவத்தில் ஒன்று சேர்க்கிறது. ஆனால், அந்த ஈர்ப்பு நீங்கும்போது மலரானது சிதைந்து மறைந்து போகும். மனிதகுலமும் இது போன்றதே. ஈர்ப்பு, நல்லிணக்கம், ஒற்றுமை ஆகியன மனிதகுலத்தை ஒன்றாக வைத்திருக்கும் சக்திகளாகும்.

உலக மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்துவதற்காக பஹாவுல்லா ஒரு திட்டத்தை அருளியுள்ளார். ஒற்றுமையின் இவ்வட்டத்திற்குள் அவர்களைக் கவர்ந்திட நாம் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். நமதைவிட வேறுபட்ட பல்வேறு இனங்கள், தேசங்கள், சமயங்கள், கருத்துகள் ஆகியவற்றைச் சார்ந்த மக்களை நாம் சந்திக்கும்போது, இந்த வேறுபாடுகள் நமக்கிடையே தடைகளாகிட நாம் அனுமதிக்கக்கூடாது. மனிதகுலமெனும் அழகான தோட்டத்தில் வளரும் பல்வேறு வண்ணங்கள் கொண்ட ரோஜாக்களென நாம் அவர்களைக் கருதி அவர்கள் மத்தியில் இருப்பதற்காக நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும்.

1. முன்னதைப் போன்றே மேற்கண்ட உரைக்கூற்றைப் படித்த பிறகு, உங்களைச் சுற்றிலும் மடிப்பவிழும் பல உரையாடல்கள் பற்றி சிந்திக்கவும். இந்த யோசனைகளை அவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பை வழங்கக்கூடிய, மக்கள் மனதில் தோன்றும் பிரச்சினைகள் சில எவை?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

2. மனிதகுல ஒருமை குறித்த ஓர் உரையாடல், ஒருவரின் சொந்த சமூகத்தில் ஒற்றுமையின் முக்கியத்துவத்தைப் பற்றிய ஒரு கலந்துரையாடலுக்கு வழிவகுக்கும். நாம் ஒவ்வொருவரும் அதற்கு எவ்வகையில் பங்களிக்க இயலும் என்பது பற்றி சில வார்த்தைகள் கூற முடியுமா?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

3. உங்கள் நண்பர்களுடன் நீங்கள் உரையாடும்போது பயன்படுத்துவதற்கு பின்வரும் பத்திகளில் ஒன்றை அல்லது இரண்டை மனனம் செய்திட நீங்கள் விரும்பலாம்:

**“மேன்மைமிக்க உயிருருவானவர் திருவாய் மலர்கின்றார்: அன்புக்குரியவர்களே! ஒற்றுமையெனுந் திருக்கோவில் எழுப்பப்பட்டுவிட்டது; ஒருவர் மற்றவரை அந்நியராகக் கருதாதீர். நீங்கள் ஒரே மரத்தின் கனிகள்; ஒரே கிளையின் இலைகள்.”[15]**

**“உலகம் முழுவதையுமே ஒளிபெறச் செய்யுமளவு பேராற்றல் வாய்ந்தது ஒற்றுமையின் ஒளி”[16]**

**“ஒற்றுமையின்பால் திரும்பி, அதன் ஒளியினை உங்கள்மீது பிரகாசிக்கச் செய்வீராக. ஒன்றிணைந்து, இறைவனின் பொருட்டு, உங்களிடையே பூசல்களுக்குக் காரணமானவற்றை எல்லாம் களைந்தெறியுங்கள்.”[17]**

**“தோழமை, அன்பிரக்கம், ஒற்றுமை ஆகியவற்றை வளர்ச்சியுறச் செய்வதற்கு உறுதியாக முயற்சி செய்வது மனிதனுக்குப் பொருத்தமாகும்.”[18]**

## பகுதி 7

பெரும்பாலான மக்களின் மிகுந்த அக்கறைக்குரிய ஒரு விஷயமான, நீதி என்னும் விஷயம் குறித்த கலந்துரையாடலுக்குப் பங்களித்திட பின்வரும் உரைக்கூற்று உங்களுக்கு உதவிடும்:

தனிப்பட்ட நபர்களின் திறனாற்றல்களில் வேறுபாடென்பது, மனித வாழ்க்கைமுறைக்கு அடிப்படையானது. ஆதலால், எல்லா விஷயங்களிலும் எல்லாருமே சமமாக இருக்க முடியாது. ஆயினும், மனித விவகாரங்கள் அனைத்தும் நீதியெனும் கொள்கையினால் கட்டுப்படுத்தப்பட வேண்டும். நீதி அவசியம் புனிதமாக இருக்க வேண்டும்; ஒவ்வொருவரின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்.

நீதி எல்லைக்கு உட்பட்டதல்ல. அது ஒரு சர்வலோகப் பண்பு. சமுதாயத்தின் எல்லா துறைகளிலும் அது செயல்படவேண்டும். சமுதாயத்தின் ஒவ்வோர் உறுப்பினரும், நாகரிகத்தின் நன்மைகளை அனுபவிக்க வேண்டும். ஏனெனில், ஒவ்வொரு தனிநபரும், மனிதகுலமெனும் உடலின் ஓர் உறுப்பாவார். இவ்வுடலின் ஓர் உறுப்பு, வேதனையடைந்தாலோ துன்பப்பட்டாலோ மற்ற உறுப்புகள் அனைத்தும் தவிர்க்கவியலா வகையில் துன்புறும். ஓர் உறுப்பு மட்டும் பாதிக்கப்பட்டு மற்ற அனைத்தும் சுகமாக இருப்பது எப்படி சாத்தியமாகும்? இன்றைய சமுதாயம் பரஸ்பர இணக்கமும் சீர்மையும் இல்லாமல் இருக்கின்றது; அது நன்கு ஒழுங்கமைக்கப்படவில்லை. ஒட்டுமொத்த மனித குடும்பத்தின் நல்வாழ்வு, மகிழ்ச்சி ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்குச் சட்டங்களும் கொள்கைகளும் தேவை.

நீதியானது வெகுமதி, தண்டனை என்னும் இரண்டு தூண்களின் மீது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. (சமய)நம்பிக்கையற்ற மற்றும் தெய்வீகத் தண்டனை குறித்த பயமில்லாதோரினால் நிர்வகிக்கப்படும் அரசாங்கங்கள் அநீதியான சட்டங்களையே இயற்றும். ஒடுக்குமுறை தவிர்க்கப்பட வேண்டுமானால் சன்மானத்திற்கான ஆர்வநம்பிக்கை, தண்டனைக்கான அச்சம் இரண்டும் தேவை. சட்டமியற்றுவோரும் சட்டங்களை நிர்வகிப்போரும் தங்கள் தீர்மானங்களின் ஆன்மீக விளைவுகள் குறித்து தெரிந்திருக்க வேண்டும். தங்கள் செயல்களின் பின்விளைவுகள் இவ்வுலகத்திற்கு அப்பாலும் தங்களைப் பின்தொடர்ந்து வருமென நம்பும், தெய்வீக நீதி என்னும் துலாபாரத்தில் தங்களின் நியாயத்தீர்ப்புகள் எடைபோடப்படும் என்று அறிந்துமுள்ள ஆட்சியாளர் நிச்சயமாகவே கொடுங்கோன்மை, ஒடுக்குமுறை ஆகியவற்றைத் தவிர்த்திடுவர்.

1. மேற்கண்ட யோசனைகளை இயல்பான முறையில் வெளிப்படுத்திட நீங்கள் கற்றுக்கொண்ட பிறகு, இந்த உரைக்கூற்று வழங்கக்கூடிய அகப்பார்வைகளினால் உரையாடல்களுக்கான உரிப்பொருள்களில் எது பயன்பெறும் என்பதைப் பற்றி சிந்தியுங்கள்.

___________________________________________________________________
___________________________________________________________________
___________________________________________________________________
___________________________________________________________________

2. நீதிக்கு முடிவே இல்லை என நம்பும் ஒருவருக்கு நீங்கள் என்ன பதிலளிப்பீர்?

___________________________________________________________________
___________________________________________________________________
___________________________________________________________________

3. நீதி பற்றிய பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில மேற்கோள்கள் கீழே உள்ளன. அவற்றை மனனம் செய்திட நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

**“மனிதரின் அறிவொளி நீதியே. அதனைக் கொடுமை, கொடுங்கோன்மை ஆகிய எதிர்மாறான காற்றைக் கொண்டு அணைத்து விடாதீர். மனிதரிடையே ஒற்றுமையின் தோற்றமே நீதியின் குறிக்கோள்.”**[19]

**“நீதியின் பிரகாசத்திற்கு வேறு எந்த பிரகாசமும் ஒப்பாகாது. உலகின் ஒழுங்கமைப்பும் மனிதகுலத்தின் சாந்தியும் அதனையே சார்ந்துள்ளது.”**[20]

**“உலகினைப் பயிற்றுவிப்பது நீதியே; அதனை நிலைத்து நிற்கச்செய்பவை வெகுமதி, தண்டனை, ஆகிய இரண்டு தூண்களாகும். இவ்விரு தூண்கள்தாம் உலகிற்கு உயிரளிக்கும் மூல ஊற்றுகளாகும்.”**[21]

## பகுதி 8

கடந்துசெல்லும் ஒவ்வொரு நாளிலும் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இவ்விஷயம் பற்றியும் அதனுடன்

தொடர்புகொண்டவை குறித்தும் உங்கள் நண்பர்களுடன் உரையாடுவதற்குப் பின்வரும் அறிக்கை உதவிடும்.

> இன்று, பரஸ்பரத்தன்மையும் நல்லிணக்கமான உறவுகளும் இல்லாமையினால், சமுதாயத்தின் சில உறுப்பினர்கள் மனநிறைவோடும், பெரும் சுகம் மற்றும் வசதியோடும் வாழும் அதே நேரம், பிறர் உணவும் இருப்பிடமும் இன்றி வாடுகின்றனர். சிலர் மிகப்பெரும் செல்வந்தர்களாக இருக்கின்றனர், மற்றவர் மிகுந்த ஏழ்மையில் வாழ்கின்றனர்.
>
> சிலர் அளவுக்கு மீறிய செல்வத்தைக் குவித்திடுவதையும், மற்றவர் வறியோராக வாழ்வதையும் தடுத்திடும் வகையில் சமுதாய சட்டங்கள் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். அதற்காக அனைவரும் சமநிலையில் இருக்க வேண்டும் என்பது அர்த்தமல்ல. ஏனெனில், படைப்புக்கு அளவு, திறனாற்றல் ஆகியவற்றில் வேறுபாடுகள் உள்ளார்ந்தவை. ஆனால், வெறுக்கத்தக்க அத்துமீறிய செல்வமும் நம்பிக்கையிழக்கச் செய்யும் வறுமையும் ஒழிக்கப்பட முடியும். முதலாளி வர்க்கம் பெரும் செல்வத்தைப் பெற்றிருப்பது சரியென்றால், அதே முறையில் உழைப்பாளிகளும் போதுமான அளவு வாழ்வாதாரம் பெற்றிருப்பதும் நியாயமே. நாம் தீவிர வறுமையைக் கண்டால், எங்காவது ஓரிடத்தில் கொடுங்கோண்மையைக் காண்போம்.
>
> தெய்வீக நீதி மனித வாழ்வில் வெளிப்பாடு காணவேண்டும் என்பதே இவ்விஷயத்தின் சாரமாகும். ஒட்டுமொத்த பொருளாதார சூழ்நிலையின் அடிப்படைகள் இயல்பில் தெய்வீகமானவை; அவை உள்ளம் மற்றும் ஆவியுலகுடன் தொடர்புடையவை. செல்வந்தர்கள் தங்களின் பெரும் செல்வத்திலிருந்து வழங்கிட வேண்டும்; அவர்கள் இளகிய மனதுடன், கருணையார்ந்த மதிநுட்பத்தைப் பேண வேண்டும். உள்ளங்கள் பிணைக்கப்பட வேண்டும், அன்பு ஆதிக்கம் செலுத்த வேண்டும் அதனால், செல்வந்தர்கள் நிரந்தர பொருளாதார சீரமைப்பை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மிகவும் மனமுவந்து மேற்கொள்வர். சமூகத்தில் கடும் ஏழ்மை நிலவும்போது தாங்கள் மட்டும் பெரும் செல்வந்தர்களாக இருப்பது நியாயமோ சட்டப்படியானதோ அல்லவென அவர்களாகவே கட்டாயம் உணரவேண்டும். இதன் வழியில், தாங்கள் சௌகர்யத்துடன் வாழ்வதற்குப் போதுமானவற்றை வைத்துக்கொண்டு தங்கள் செல்வத்தில் மீதமுள்ளவற்றை மனமுவந்து வழங்கிடுவர்.

1. எப்போதும் போன்று அறிக்கையை உங்கள் குழுவில் ஆய்வு செய்யவும். வேலை, ஊதியம், இருப்பிடம் என, மக்களின் மனதில் பல பிரச்சினைகள் எழக்கூடும். இவ்வுரைக்கூற்றில் உள்ள யோசனைகள் குறித்த கலுந்துரையாடல் மூலம் பயன்பெறக்கூடிய தலைப்புகள் பற்றி சிந்திக்க முடியுமா?

2. மேற்கண்ட யோசனைகளை நீங்கள் குறிப்பிடக் கேட்ட ஒருவர் பின்வருமாறு கேள்வி கேட்டால் நீங்கள் என்ன பதிலளிப்பீர்? “பணக்காரர்கள் தீவிர வரிச் சட்டங்களைப் புரிந்துகொண்டு அதற்கு ஆதரவளித்து, அவர்கள் உண்மையில் கொடுக்க வேண்டியதை கொடுப்பர் என நீங்கள் கூறுகிறீர்களா? இஃது எப்படி சாத்தியமாகுமென நினைக்கிறீர்கள்?”

3. பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து பின்வரும் மேற்கோள்களில் ஒன்று அல்லது இரண்டை மனனம் செய்திட பரிந்துரைக்கப்படுகின்றது:

**“...நீங்கள் நேர்த்தியான, வியத்தகு கனிகளைக் கொடுக்க வேண்டும்; அதனால், நீங்களும் மற்றவர்களும் அதிலிருந்து பலன் பெறக் கூடும். எனவே, அனைவரும் கைத்தொழில்களிலும், வாழ்க்கைத் தொழில்களிலும் ஈடுபடவேண்டியது கடமையாகின்றது; அறிவாற்றலுடைய மனிதர்களே! அதனில்தான் செல்வத்தின் இரகசியம் அடங்கியிருக்கின்றது!”[22]**

**“உனது பார்வை கருணையின் திசையை நோக்கித் திருப்பப்பட்டிருக்குமாயின், உனக்கு நன்மையளிக்கக் கூடியவற்றைத் துறந்து, மனித இனத்திற்கு நன்மையளிக்கக் கூடியதனைப் பற்றிக் கொள்வாய். உனது பார்வை நீதியின்பால் திரும்பிடுமாயின், நீ உனக்காகத் தேர்ந்தெடுப்பதனையே உனது அண்டையருக்காகவும் தேர்ந்தெடுப்பாய்.”[23]**

**“தனது சகோதரனைத் தன்னைவிட மேலாகக் கருதிடும் ஒருவர் ஆசி பெற்றவராவார்.”[24]**

**“எந்த நற்செயலும் மறைந்து போனதில்லை, இனி என்றும் மறைந்து போகாது; ஏனெனில், பரோபகார செயல்களானவை அவற்றைச் செய்வோருக்குப் பயனளித்திட, கடவுளிடம் பாதுகாப்பாக வைத்திருக்கப்படும் பொங்கிஷங்களாகும்”[25]**

**“...இறைவனுக்கு அஞ்சி, மித நிலையின் எல்லைகளைக் கடந்து, வீண் செலவு செய்திடுவோரில் சேர்ந்திடாதீர்.”[26]**

## பகுதி 9

தப்பெண்ணம் என்னும் விஷயம் குறித்த கலந்துரையாடல்களில் நீங்கள் பங்கேற்கும்போது அதற்கு உதவக்கூடிய சில யோசனைகள் கீழே உள்ளன.

தப்பெண்ணமானது, மதம், இனம், பாலினம், இனக்கூறு, பொருளாதாரம் போன்ற அதன் எல்லா வடிவங்களிலும் மானிடம் என்னும் கட்டமைப்பை அழிப்பதுடன் அது கடவுளின் கட்டளைகளுக்கும் எதிரானது. ஆயிரக்கணக்கான வருடங்களாக, மானிடமானது தப்பெண்ணங்களின் ஏதாவது ஒன்றின் தாக்கத்தினால் போரினாலும் இரத்தக்களரியாலும் துன்பப்பட்டு வந்துள்ளது.

அன்பு, ஒற்றுமை ஆகியவற்றை உருவாக்குதல் என்னும் ஒரே நோக்கத்திற்காகவே கடவுள் தமது அவதாரங்களை அனுப்பிவந்துள்ளார். தெய்வீக நூல்கள் அனைத்துமே அன்பின் எழுத்து வடிவமாகும். அவை பிரிவினைக்கான காரணமென காணப்பட்டால், அவை பயனற்றவை ஆகிவிடுகின்றன. ஆதலால், மத தப்பெண்ணமானது குறிப்பாகக் கடவுளின் விருப்பத்திற்கும் கட்டளைக்கும் எதிரானதாகும்.

தேசிய தப்பெண்ணம் முற்றிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும். உலகம் ஒரே நிலம், ஒரே நாடு. தேசங்களைப் பிரிக்கும் கோடுகளும் எல்லைகளும் கற்பனையானவை; அவை கடவுளால் உருவாக்கப்படவில்லை. இரண்டு நாடுகளுக்கிடையில் ஓடும் ஓர் ஆறு அந்த நாடுகளின் எல்லைக்கோடென மக்கள் பிரகடனம் செய்கின்றனர், இருபுறத்திற்கும் பெயரிடுகின்றனர்; ஆனால், அந்த ஆறு இருசாராருக்கும் உருவாக்கப்பட்டதாகும்; அது எல்லாருக்கும் உரிய ஓர் இரத்தநாளம் போன்றதாகும். ஆதலால், வாழ்வின் அருட்கொடைகளைப் போர் மற்றும் அழிவுக்கான காரணமாக்கிட மக்களைத் தூண்டுவது கற்பனையும் அறியாமையும் அல்லவா?

இனரீதியான தப்பெண்ணம் என்பது மூடநம்பிக்கையன்றி வேறில்லை. ஒரு மனிதனுடைய தோலின் நிறமானது, அவனது முன்னோர்கள் பருவநிலை, சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்குக் காலப்போக்கில் இயற்கையான முறையில் தங்களைப் பொருந்தச் செய்துகொண்டதன் விளைவாகும். பண்பே மனிதகுலத்திற்கான உண்மையான அளவுகோலாகும். உன்னதநிலை இனம் மற்றும் நிறத்தைப் பொறுத்ததல்ல. மெய்நம்பிக்கை, இதயத்தின்

தூய்மை, நற்செயல்கள், மெச்சத்தக்க உரை ஆகியவையே கடவுளின் திருவாயிலில் ஏற்புடையவை.

பெண்கள் நீண்டகாலமாகவே, ஆண்களுக்குக் கீழ்படிந்தவர்களாகவும் தவறிழைக்கப்பட்டவர்களாகவும் நடத்தப்பட்டு வந்துள்ளனர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான வேறுபாடு பௌதீக உலகின் ஒரு தேவையாகும்; ஆவியுலகில் அவர்கள் சமமானவர்களே. கடவுளின் கணிப்பில் ஆண்கள், பெண்கள் என வேறுபாடு ஏதும் கிடையாது; ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் அவரால் மதிநுட்பமும் புலனுணர்வும் வழங்கப்பட்டுள்ளது. எல்லாருக்குமே நற்குணங்கள் பெறுவதற்கான திறனாற்றல் உள்ளது. ஒரு மனிதனின் பாலினம் பாகுபாட்டை செயல்படுத்துவதற்கான அடிப்படையை வழங்கிடும் சூழ்நிலை எதுவுமே இன்று கிடையாது.

பழைய ஏற்பாட்டின் சொற்களின்படி, “எமது சாயலில் மனிதனை எமது பிம்பமாகப் படைப்போம்,” என கடவுள் கூறியுள்ளார். தெளிவாகவே, இது பெண்களுக்கும் பொருந்துவதாகும். மனிதன் கடவுளின் பிம்பமாகப் படைக்கப்பட்டுள்ளான்; அதாவது, தெய்வீக நற்குணங்கள் மனித மெய்ம்மையில் பிரதிபலிக்கப்பட்டு, வெளிப்படுத்தப்படுகின்றன. இஃது ஒட்டுமொத்த மானிடத்திற்கும் பொருந்தும். ஒரே நிறம், ஒரே இனம் அல்லது ஒரே தேசியத்தன்மை கொண்டோர் மட்டுமே கடவுளின் சாயலில் படைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறுவது அறவே ஏற்றுக்கொள்ளப்பட முடியா ஒன்றாகும். செல்வந்தர்கள் மட்டுமே அவரது பிம்பாகப் படைக்கப்பட்டார்கள் எனக் கூறுவது அல்லது சமூகத்தில் ஓர் உயர் ஸ்தானமே கடவுளின் அண்மையை அடைவதற்கான ஓர் அளவுகோல் என வலியுறுத்துவது எத்துணைப் பொருத்தமற்றது. தப்பெண்ணங்களைக் கைவிடுவதன் மூலமும், (ஆன்மீக)இராஜ்யத்தின் நெறிமுறைகளை அடைவதன் மூலமுமன்றி மனிதகுலம் ஒளிபெற முடியாது.

1. கடந்த பகுதிக்கு செய்தது போன்றே இந்த அறிக்கையைப் படிப்பாய்வு செய்து, உரையாடல்களில் தப்பெண்ணங்களை அகற்றுவது குறித்து உங்களின் நண்பர்களும் அண்டையர்களும் எழுப்பிய சில சவால்கள் குறித்து சிந்திக்கவும்.

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

2. நீங்கள் மேற்கண்ட யோசனைகளைப் பகிர்ந்துகொண்டிருப்பதை செவிமடுக்கும் ஒருவர் பின்வருமாறு உங்களைக் கேட்டால் நீங்கள் என்ன பதிலளிப்பீர்? “நாம் தப்பெண்ணம் உடையவராகவும் ஆனால் அதை அறியாமலும் இருந்திட முடியுமா?”

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

3. இந்த யோசனைகள் பற்றி வாய்ப்பேற்படும்போது உங்கள் உரையாடல்களில், பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து பின்வரும் மேற்கோள்களை நீங்கள் சேர்த்துக்கொள்ளக்கூடும்.

**“உலகமே ஒரு நாடு, மனித இனமே அதன் பிரஜைகள்.”[27]**

**“உலகின் மரக்கன்றுகள் அனைத்தும் ஒரே மரத்திலிருந்தும், நீர்த்துளிகள் அனைத்தும் ஒரே சமுத்திரத்திலிருந்தும் தோன்றியுள்ளன; படைப்பினங்கள் அனைத்தும் ஒரே திருவுருவிற்குக் கடன்பட்டுள்ளன.”[28]**

**“யாரொருவன் இன்று, மனித இனம் முழுவதன் சேவைக்காகத் தன்னை அர்ப்பணிக்கின்றானோ, அவனே, ஓர் உண்மையான மனிதன்.”[29]**

**“நல்லொழுக்கம் என்னும் ஒளி சூரியனின் ஒளியையும் அதன் பிரகாசத்தையும் விஞ்சிடுகின்றது.”[30]**

**“மனிதனின் தனிச்சிறப்பு, அவனது ஒழுக்கப்பண்புள்ள நடத்தையிலும் உண்மையான உய்த்தறியுந் திறனிலுந்தான் இருக்கின்றதே அல்லாது, ஆபரணங்களிலோ, ஆஸ்தியிலோ அல்ல.”[31]**

**“எல்லாச் சூழ்நிலைகளிலும் மூட நம்பிக்கை என்னும் விக்கிரகங்களை உடைத்தெறியவும் மனிதரின் கற்பனைகள் என்னும் திரைகளைக் கிழித்தெறியவும் இறைவன் கருணை கூர்ந்து உங்களுக்கு உதவிடுவாராக.”[32]**

**“வீண் வாதத்தில் ஈடுபடுபவனும் தனது சகோதரனுக்கு மேல் தன்னை உயர்த்திக் கொள்ள முயற்சிப்பவனும் மனிதர்களிடையே மிகவும் அசட்டையானவன்.”[33]**

## பகுதி 10

நண்பர்களுடன் உரையாடும்போது, ஆண் பெண் சமத்துவம் பற்றிய பின்வரும் உரைக்கூற்றில் அடங்கியுள்ள யோசனைகளை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்:

> சூரியன், தனது ஒளி மற்றும் வெப்பத்தின் மூலம், உலகிலுள்ள அனைத்தின் மெய்ம்மையினையும் வெளிப்படுத்துகின்றது. சூரிய சக்தியின் விளைவாக மரத்தில் மறைந்திருக்கும் கனி அம்மரத்தின் கிளைகளில் வெளிப்படுகின்றது. அதே போன்று, ஆன்மீக வானில் முழு பேரொளியுடன் பிரகாசிக்கும் உண்மை என்னும் சூரியன் கடந்தகாலத்தில் வெளிப்படாத மெய்ம்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவருகின்றது. அதனால்தான், இப்போது ஆண் பெண் சமத்துவம் குறித்த கொள்கை முழுமையாக கண்டுணரப்பட்டு, தற்போது அது ஒரு நிரூபிக்கப்பட்ட உண்மையாகி விட்டது.
>
> இறைவனின் பார்வையில், ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் வேறுபாடுகள் இல்லையென பஹாவுல்லா மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். காலங்காலமாக இருந்து வந்துள்ள சமமின்மையெனும் நிலை, ஆண்களின் உயர்ந்த நிலையின் விளைவு அல்ல, பெண்களுக்குள் மறைந்துள்ள திறமைகளை வளர்ப்பதற்கான அதே வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதே இதன் காரணமாகும். அவர்களுக்கு எதிராகத் தப்பெண்ணங்கள் இருந்த போதிலும், மாபெரும் சாதனைகளைப் படைத்துள்ள பல்வேறு பெண்களுடைய வாழ்க்கைகளை வரலாறு பதிவு செய்துள்ளது.
>
> இத்தகைய பெண்களுள் பாரசீக கவிஞரான தாஹிரி ஒருவராவார். இவர் 1800'களின் ஆரம்பத்தில்--பெண்களானோர் ஆண்களுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்திருந்த ஒரு நாட்டில்--பிறந்தார். இவர் கடவுளின் புதிய திருவெளிப்பாட்டின் உண்மையை ஏற்றுக்கொண்ட முதல் பெண்மணியாவார். ஒரு புதிய நாளின் விடியலைக் கண்ணுற்ற இவர், ஆண் பெண் சமத்துவம் குறித்த மெய்ம்மை கண்டுணரப்படும் நேரம் கனிந்துவிட்டதாகத் திடமாக நம்பினார். இந்த உண்மையைப் பிரகடனப்படுத்துவதற்காக அவர் தமது சக்திகளை அர்ப்பணித்தார். அவரது அறிவும் பேச்சாற்றலும் அவரது காலத்தின் மிகக் கற்றறிந்த ஆண்களையும் பிரமிக்கச் செய்தது. அடக்குமுறையோடு ஆண்டு வந்த அரசனும், அறிவற்ற, அகங்காரம் நிறைந்த மதகுருக்களின் அனைத்து சக்திகளும் அவருக்கு எதிராக இருந்தபோதிலும், ஒரு கணங்கூட அவர் உண்மையைப் பேச தயங்கவில்லை. இறுதியில், தாம் இவ்வளவு உறுதியாகத் தழுவியிருந்த புதிய சமயத்திற்காக அவர் தமது உயிரையே அர்ப்பணித்தார்.

கடவுள் விரும்பாதவற்றில் நம்பிக்கை வைப்பது அறியாமையும் மூடநம்பிக்கையும் ஆகும். பெண்கள் கல்வியறிவு பெற்று மனித முனைவுகளின் அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்குச் சமமான ஒரு நிலையை அடைந்திட அவர்களுக்குச் சகல வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டும். ஆன்மீக இராஜ்யங்களில் உள்ளது போன்று, இவ்வுலகில் ஆண் பெண் சமத்துவமானது, நனவாகும் வரை, மனிதகுலத்தின் உண்மையான முன்னேற்றம் சாத்தியமாகாது.

1. எப்போதும் போன்று நீங்கள் இந்த அறிக்கையை உங்கள் குழுவில் படித்தும் அதில் அடங்கியுள்ள யோசனைகளை உரைத்திடவும் பயில வேண்டும். இவ்வறிக்கை வழங்கும் அகப்பார்வைகளினால் பயன் பெற்ற, உங்கள் நண்பர்களுடனான அண்மைய உரையாடல்கள் ஏதேனும் உள்ளனவா?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

2. எல்லாவிதமான முனைவுகள் சார்ந்த துறைகளிலும் ஆண்களுக்குச் சமமான நிலையை பெண்கள் அடையவேண்டுமெனில், இன்று சமுதாயத்தில் பரவலாக நிலவும், ஆனால் மாற வேண்டிய நம்பிக்கைகளும் மனப்பான்மைகளும் எவை?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

3. நீங்கள் மனனம் செய்ய விரும்பக்கூடிய பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில மேற்கோள்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

**“கடவுளின் பார்வையில் பெண்களும் ஆண்களும் என்றுமே சமமானவராக இருந்து வந்துள்ளனர், இனியும் அவ்வாறே இருந்து வருவர்.”[34]**

**“எதனால், யாம், உங்களனைவரையும் ஒரே மண்ணிலிருந்து ஆக்கினோம் என்று உங்களுக்குத் தெரியாதா? ஒருவர், தன்னை மற்றவருக்கு மேலாக உயர்மதிப்பிடக் கூடாது என்பதற்காகத்தான்..”[35]**

**இந்நாளில், தெய்வீகக் கிருபை என்னும் திருக்கரம் எல்லாவித வேறுபாடுகளையும் அகற்றியுள்ளது. கடவுளின் ஊழியர்களும் அவரது பணிப்பெண்களும் அதே தளத்தில் உள்ளவராகக் கருதப்படுகின்றனர்."[36]**

## பகுதி 11

நீங்கள் படிப்பாய்வு செய்திட கோரப்படும் கடைசி அறிக்கை சர்வலோகக் கல்வி பற்றியது: கல்வியை ஊக்குவிப்பது நமது காலத்தின் ஒரு மிக அவசரமான தேவையாகும். எந்த ஒரு நாடும், கல்வியைத் தனது நடுமைய அக்கறைகளில் ஒன்றாகக் கருதினாலன்றி, அது வளம்பெற முடியாது. அறியாமையே மக்களின் வீழ்ச்சிக்கு முதன்மை காரணமாக உள்ளது.

கல்வி, குழந்தைப் பருவத்திலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும். தாய்தந்தையர், தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கவும், ஆன்மீக மற்றும் நன்னெறி சார்ந்த சட்டங்களுக்கேற்ப அவர்களது குணங்களைச் சீர்திருத்தவும் கலைகளிலும் அறிவியல்களிலும் அவர்களைப் பயில்விக்கவும் முழுமுயற்சியுடன் செயல்படுதல் அவர்களின் கடைமையாகும். தாய்மார்களே மனிதகுலத்தின் முதல் கல்வியாளர்கள். அவர்கள் அறிவெனும் மார்பினில் அக்குழந்தைக்கு ஊட்டமளிக்கின்றனர். ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வியளிக்கப்பட வேண்டும். இது அலட்சியப்படுத்தக் கூடிய விஷயம் அல்ல. இதற்கான செலவுகளைப் பெற்றோர்களே ஏற்கமுடிந்தால் அதை அவர்களே செய்ய வேண்டும். இல்லையெனில், அக்குழந்தையின் கல்விக்கான வழிவகைளை சமூகமே வழங்க வேண்டும்.

கல்வியானது ஒவ்வொரு மனிதனிடத்திலும், உன்னதநிலையை அடைந்திடும் ஆவலை உருவாக்க வேண்டும். நாம் மனித பூரணத்துவத்தினால் வசீகரிக்கப்பட்டு, அதனைப் பேரார்வத்துடன் பின்தொடர வேண்டும். ஆன்மீக தனிச்சிறப்பை நாம் நாட வேண்டும். மனநேர்மை, விசுவாசம், மனிதகுலத்திற்குச் சேவை, அன்பு, நீதி, போன்ற மனித உலகின் பண்புகளைக் கொண்டு, தனிச்சிறப்படைய நாம் நாட்டமுற வேண்டும். அமைதி, ஒற்றுமை ஆகியவற்றை வளர்க்கவும், கல்வியை வளர்க்கவும், நாம் எடுக்கும் முயற்சிகளில் தனிச்சிறப்புற்றிருக்க ஆவல்கொள்ள வேண்டும். மக்களை இதுபோன்ற பாதையில் வழிநடத்துவது கல்வியின் உண்மையான பணியாகும்.

1. இந்த அறிக்கையை உங்கள் குழுவில் படிப்பாய்வு செய்த பின்னர், கல்வி குறித்து உங்கள் நண்பர்கள் கொண்டுள்ள சில அக்கறைகளை அடையாளங்காண முயலவும். அவர்களின் அக்கறைகள் மீது மேற்கண்ட யோசனைகள் எவ்வாறு கவனம் செலுத்துகின்றன?

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

2. பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து பின்வரும் மேற்கோள்களில் சிலவற்றை மனனம் செய்திட பரிந்துரைக்கப்படுகின்றது:

**“ஒரு மனிதன் அறிவோ திறன்களோ இன்றி இருப்பது விரும்பத்தக்கதல்ல, ஏனெனில், அதனால் அவன் கனிகொடுக்கா மரமாவான்.”**[37]

**“உங்கள் மனங்களையும் மனவுறுதியையும் உலக மக்களுக்குக் கல்வி புகட்டுவதில் முழுமையாக ஈடுபடுத்துங்கள்…”**[38]

**“கலைகளும் கைவினைகளும் அறிவியல்களும் படைப்புலகை மேம்படுத்துவதுடன், அதன் மேன்மைக்கும் உகந்ததாகின்றன.”**[39]

**“உண்மையிலேயே, மனிதனுக்கு அறிவே ஐயத்திற்கிடமற்ற பொக்கிஷமும் பெருஞ்சிறப்பின் தோற்றிடமும், வள்ளன்மையும், மகிழ்ச்சியும், ஆனந்தப் பரவசமும், இன்பநலமும், உவகையுமாகும்.”**[40]

## பகுதி 12

அமைதியே எல்லாரின் மனதிலும் மேலோங்கியுள்ள ஒரு வாதப்பொருளாகும். அதனை ஸ்தாபித்தல் மிகவும் அவசரமானது, இன்றியமையாதது. கடந்த அறிக்கைகளில் வரையறுக்கப்பட்டுள்ள கொள்கைகளைப் பற்றி நீங்கள் ஓரளவுக்குச் சிந்தனை செலுத்தியுள்ளதால், சர்வலோக அமைதி குறித்த விவகாரத்தின் மீது பிரதிபலிப்பது உங்களுக்குப் பயனளிப்பதாக இருந்திடும்.

போரை ஒழிப்பதற்கான நடைமுறையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அரசாங்கங்களையே பெரும்பாலும் சார்ந்துள்ளது. நாடுகளுக்கிடையிலான சர்வதேச ஒத்துழைப்பின் எண்ணற்ற வடிவங்களைப் போலவே, சச்சரவுகளைத் தீர்ப்பதற்கும் ஆயுத குறைப்பிற்கும் அரசியல் ஒப்பந்தங்கள் அவசியமாகும். ஆயினுங்கூட, இதுபோன்ற நடவடிக்கைகள் எவ்வளவு முக்கியமானதாக இருப்பினும், முன்னர் விவாதிக்கப்பட்ட கொள்கைகள்

உலகம் முழுவதும் நிறுவப்படாவிட்டால் அவை நீடித்த அமைதிக்கு வழிவகுக்காது. மக்கள் மெய்நிலையை ஆராய கற்றுக்கொள்ளாவிட்டால், உண்மை ஒன்றே என்பதை உணர முடியாவிட்டால், காலங்காலமாக இருந்துவந்துள்ள பகைமைகள் தொடர்ந்து நீடிக்காதாவென நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். நாம் அனைவரும் ஒரே தோற்றுவாயைக் கொண்டவர்களாவோம். கடவுள் நம் அனைவரையும் கண்காணித்து வருகிறார், அவருடைய அவதாரங்களின் மூலம் நம் அனைவருக்கும் பயிற்சி அளிக்கிறார். அவர்களின் போதனைகள், அன்பு மற்றும் கூட்டுறவின் ஒரே அடித்தளத்தில் உள்ளன. மதங்களின் ஒற்றுமை ஒப்புக்கொள்ளப்பட்டால் மட்டுமே மத மோதல்கள் நிற்கும், மதத்தின் ஒளி அமைதிக்கான பாதையை ஒளிரச் செய்யும். அவை ஒவ்வொன்றும் சமாதானத்திற்கு ஒரு வலுவான தடையாக இருக்கின்ற, அறியாமை எனும் மேகங்களை விரட்டவும், ஒவ்வொரு விதமான தப்பெண்ணத்தின் பொய்ம்மையை நிரூபிக்கவும் அறிவியலும் மதமும் ஒற்றுமையுடன் செயல்படுவது அவசியமல்லவா, என நாம் மேலும் வினவ வேண்டும். உலகின் ஒவ்வொரு மூலையிலும், பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையில் தற்போது நிலவும் மட்டுமீறிய ஏற்றத்தாழ்வின் மீது கவனம் செலுத்தப்படாவிட்டால், ஓர் அமைதியான உலகை உருவாக்க முடியுமா? மேலும், மனித முயற்சிகளின் அனைத்துத் துறைகளிலும் ஆண்களுடன் பெண்களும் சமமான நிலையில் பிரவேசிக்க அனுமதிக்கப்படும்போதே, வரலாற்றின் பெரும்பகுதியை அடையாளப்படுத்தும் வன்முறையானது அமைதிக்கும் உண்மையான செழிப்புக்கும் வழிவகுக்கும். வளர்ந்து வரும் தலைமுறையினருக்கு அத்தகைய கொள்கைகளின்படி உலகளாவிய நிலையில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும். இல்லையெனில், அமைதிக்கான ஒவ்வொரு நம்பிக்கையும் சிதைந்துவிடும். பஹாவுல்லாவின் பின்வரும் சொற்களை மனனம் செய்ய நீங்கள் விரும்பலாம். இதன்மூலம் அவற்றை மனிதகுல எதிர்காலத்தின் மீது அக்கறை கொண்ட மற்றவர்களுடன் நீங்கள் பகிர்ந்து கொள்ளலாம்:

> **“மனித இனத்தின் ஒற்றுமை வலுவாக நிலைநாட்டப்படாதவரையில் அதன் நலமும், அமைதியும் அடையவே முடியாதவையாகும்.”**[41]

## குறிப்பீடுகள்


1. *பஹாவுல்லா, பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்,* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 1983, 2017 பதிப்பு), CIX, பத்தி 2, பக். 243.
2. மேற்கண்ட., CXXXII, பத்தி 1, பக். 325.
3. மேற்கண்ட., XXXIV, பத்தி 5, பக். 89.
4. கித்தாப்-இ-அக்டாஸுக்குப் பிறகு வெளிப்படுத்தப்பட்ட நிருபங்கள் (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 1988, 2005 பதிப்பு), no. 11.1, பக். 161.
5. *பஹாவுல்லா, கித்தாப்-இ-இகான், மெய்யுறுதி நூல்* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 2003, 2018 பதிப்பு), பத்தி 151, பக். 131.
6. *பஹாவுல்லா, பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்,* XXVIII, பத்தி 2, பக். 77.
7. மேற்கண்ட., XXIV, பத்தி 1, பக்.  66.
8. மேற்கண்ட., CXI, பத்தி 1, பக்.  246.
9. மேற்கண்ட., XLIII, பத்தி 6, பக். 106.
10. மேற்கண்ட., CX, பத்தி 1, பக். 244.
11. *கித்தாப்-இ-அக்டாஸுக்குப் பிறகு வெளிப்படுத்தப்பட்ட நிருபங்கள்,* no. 15.4, பக். 220.
12. *பஹாவுல்லா, பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்,* பக். , XCV, பத்தி 1, பக். 219–20.
13. *கித்தாப்-இ-அக்டாஸுக்குப் பிறகு வெளிப்படுத்தப்பட்ட நிருபங்கள்,* எண். 9.13, பக். 141.
14. மேற்கண்ட., எண். 5.13, பக். 51.
15. *பஹாவுல்லா, பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்,* பக்., CXII, பத்தி 1, பக். 247–48.
16. மேற்கண்ட., CXXXII, பத்தி 3, பக். 326.
17. மேற்கண்ட., CXI, பத்தி 1, பக். 246.
18. *கித்தாப்-இ-அக்டாஸுக்குப் பிறகு வெளிப்படுத்தப்பட்ட நிருபங்கள்,* எண். 7.20, பக். 90.
19. மேற்கண்ட., எண். 6.25, பக். 66–67.
20. பஹாவுல்லா, ஷோகி எஃபெண்டியினால் குறிப்பிடப்பட்டது, *தெய்வீக நீதியின் வெளிப்பாடு* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 2006, 2018 பதிப்பு), பத்தி 42, பக். 41.
21. *கித்தாப்-இ-அக்டாஸுக்குப் பிறகு வெளிப்படுத்தப்பட்ட நிருபங்கள்,* no. 3.23, பக். 27.
22. பஹாவுல்லா, *மறைமொழிகள்* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 2003, 2012 பதிப்பு), பாரசீகம் எண். 80, பக். 51.
23. *கித்தாப்-இ-அக்டாஸுக்குப் பிறகு வெளிப்படுத்தப்பட்ட நிருபங்கள்,* எண். 6.19, பக். 64.
24. மேற்கண்ட., எண். 6.37, பக். 71.

25. பஹாவுல்லா, in *ஹுக்குகுல்லா—கடவுளின் உரிமை:* பஹாவுல்லா, அப்துல்-பஹா ஆகியோரின் எழுத்துகள், ஷோகி எஃபென்டியினால் எழுதப்பட்ட கடிதங்கள் மற்றும் உலக நீதிமன்றத்தின் எழுத்துகளிலிருந்து எடுபகுதிகள் உலக நீதிமன்றத்தின் ஆராய்ச்சித் துறையினால் தொகுக்கப்பட்டது. (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 2007), எண். 16, பக். 16.

26. பஹாவுல்லா, பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள், CXVIII, பத்தி 2, பக். 283.

27. மேற்கண்ட, CXVII, பத்தி 1, பக். 282.

28. பஹாவுல்லா, ஷோகி எஃபென்டியினால் குறிப்பிடப்பட்டது, *வாக்களிக்கப்பட்ட நாள் வந்துவிட்டது* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 1996, 2018 பதிப்பு), பத்தி 279, பக். 187.

29. பஹாவுல்லா, பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள், CXVII, பத்தி 1, பக். 282.

30. *கித்தாப்-இ-அக்டாஸுக்குப் பிறகு வெளிப்படுத்தப்பட்ட நிருபங்கள்*, எண். 4.11, பக். 36.

31. மேற்கண்ட, எண். 6.3, பக். 57.

32. மேற்கண்ட, எண். 6.3, பக். 58.

33. பஹாவுல்லாவின் மறை மொழிகள், பாரசீகம் எண். 5, பக். 23–24.

34. பஹாவுல்லா, *பெண்கள்: பஹாவுல்லா, அப்துல்-பஹா ஷோகி எஃபென்டி ஆகியோருடன் உலக நீதிமன்றத்தின் எழுத்துகளிலிருந்து எடுபகுதிகள்* உலக நீதிமன்றத்தின் ஆராய்ச்சித் துறையினால் தொகுக்கப்பட்டது. (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 1986, 1997 பதிப்பு), எண். 54, பக். 26.

35. பஹாவுல்லாவின் மறை மொழிகள், அரபு, எண். 68, பக். 20.

36. பஹாவுல்லா, *பெண்கள்* பற்றிய தொகுப்பு, எண். 3, பக். 3.

37. *பஹாவுல்லா, எல்லா விஷயங்களிலும் அதிசிறப்பு: பஹாய் திருவாக்கு எடுபகுதிகளின் தொகுப்பு,* உலக நீதிமன்றத்தின் ஆராய்ச்சித் துறையினால் தொகுக்கப்பட்டது. (லன்டன்: பஹாய் பிரசுர காப்பகம் , 1981, 1989 பதிப்பு), எண். 5, பக். 2.

38. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்*, CLVI, பத்தி 1, பக். 378. 2016 பதிப்பு), பக். 26.

39. Bahá'u'lláh, *ஓநாயின் மைந்தனுக்கான நிருபம்* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 1988, 2016 பதிப்பு), பக். 26.

40. *கித்தாப்-இ-அக்டாஸுக்குப் பிறகு வெளிப்படுத்தப்பட்ட நிருபங்கள்*, எண். 5.13, பக். 52.

41. *பஹாவுல்லா, பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்,* CXXXI, பத்தி 2, பக். 324.



# ஆழ்பயிற்சிக்கான விஷயங்கள்

## நோக்கம்

நண்பர்களையும் அண்டையர்களையும் சென்று சந்தித்து ஆன்மீக முக்கியத்துவமுடைய கருப்பொருள்கள் குறித்து உரையாடும் பழக்கத்தை உருவாக்கிக்கொள்தல்

## பகுதி 1

இதற்கு முன்வந்த பகுதியைப் போன்று இந்த மூன்றாவது பாடப்பிரிவும், அர்த்தமுள்ள மற்றும் உற்சாகமூட்டும் உரையாடல்களில் நாம் ஈடுபடுவதற்கான நமது செயல்திறம் பற்றியதாகும். இரண்டாம் பாடப்பிரிவில் நமது கவனம், ஆன்மீகக் கொள்கைகளைக் குறிப்பிடுவதன் மூலம் உரையாடலின் தரத்தை உயர்த்திட, பன்மடங்கான சூழல்கள் வழங்கிடும் வாய்ப்புகள் பற்றியதாகும். இங்கு, சமூக வாழ்வுக்கு நடுமையமாக விளங்கும் கருப்பொருள்களை ஒன்றாக ஆராய்வதற்காக நண்பர்கள் மற்றும் அண்டையார்களின் குடும்பங்களுக்கு விஜயம் செய்தலின் மீது நமது கவனம் திரும்புகிறது.

உலகம் முழுவதும் உள்ள கிராமங்களிலும் அண்டைப்புறங்களிலும், வழக்கமான வழிபாட்டுக் கூட்டங்கள், சிறார்களின் ஆன்மீகக் கல்விக்கான வகுப்புகள், இளைய இளைஞர் குழுக்களின் சந்திப்பு, படிப்பு வட்டங்கள், இளைஞர் முகாம்கள், மற்றும் பல்வேறு விதமான பரப்பியக்கங்களை உள்ளடக்கும் பரஸ்பர தொடர்புகொண்ட நடவடிக்கைகளில் நண்பர் குழாம்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஓர் உள்ளூரில் இவ்விதமான நடவடிக்கை முறை வேரூண்றும்போதும் சேவை செயல்களில் அதிகரிக்கும் எண்ணிக்கையிலான நண்பர்கள் தங்களை அர்ப்பணிக்கும்போதும் நண்பர்களின் மையக்கருவானது அளவிலும் வலுவிலும் வளர்ச்சியுறுகிறது. தற்போது உந்துவேகம் அடைந்துவரும் சமூக நிர்மாணிப்பு செயல்முறைக்கு கிராமம் அல்லது அண்டைப்புறத்திற்கான மேன்மேலும் அதிகரித்து வரும் விஜயங்களுக்கான முறைமையான திட்டம் ஓர் இன்றியமையா அம்சமாகும். இவ்வருகைகளின்போது பல்வகையான கருப்பொருள்கள் உரைக்கப்படுகின்றன. உதாரணத்திற்கு ஒரு சிறுவர் வகுப்பின் ஆசிரியர், கல்வி சம்பந்தமான கருப்பொருள்கள் குறித்து கலந்துரையாட சிறுவர்களின் பெற்றோரை அடிக்கடி சென்று சந்திக்கவேண்டும். அதே போன்று, ஒரு மனிதனின் வாழ்வில் இந்த வாய்ப்புகள் நிறைந்த வருடங்களுடன் சம்பந்தப்பட்ட சவால்கள் மற்றும் வாய்ப்புகள் சார்ந்த விஷயங்களைப் பற்றி கலந்துரையாட இளைய இளைஞர் மற்றும் இளைஞரின் இல்லங்களுக்கும் உயிர்ப்பூட்டநர்களகாவும் பயிற்றுநர்களாகவும் பணிபுரிவோர் விஜயங்கள் மேற்கொள்ள வேண்டும். தங்களின் சமய அறிவை ஆழப்படுத்திக்கொள்ள ஒரு குடும்பத்தின் உறுப்பினர்களுடன் மேற்கொள்ளப்படும் உரையாடல்கள் அதே அளவு இன்றியமையாதவை. மொத்தத்தில், சமூகத்தில் வளர்ந்து வரும் தோழமை கலாச்சாரத்தில் இத்தகைய வருகைகளின் தாக்கம் மிகைப்படுத்தப்பட முடியாது.

## பகுதி 2

இப்பாடப்பிரிவின் நோக்கத்திற்கிணங்க, மேலே வர்ணிக்கப்பட்டுள்ள செயல்முறை முன்னேற்றங் கண்டுவரும் ஒரு கற்பனையான அண்டைப்புறத்தை நாம் பார்க்கவிருப்பதுடன், ஒரு குடும்ப விஜயத்தின்போது மடிப்பவிழக்கூடிய உரையாடலின் வகைகளை ஆராய்வதற்கு அதை ஒரு சூழ்நிலையாகப் பயன்படுத்துவோம்.

அலெயான்ட்ரா, பல்கலைக்கழகத்தில் மூன்றாவது வருடம் பயிலும் ஓர் இளம் பெண்ணாவார். அவரும் ஒரு மாணவரான அவரது சகோதரர்களுள் ஒருவரும், அவர்கள் பிறந்து வளர்ந்த ஒரு வீட்டில் தங்கள் பெற்றோருடன் நாம் கற்பனையாகக் கொண்டிருக்கும் ஓர் அண்டைப்புறத்தில் வசித்து வருகின்றனர். சமீபத்தில் அந்த அண்டைப்புறத்திற்கு மாறிவந்துள்ள ஓர் இளம் தம்பதியுடன் அவர்கள் நால்வரும் ஒவ்வொரு வாரமும் பிரார்த்திப்பதற்கும் 8000 பேர் கொண்ட அவ்விடத்தில் ஸ்தாபிக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைப் பற்றி கலந்தாலோசிப்பதற்கும் ஒன்றுகூடுகின்றனர். மேலும் மூவர் இந்த வாராந்திர கூட்டத்தில் பங்கேற்று, தங்களின் சொந்த சேவை செயல்கள் பற்றி மட்டுமின்றி அங்கு நடைபெறும் சமூக-நிர்மாணிப்பு செயல்முறை முழுவதையும் பற்றி சிந்திப்பதற்கு அவ்வப்போது இந்த வாரந்திர கூட்டத்தில் பங்கேற்கின்றனர்: அவர்கள் ஆறு மாதங்களுக்கும் முன் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சிறார் வகுப்பு ஆசிரியரும் தாங்கள் இளைய இளைஞராக இருந்தபோது தங்களுக்கு எனிமேட்டராகப் பணியாற்றிய அலெயான்ட்ராவின் மூத்த சகோதரர் ஒருவரின் உதவியுடன் ஓர் இளைய இளைஞர் குழுவின் முயற்சிகளுக்கு வழிகாட்டும் பதினேழு வயதுடைய இரண்டு இளைஞர்களும் ஆவர்.

நாம் ஆராயக்கூடிய முதல் உரையாடல் தொகுப்பு அலெயான்ட்ராவுக்கும் அவ்வண்டைப்புறத்தில் நன்கு அறிமுகமான, மரியாதைக்குரிய சாஞ்செஸ் குடும்பத்தினருக்கும் இடையில் நடைபெறுகின்றது. அக்கணவரும் மனைவியும் தங்களின் அறுபதாம் வயதுகளில் உள்ளதுடன், தங்களின் மகன்களையும் மகள்களையும் வளர்த்து ஆளாக்கிவிட்ட அவர்கள் அலெயான்ட்ராவின் வீட்டிலிருந்து சில குடியிருப்புகள் தள்ளி தனியாக வாழ்கின்றனர். சாஞ்செஸ் தம்பதியினர் அதிக முறையான கல்வி பெறாவிடினும் அவர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களே. வள்ளன்மையும் தூய செயல்களும் நிறைந்த ஒரு வாழ்வின் அனுபவத்தின் மூலம் பெற்றிருந்த விவேகத்தின் காரணமாக அவர்கள் பரவலான மரியாதைக்கு உரியவர்களாக இருந்தனர். பஹாய் போதனைகளைப் பற்றி அவர்கள் சில காலமாகவே அறிந்துள்ளனர், இருப்பினும் சமீபகாலத்தில்தான் அதை தீவிரத்துடன் ஆராய தீர்மானித்தனர். ஒரு வாரத்திற்கு முன்பு, தாங்கள் அச்சமூகத்தில் சேர விரும்புவதாக அலெயான்ட்ராவின் பெற்றோரிடம் தெரிவித்தனர். அவர்களை வரவேற்பதற்கான ஓர் ஒன்றுகூடல் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளதுடன், அவர்கள் சமயத்தைப் பற்றிய தங்கள் அறிவை ஆழப்படுத்திக்கொள்ள உதவும் ஒரு கருப்பொருள் வரிசையை அவர்களுடன் பகிர்ந்துகொள்ள அலெயான்ட்ரா அவர்களை வழக்கமாக சந்திப்பார் எனவும்

தீர்மானிக்கப்பட்டது. அந்த விஜயங்களின் விவரங்களைப் பின்தொடர்வதன் மூலம், நீங்கள் இக்கருப்பொருள்களை ஆராய முடிவதுடன் அவ்வேளைகளில் நடைபெறும் உரையாடல்களின் இயலாற்றல்களைப் பற்றி பிரதிபலிக்கவும் முடியும்.

## பகுதி 3

சாஞ்செஸ் தம்பதியருடன் பின்வரும் நித்திய திருவொப்பந்தம் பற்றிய கருப்பொருள் பற்றிய சுருக்கமான விளக்கத்துடன் தனது முதல் உரையாடலை ஆரம்பிக்க அலெயான்ட்ரா திட்டமிட்டுள்ளார்.

ஒருவரும், ஒப்பற்றவரும், சுயஜீவியுமான கடவுளே அனைத்தின் படைப்பாளர் ஆவார். கடவுளின் சாராம்சம் மனித சிந்தனைக்கு எட்டாத ஒன்றென பஹாவுல்லா போதிக்கின்றார், ஏனெனில், வரம்புடைய ஒன்று வரம்பற்ற ஒன்றை புரிந்துகொள்ள முடியாது. கடவுளைப் பற்றிய மனிதர்களின் உருவகங்கள் அவர்களின் சொந்தக் கற்பனையின் வெளிப்பாடுகளே. கடவுள் ஒரு மனிதரல்லர், அவர் சர்வலோக ரீதியாக வியாபித்திருக்கும் வெறும் சக்தியுமல்ல. நமது இருப்பின் மூலாதாரத்தைக் குறிப்பிட நாம் பயன்படுத்தும் சொற்களான விண்ணுலகத் தந்தை, தெய்வீக சக்தி, மாபெரும் ஆவி, ஆகியன அவரது நாமங்களையும் பண்புகளையும் மனித சொற்களில் வெளிப்படுத்துகின்றனவே அன்றி, அவை அவரை வர்ணிப்பதற்கு முற்றிலும் போதாதவை.

மறைமொழிகளில் பின்வருமாறு படிக்கின்றோம்:

**“மனிதனின் புத்திரனே! யான் உன் படைப்பினை விரும்பினேன். ஆகவே உன்னைப் படைத்தேன். ஆகையால் நீ என்னை நேசிப்பாயாக; அதனால், யான் உனக்குப் பெயரையும் சூட்டி, உனது ஆன்மாவையும் உயிர் ஆவியினால் நிரப்பக்கூடும்.”**[1]

இந்த ஏட்டுரைப் பகுதியில், கடவுளின் அன்பே நமது இருப்பிற்கான காரணமென பஹாவுல்லா நமக்குக் கூறுகின்றார். நம்மைப் பாதுகாக்கும், பராமரிக்கும், உயிராவியைக் கொண்டு நம்மை நிரப்பிடும் அவரது அன்பு குறித்து நாம் என்றுமே நனவுடன் இருக்க வேண்டும். சிரமமான அல்லது சுமுகமான, சோகமான அல்லது மகிழ்ச்சியான தருணங்களில் அவரது அன்பு நம்மை சதா அரவணைத்துள்ளது என்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பஹாய் போதனைகளிலிலிருந்து, அவரது அன்பின் காரணமாக நம்மைப் படைத்த இறைவன், நம்மோடு ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என அறிகின்றோம். "ஒப்பந்தம்" என்னும் சொல்லுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர் தங்களுக்குள் செய்துகொள்ளும் உடன்பாடு அல்லது ஒரு வாக்குறுதி எனப் பொருள்படும். நித்திய ஒப்பந்தத்தின்படி, சர்வ-கொடையாளரான படைப்பாளர் நம்மை என்றுமே கைவிடுவதில்லை எனவும், காலத்திற்குக் காலம் அவரது சித்தம், நோக்கம் ஆகியவற்றை அவரது அவதாரங்களின் மூலமாக நமக்கு தெரிவிக்கின்றார்.

"அவதரித்தல்" என்னும் வினைச்சொல்லின் அர்த்தம் வெளிப்படுத்துதல் ஆகும். அதாவது, அதற்கு முன் அறியப்படாத ஒன்றைக் காண்பித்தல் எனப் பொருள்படும். கடவுளின் திருவாக்கை நமக்கு வெளிப்படுத்தும் அந்த விசேஷ திருவுருக்கள் கடவுளின் அவதாரங்களாவர். அவர்கள் கடவுளின் சித்தத்திற்கு ஏற்ப எவ்வாறு வாழ்வது, மற்றும் உண்மையான மகிழ்ச்சியை எவ்வாறு அடைவது என்பதை நமக்குக் கற்பிக்கும் சர்வலோக கல்வியாளர்கள் ஆவர். ஆப்ரஹாம், கிருஷ்னர், மோசஸ், ஸோராஸ்டர், புத்தர், கிருஸ்து, முகம்மது, மற்றும் நிச்சயமாகவே மனித வரலாற்றில் இக்காலத்தின் இரட்டை அவதாரங்களான பாப் பெருமானாரும் பஹாவுல்லாவும் இந்த அவதாரங்களுள் அடங்குவர்.

ஆதலால், கடவுளின் நித்திய திருவொப்பந்தத்தில் அவரது பங்கு எப்போதுமே நிறைவேற்றப்பட்டு வந்துள்ளது. "திருவொப்பந்தத்தில் நான் எனது பங்கை எப்படி நிறைவேற்றுவது?" என்பதே நாம் அனைவரும் நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வியாகும். இதற்கு, கடவுளின் அவதாரத்தைக் கண்டுணர்ந்து அவரது போதனைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்பதே எல்லா சமய சாஸ்திரங்களிலும் காணப்படக்கூடிய பதிலாகும். இந்தப் பதிலானது கடவுளை அறிந்து அவரை வழிபடுதல் என்னும் நமது வாழ்க்கையின் நோக்கத்தையே குறிக்கின்றது. சுருக்கமான கட்டாயத் துதியில் பின்வருமாறு பிரகடனம் செய்கின்றோம்:

**"என் கடவுளே உம்மை அறிந்து வழிபடுவதற்கெனவே என்னைப் படைத்திருக்கின்றீர் என்பதற்கு நான் சாட்சியமளிக்கின்றேன். இத்தருணம் என் பலவீனத்திற்கும் உமது வலிமைக்கும் என் வறுமைக்கும் உமது செல்வத்திற்கும் சாட்சியம் கூறுகிறேன்.**

**"உதவுபவரும் தனித்தியங்க வல்லவருமான இறைவன் உம்மையன்றி வேறேவருமிலர்."**[2]

கடவுளின் அவதாரங்கள் மூலமன்றி அவரை அறிந்துகொள்தல் இயலாது என்பதால், அவர்களைக் கண்டுணர்ந்து அவர்களின் போதனைகளைப் பின்பற்றுவதன் மூலமே நாம் நமது வாழ்க்கைகளின் நோக்கங்களை நிறைவேற்றிட முடியும். இன்று, எல்லா புனித

வேதங்களிலும் அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிக்கு ஏற்ப உலகில் அமைதியும் நீதியும் ஸ்தாபிக்கப்படும் என்னும் வாக்குறுதி நிறைவேற்றப்படும் ஒரு நாளில் நாம் வாழும் அருட்கொடைக்காக நமது இதயங்கள் நன்றியினால் நிறைந்து வழிகின்றன. பஹாவுல்லா பிரகடனம் செய்கின்றார்:

**“இதுவே, இறைவனின் மிகச் சிறந்த சலுகைகள் மனிதர்மீது பொழியப்பட்டுள்ள நாள்; அவரது வலுமிக்கக் கிருபை எல்லாப் பொருட்களினுள்ளும் வியாபிக்கச் செய்யப்பட்டுள்ள நாள். தங்களிடையே உள்ள வேற்றுமைகளை அகற்றி மீண்டும் ஒன்றிணைந்து, பூரண ஒற்றுமையுடனும், சமாதானத்துடனும் அவரது பாதுகாப்பு, அன்புப்பரிவு என்னும் விருட்சத்தின் நிழலின் கீழ் வாழ வேண்டியது உலக மக்கள் அனைவருக்கும் கடமையாக்கப் பட்டுள்ளது.”**[3]

நமது கதையை நாம் மேலும் தொடர்வதற்கு முன், மேற்கண்ட விளக்கத்தை நீங்கள் படித்து அதை உங்கள் குழுவின் பிற பங்கேற்பாளர்களுடன் சேர்ந்து ஒவ்வொரு பத்தியாகப் பிரதிபலிப்புச் செய்யவும். அதில் வரும் யோசனைகளை இயல்பாகவும் எளிதாகவும் வெளிப்படுத்தும் வரை நீங்கள் ஒருவரை ஒருவர் கேள்விகள் கேட்டு அதற்கு ஒன்றாகப் பதில் கூறலாம். மேற்கோள்களை நன்றாகக் கற்பது குறிப்பான முக்கியத்துவமுடையது, ஏனெனில் இத்தகைய கலந்துரையாடல்களில் திருவாக்குகளிலிருந்து உரைப்பகுதிகளைப் பகிர்ந்துகொள்வது இன்றியமையாதது. இப்பகுதியில் வரும் யோசனைகள், மேற்கோளிடப்பட்டுள்ள உரைப்பகுதிகளின் அர்த்தம் ஆகியவற்றைப் பற்றி சிந்திப்பதற்கு பின்வரும் பயிற்சிகள் உங்களுக்கு உதவிடும்:

1. கடவுள் அறிந்துகொள்ள முடியாத ஒரு சாராம்சம் என ஒருவருக்கு எவ்வாறு விளக்குவீர்கள்? இதன் தொடர்பில் மேலே உள்ள முதல் பத்தி உங்களுக்கு உதவிடும்.

   ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________

2. கடவுள் நம்மை ஏன் படைத்துள்ளார்? ______________________

   ______________________________________________

3. “திருவொப்பந்தம்” என்னும் சொல்லின் பொருள் என்ன? ______________

   ______________________________________________

4. மானிடத்துடனான தமது நித்திய திருவொப்பந்தத்தில் மானிடத்திற்கான கடவுளின் வாக்குறுதி யாது?

________________________________________________________________________________

________________________________________________________________________________

5. நமது வாழ்க்கைகளின் நோக்கம் என்ன? ______________________________________________

________________________________________________________________________________

6. கடவுளின் சாரம்சத்தை நாம் அறிந்துகொள்ளவே முடியாதெனில், கடவுளை அறிந்துகொள்வதே நமது வாழ்க்கையின் நோக்கம் என்பதன் அர்த்தமென்ன? ___________

________________________________________________________________________________

7. “அவதரித்தல்” என்னும் சொல்லின் பொருள் என்ன? _________________________________

________________________________________________________________________________

8. கடவுள் அவதாரங்கள் சிலரின் பெயர்களைக் குறிப்பிடுக: ______________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

9. திருவொப்பந்தத்தில் நமது பங்கை நாம் நிறைவேற்ற வேண்டுமெனில் நம்மிடமிருந்து என்ன எதிர்ப்பார்க்கப்படுகின்றது? _____________________________________________________

________________________________________________________________________________

10. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:

அ. இந்நாளில், கடவுளின் ____________________ மானிடத்தின் மீது பொழியப்பட்டுள்ளது.

ஆ. இந்நாளில், கடவுளின் ___________________________ எல்லா பொருள்களிலும் வியாபிக்கச் செய்யப்பட்டுள்ளது.

இ. இந்நாளில் நாம் நம்மிடையே உள்ள வேற்றுமைகளை ____________ பூரண ஒற்றுமையுடனும், சமாதானத்துடனும் ________________________________________

11. பஹாவுல்லா உலக மக்களை என்ன செய்யுமாறு கோருகின்றார்? ________________________

_____________________________________________________________________________________

_____________________________________________________________________________________

## பகுதி 4

சாஞ்செஸ் தம்பதியருடன் அலெயான்ட்ரா பகிர்ந்துகொள்ள திட்டமிட்ட பொருளடக்கம் மட்டுமே அவள் மனதில் மேலோங்கியிருந்த ஒரே விஷயமல்ல. அவள், அத்தம்பதியருடன் ஒரு வலுவான நட்பின் பந்தங்களை உருவாக்கிட விரும்பினாள். தனது நேரடி அனுபவத்தின் மூலமாக, தப்பெண்ணம், புரந்தருளும் (patronizing) மனப்பான்மை இரண்டினுடைய தீய விளைவுகளைப் பற்றி அவள் அறிந்திருந்தாள். இவற்றை அவள் இயல்பாகவே தவிர்ப்பாள்; அவளது உயர் கல்வி அவளது பணிவை எவ்வகையிலும் குறைத்திடவே இல்லை. அவள் மனதில் சாஞ்செஸ் தம்பதியினர் மீது உண்மையான அன்பும் மரியாதையும் தவிர வேறெதுவும் கிடையாது. முதல் கருப்பொருளை தான் எவ்வாறு விளக்கப்போகிறோம் என்பதைப் பற்றி சிந்திக்கும்போது, இது பல வாரங்களுக்கு மடிப்பவிழவிருக்கும் தொடர்ச்சியான ஓர் உரையாடலின் ஆரம்பம் என்பதை அவள் தனக்குள் நினைவுபடுத்திக்கொண்டாள். யோசனைத் தொடர்வரிசையைத் தெளிவுடன் வழங்குதல் முக்கியமெனினும், குறிப்பிட்ட சில தருணங்களில் நிதானித்து அத்தம்பதியரின் விடையிறுப்பையும் (response) தான் செவிமடுக்க வேண்டும் என்பதை அவள் உணர்ந்திருந்தாள். “நான் பதற்றத்தைத் தவிர்த்திட முயல வேண்டும். நான் பதற்றத்துடன் இருக்கும்போதெல்லாம் நான் விடாமல் பேசிக்கொண்டு இருப்பேன்; அங்கு ஓர் உரையாடல் உருபெற வாய்ப்பேற்படாது,” என தனக்குள் சொல்லிக்கொண்டாள். இதே முறையில் தனது வருகையைப் பற்றி அலெயான்ட்ரா சிறிது நேரம் தொடர்ந்து சிந்தித்தாள். நீங்கள் அவளுடைய நிலையில் இருந்தீர்களானால், பின்வருவனவற்றுள் எது உங்கள் மனதில் தோன்ற வேண்டிய எண்ணங்களாக இருக்கவேண்டுமென கருதுவீர்கள்?

_____ சாஞ்செஸ் தம்பதியருக்கு சமயத்தைக் கற்பித்து அவர்கள் அனைத்தையும் கற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவது என் கடமையாகும்.

_____ இந்த அருமையான தம்பதியுடன் சில நேரம் செலவிடும் வாய்ப்பைப் பெறுவதற்கும் அவர்களுடன் திருவாக்குகளிலிருந்து சில உரைப்பகுதிகளை பகிர்ந்துகொள்வதற்கும் நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

_____ இந்த விஜயம் முக்கியமானதுதான். இருப்பினும் அதற்கு அதிக நேரம் எடுக்காது என நான் நம்புகிறேன் ஏனெனில், எனக்கு வேறு வேலைகள் உண்டு.

_______ மேற்கோள்கள் அவர்களுக்குக் கடினமாக இருக்கும். சில எளிமையான யோசனைகளை மட்டும் நான் குறிப்பிடுவேன். அவர்களிடம் அன்பை வெளிப்படுத்துவதே முக்கியம்.

_______ அவர்களின் வயதில் சாஞ்செஸ் தம்பதியினர் அதிகமாக கற்றுக்கொள்ள இயலாது.

_______ நான் இந்த விஜயத்தை எதிர்ப்பார்த்தும் கருப்பொருளை கலந்துரையாடி மேற்கோள்களைப் பற்றி பிரதிபலித்திடும்போது அவர்களின் அகப்பார்வைகளை செவிமடுக்கவும் ஆர்வமாக இருக்கின்றேன்.

_______ அவர்களால் படிக்க முடியும். தலைப்பை மட்டும் அவர்களுக்கு அறிமுகப்படுத்திவிட்டு படிப்பதற்காகச் சில மேற்கோள்களை அவர்களிடம் விட்டு வருவேன்.

_______ யோசனைகளை வழங்கும்போது, மேற்கோள்களை ஆய்வு செய்யவும் அவற்றைப் பற்றி ஒன்றாகக் கலந்துரையாடவும் நான் அவ்வப்போது நிதானிக்க வேண்டும்.

_______ கருப்பொருள் முழுவதையும் தடையில்லாமல் வழங்கிடவும் இறுதியில் அவர்களுக்குக் கேள்விகள் ஏதும் இருக்கின்றதா என வினவிடவும் நான் எதிர்ப்பார்க்கின்றேன்.

இத்தகைய ஒரு விஜயத்திற்கான ஆயத்தமாக நீங்கள் கொண்டிருக்க வேண்டிய அல்லது கொண்டிருக்கக்கூடாத வேறு சில உணர்வுகளைப் பற்றி சிந்திக்க முடியுமா?

## பகுதி 5

சாஞ்செஸ் இல்லத்திற்கான அலெயான்ட்ராவின் முதல் வருகை நன்றாக அமைந்திருந்தது. தம்பதியர் அவளுடைய பதற்றத்தை கவனித்து, தங்களின் கனிவு, கருணை ஆகியவற்றினால் அவளை சாந்தமுறச் செய்தனர். அவர்கள் உன்னிப்பாக செவிமடுத்து, மேற்கோள்கள்மீது குறிப்பான கவனம் செலுத்தி கலுந்துரையாடலில் முழுமையாகப் பங்கெடுத்தனர். திருமதி சாஞ்செல் அலெயான்ட்ராவை கேட்ட ஒரு கேள்வி மட்டும் சற்று சிரமத்தை வரவழைத்தது: “பஹாய் சமூகத்தை தழுவுவதனால் நான் கிருஸ்துவை புறக்கணிக்கின்றேனா?” அலெயான்ட்ராவுக்குப் பதில் தெரிந்திருந்தாலும், அதை சரியாகச் சொல்வதற்கு அவளுக்குச்

சிறிது நேரம் தேவைப்பட்டது. திரு சாஞ்செஸ் புன்னகைத்தவாறு அவளுடைய உதவிக்கு வந்தார்: “நாங்கள் பஹாய் போதனைகளைப் பற்றி கற்றதிலிருந்து கிருஸ்துவின்பாலான எங்களுடைய அன்பு வளர்ச்சியடைந்துள்ளது என்றே நான் நினைக்கின்றேன்,” என்றார். தனது சிந்தனைகளை ஒழுங்குபடுத்திக்கொண்ட அலெயான்ட்ரா “உலகம் முழுவதுமுள்ள பலருக்கும் இதே அனுபவம்தான்,” எனக் கூறினாள். கடவுளின் ஒருமை, சமயங்களின் ஒருமை, மனிதகுலத்தின் ஒருமை ஆகியன குறித்து பஹாவுல்லா போதித்துள்ளவற்றின் காரணமாக, மோசஸ், கிருஸ்து, கிருஷ்னர், புத்தர், ஸோராஸ்டர், முகம்மது ஆகியோர் மீதான அவர்களின் அன்பு வலுப்பெற்றுள்ளது.

அலெயான்ட்ராவின் விஜயம் பலனளிப்பதாக இருந்தற்குக் காரணமான அங்கு நிலவிய நற்பண்புகள் மற்றும் மனப்பான்மைகளை உங்கள் குழுவில் விவாதிப்பதற்குச் சிறிது நேரம் எடுத்துக்கொள்வது பயனளிப்பதாக இருக்கும். அவற்றில் பணிவே நீங்கள் முக்கியமாக கருதவேண்டிய ஒன்றாகும். கடவுளின் முன் பணிவே எல்லா பணிவுக்கும் அடித்தலமாகும். அதிலிருந்துதான் கடவுள் உயிரினங்கள் முன்னிலையில் பணிவு வெளிப்படுகின்றது. கடவுளைப் பற்றியும் அவரது அவதாரங்களைப் பற்றியும் பேசும்போது பணிவு அதிக முக்கியத்துவமுடையதாகின்றது. பஹாவுல்லாவின் பின்வரும் சொற்களின் மீது பிரதிபலித்து அவற்றை மனனம் செய்திட எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்:

> **“கடவுளின் நேசர்கள் எங்கெல்லாம் ஒன்றுகூடினும், எவரையெல்லாம் சந்தித்திடினும், இறைவன்முன் அவர்களின் மனோபாவமும், அவரது புகழையும் மேன்மையையும் போற்றிப் பாடிடும் விதம், அவர்களின் பணிவையும் பவ்வியத்தையும் புலப்படுத்துவதாய் இருக்கவேண்டும்; அதனால், அவர்களின் பாதத்தினடியில் கிடக்கும் ஒவ்வோர் அணுத்துகளும் அவர்களின் பக்தியின் ஆழத்திற்கு ஆதாரமளிப்பதாய் இருத்தல் வேண்டும். இப்புனித ஆன்மாக்களிடையே நடத்தப்படும் உரையாடல் அத்துணை அறிவூட்டப்பெற்றச் சக்தியினைப் பெற்றிருக்கவேண்டும்; அதன் தாக்கத்தினால் அதே அணுத்துகள்கள் சிலிர்ப்புற்றிடும். "இவ்வுலகினில் அவர்கள் நடந்து கொள்ளும் முறை, அவர்களின் காலடிபடும் தரையானது, “நான் உங்களிலும் மேலாக விரும்பவேண்டிய ஒன்று" ஏனெனில், விவசாயி என்மீது சுமத்தும் பாரத்தினை எத்துணைப் பொறுமையுடன் தாங்கிக் கொள்கின்றேன் என்பதைப் பாருங்கள். அருளுக்கெல்லாம் ஊற்றாகிய அவர் என்னிடம் ஒப்படைத்துள்ள அருள்பேற்றினை இடைவிடாது எல்லாப் படைப்பினங்களுக்கும் அளித்திடும் கருவியாகியுள்ளேன். எனக்கு இத்துணைப் பெருமை வழங்கப்பட்டிருந்தபோதும் படைப்பனைத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அச்செல்வத்திற்கான எண்ணற்ற ஆதாரங்கள் என்னிடம் இருந்தபோதும், “எனது பணிவின் அளவினையும், நான், மனிதர்களின் பாதங்களின் அடியில் என்னை மிதிபடுவதற்கு எந்தளவு பூரண தாழ்மையுடன் அனுமதிக்கின்றேன் என்பதையும்**

**பாருங்கள்" என்ற வார்த்தைகளை அது தங்களை நோக்கிக் கூறிடாதவாறு அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்."[4]**

மேலே குறிப்பிட்டுள்ளவாறு, நமது சக மனிதர்களுக்கான நமது பணிவு கடவுளின் முன்னிலையில் தோன்றும் அன்பிலிருந்து பிறக்கின்றது. குறிப்பிட்ட சில கருப்பொருள்கள் குறித்த நமது புரிதலை ஆழப்படுத்திக்கொள்வதற்காக ஒரு நண்பர் அல்லது அண்டையரின் இல்லத்திற்கு விஜயம் செய்யும்போது, இதே பணிவுடன்தான் நாம் ஒரு பக்தி மனப்பான்மையை உருவாக்கிக்கொள்கின்றோம். உரையாடலின்போது, அங்கு கூடியுள்ளோர் சிந்தனைகள் உட்பட, நாம் நமது சிந்தனைகளை அடிக்கடி கடவுளின்பால் திருப்பி, நமது உள்ளங்களையும் இதயங்களையும் ஒளிரச் செய்திடுமாறு அவரை வேண்டுகின்றோம். இந்த நோக்கத்தை மனதில் கொண்டு பிரார்த்தனைகளிலிருந்து நாம் மனனம் செய்யக்கூடிய பல சொற்றொடர்களும் வாக்கியங்களும் பல உண்டும். இங்கு சில மட்டுமே வழங்கப்பட்டுள்ளன;

**"எங்களது உள்ளங்களை ஒளிபெறச் செய்வீராக. பகுத்துணரும் கண்களும், கவனமுள்ள செவிகளும் எங்களுக்கு அளிப்பீராக."**

**பிரபுவே! தங்களது எல்லையற்ற அருட்கொடைகளை அளித்து, தங்களது வழிகாட்டுதலெனும் ஒளி பிரகாசிக்கச் செய்வீராக."**

**"உண்மையான புரிதல் என்னும் வாயிலைத் திறந்து, நம்பிக்கையெனும் ஒளி பிரகாசத்துடன் வீசச் செய்வீராக.**

**பிரபுவே, எங்களின் முகங்களை ஒளிபெறச் செய்வீராக. அதனால், நாங்கள் உமது ஒளியைப் பார்க்கக்கூடும்..."**

**"தெய்வீக ஒருமைப்பாடெனும் இக் கால வட்டத்தில், உமது கட்டளைக்கு மாறாக நடந்திடும் அனைத்திலிருந்தும் என்னைக் காத்தருளுமாறும்,... ...நான், மிகு ஆர்வத்துடன், என் உள்ளத்தினாலும், மனத்தினாலும், நாவினாலும், உம்மைக் கெஞ்சியவண்ணம் உந்தன்பால் முழுமையாகத் திரும்புகின்றேன்."[9]**

## பகுதி 6

சாஞ்செஸ் தம்பதிகளின் இல்ல விஜயம், அங்கு நடைபெற்ற நித்திய ஒப்பந்தம் பற்றிய கருப்பொருள் உரையாடல் ஆகியவற்றுக்குப் பிறகு அலெயான்ட்ராவின் உள்ளம் மகிழ்ச்சியால்

நிறைந்துள்ளது. “அடுத்த விஜயம் பஹாவுல்லாவின் வாழ்க்கை பற்றி அவர்கள் தங்களின் அறிவை ஆழப்படுத்திக்கொள்வதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். அதற்காக பின்வரும் வழங்கலை அலெயான்ட்ரா பயன்படுத்திக்கொள்வார்:

> பஹாவுல்லா 1817-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12-ஆம் தேதியன்று, பாரசீக நாட்டின் தலைநகரமான தெஹ்ரான் நகரில் பிறந்தார். குழந்தைப் பருவத்திலிருந்தே அவர் வியக்கத்தக்க பண்புகளை வெளிப்படுத்தினார். அவருடைய நடத்தையைக் கண்ட அவரது பெற்றோர்கள், அவர் மகத்துவம் பெறும் விதியினைக் கொண்டிருப்பதை உறுதியாக நம்பினர். பஹாவுல்லாவினுடைய தந்தை, மன்னருடைய அரசவையில் ஒரு பிரபலமான மந்திரியாக இருந்தார். அவர் தமது புதல்வனின் மீது மிகுந்த பாசம் வைத்திருந்தார். ஓரிரவு அவர், பஹாவுல்லா, எல்லையற்ற ஓர் சமுத்திரத்தில் நீந்திக் கொண்டிருந்ததாகவும், அவரது உடல் பிரகாசமாக இருந்து, பரந்த சமுத்திரத்தை ஒளிபெறச் செய்ததாகவும் கனவு கண்டார். நீண்ட கருமையான தலைமுடி அவரது தலையிலிருந்து எல்லா திசையிலும் மிதந்துக் கொண்டிருந்தது. மீன்கள் அவரைத் திரளாகச் சுற்றி ஒவ்வொன்றும் தலைமுடி ஒன்றைப் பற்றிக் கொண்டிருந்தது. மீன்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபோதும், பஹாவுல்லாவின் தலையிலிருந்த ஒரு முடியும் பிரியவில்லை. அவர் எவ்வித தடையுமின்றி தண்ணீரில் நீந்திக் கொண்டிருந்தார். மீன்கள் அனைத்தும் அவரைப் பின்தொடர்ந்து சென்றன. பஹாவுல்லாவின் தந்தையார், விவேகத்திற்குப் புகழ்பெற்ற ஒரு மனிதனிடம் இந்த கனவினை விளக்கும்படி கேட்டுக் கொண்டார். எல்லையற்ற சமுத்திரமானது, உயிர்வாழ் இவ்வுலகம் என்று அவருக்கு விளக்கப்பட்டது. தனித்து நின்று, தனியாகவே பஹாவுல்லா அதன் மீது ஆதிக்கம் செலுத்துவார். திரளான மீன்கள், அவர் உலக மக்களிடையே எழுப்பவிருக்கும் கிளர்ச்சியைக் குறித்தன. எல்லாம் வல்லவரின் தவறாத பாதுகாப்பினை அவர் பெற்றிருப்பார்; இக்கிளர்ச்சிகள் அவரைப் பாதிக்காது.
>
> பஹாவுல்லா பதின்மூன்று அல்லது பதிநான்கு வயதுக்குள்ளேயே, மன்னருடைய அரசவையில் தனது ஞானத்திற்கும், கல்விக்கும் புகழ் பெற்றிருந்தார். அவருக்கு இருபத்திரண்டு வயதானபோது, அவரது தந்தையார் காலமானார். அப்போது அரசாங்கமானது, அதே உயரிய பதவியைப் பஹாவுல்லாவிற்கு வழங்கியது. ஆனால் உலக விவகாரங்களை நிர்வகிப்பதில் பஹாவுல்லா தமது நேரத்தைச் செலவிட விரும்பவில்லை. கடவுளால் தமக்கு நிர்ணயிக்கப்பட்ட பாதையைப் பின்பற்றிச் செல்வதற்காக அரசவையையும் அதன் மந்திரிகளையும் கைவிட்டார். நோயுற்றோர்களுக்கும், ஏழைகளுக்கும் உதவி புரிவதில் தனது நேரத்தைச் செலவழித்தார், விரைவில் அவர் நீதியின் வாகையராக (champion) போற்றப்பட்டார்.

மானிடம் நெடுநாளாகக் காத்திருந்த நீதி, ஒற்றுமை, அமைதி ஆகியவற்றை உலகிற்கு கொண்டு வரவிருக்கும் புதிய இறை அவதாரம் அவதரிக்கும் நாளான, இறைவனுடைய தினத்தின் அருகாமையைப் பிரகடனம் செய்துக் கொண்டிருந்த பாப் பெருமானாரின் சில திருவாசகங்களைப் பஹாவுல்லா தமது இருபத்து ஏழாவது வயதில், ஒரு விசேஷ தூதர் மூலமாக பெற்றுக் கொண்டார். பஹாவுல்லா உடனே பாப் பெருமானாரின் புனித செய்தியை ஏற்றுக் கொண்டு, அவரது மிக ஆர்வமிக்கச் சீடர்களில் ஒருவராகினார். ஆனால் அந்தோ, பாரசீக மக்கள் மீது ஆட்சி செலுத்தியவர்கள், தங்கள் சொந்த சுயநல ஆசைகளால் குருடாகிவிட்ட பாப் பெருமானாரின் பற்றாளர்களைக் கொடுமையாகத் துன்புறுத்தத் துவங்கினர். தமது உயர்குடிப்பிறப்பிற்குப் பெயர் பெற்றவராய் இருந்தபோதும் கூட, பஹாவுல்லா விடப்படவில்லை. பாப் பெருமானார் பிரகடனத்தின் எட்டு வருடங்களுக்குப் பிறகும், பாப் அவர்கள் தியாக மரணம் அடைந்த இரண்டு வருடங்களுக்குப் பிறகும், பஹாவுல்லா “கருங்குழி” என அழைக்கப்பட்ட இருள் நிறைந்த பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டார். அவரது கழுத்தைச் சுற்றி போடப்பட்ட சங்கிலிகள், அவர் தமது தலையைக்கூட தூக்க முடியாத அளவிற்குக் கனமாக இருந்தன. இங்கு, பஹாவுல்லா நான்கு மோசமான மாதங்களைக் கடும் துன்பத்தில் கடத்தினார். இருப்பினும், இதே பாதாளச் சிறையில்தான் கடவுளின் ஆவி பஹாவுல்லாவின் ஆன்மாவை நிரப்பி, எல்லா காலங்களின் வாக்களிக்கப்பட்டவர் அவரே என்பதை வெளிப்படுத்தியது. இந்த இருண்ட சிறையிலிருந்து, பஹாவுல்லா என்னும் கதிரவன் உதயமாகி படைப்பு முழுவதன் மீதும் ஒளிவீசியது.

பஹாவுல்லா, நான்கு மாதங்கள் கருங்குழியில் இருந்த பிறகு அவரது உடைமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு அவரும், அவரது குடும்பத்தினரும் நாடு கடத்தப்பட்டனர். குளிர்காலத்தின் கடுமையான குளிரில், அவர்கள் பாரசீக நாட்டின் மேற்கத்திய மலைகள் வழியாக, அப்போது ஓட்டொமான் சாம்ராஜ்யத்தில் ஒரு நகரமாகவும், இப்போது ஈராக் நாட்டின் தலைநகராகவும் இருக்கும் பாக்தாத் நகரை நோக்கிச் சென்றனர். நூற்றுக்கணக்கான மைல்கள் பனியும் பனிக்கட்டியும் நிறைந்த பூமியின் மீது நடந்து, விதியிலக்கு மிக்க அந்நகருக்குச் சென்ற அவர்களது துன்பங்களை வார்த்தைகளால் வருணிக்க முடியாது.

பஹாவுல்லாவின் புகழ், விரைவில் பாக்தாத் முழுவதும் மற்றும் அவ்வட்டாரத்தின் மற்ற நகரங்களுக்கும் பரவியது; நாடு கடத்தப்பட்ட இக்கைதியின் வாசலுக்கு வந்து அவரது ஆசீர்வாதங்களைப் பெறும் மக்களின் கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. ஆனால், அவரது புகழைக் கண்டு பொறாமையுற்ற சிலரும் இருந்தனர். அவர்களுள் பஹாவுல்லாவின் அன்பான பராமரிப்பின் கீழ் வாழ்ந்து வந்த அவரது ஒன்றுவிட்ட சகோதரரான மிர்ஸா யாஹ்யாவும் ஒருவராக இருந்தார். மிர்ஸா யாஹ்யாவின் சூழ்ச்சிகள் பாப் பெருமானாரின் நம்பிக்கையாளரிடையே ஒற்றுமையின்மையை விளைவித்து,

பஹாவுல்லாவுக்குப் பெரும் துன்பத்தை வருவழைத்தது. ஓரிரவு யாருக்கும் சொல்லாமல் அவர் தமது இல்லத்தை விட்டு, குர்திஸ்தான் மலைகளுக்குச் சென்று விட்டார். அங்கு அவர் தனிமையில் வாழ்ந்து, பிரார்த்தனை மற்றும் தியானம் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தார். அவர் ஒரு சிறிய குகையில் வாழ்ந்து மிகவும் எளிமையான உணவை அருந்தி வந்தார். அவருடைய பெயர் என்ன என்பதும் அவர் எங்கேயிருந்து வந்தார் என்பதும் யாருக்கும் தெரியவில்லை. ஆனால் படிப்படியாக அவ்வட்டாரத்தின் மக்கள், இறைவனால் அருளப்பட்ட ஞானத்தைக் கொண்ட உயர்ந்த முனிவர் ஒருவரைப் பற்றி, “பெயரில்லா ஒருவரைப்” பற்றி, பேச ஆரம்பித்தனர். இந்தப் புனிதமானவரைப் பற்றிய செய்தியைக் கேட்ட பஹாவுல்லாவின் மூத்த மகனான அப்துல்-பஹா, தமது அன்பிற்குரிய தந்தையின் அறிகுறிகளை உடனடியாகக் கண்டு கொண்டார். பாக்தாத்திற்குத் திரும்புமாறு மன்றாடி, விசேஷ தூதுவர் மூலம் பஹாவுல்லாவிற்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. இதனை அவர் ஏற்றுக் கொண்டு, இரண்டு வருடங்கள் நீடித்த வேதனைமிக்க பிரிவு காலத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார்.

பஹாவுல்லா இல்லாதபோது, பாப்’யி சமூகத்தின் நிலைமை வேகமாக சீர் குலைந்தது. துன்புறுத்தப்பட்டுக் குழப்பமடைந்திருந்த பாப் பெருமானாரின் நம்பிக்கையாளர்களுக்கு பஹாவுல்லா புத்துயிரூட்டத் துவங்கினார். அவர் தமது சொந்த, உயர்வுமிக்க ஸ்தானத்தை இன்னும் அறிவிக்காத போதிலும், அவரது திருமொழிகளின் சக்தியும் விவேகமும், அதிகப்படியான பாப்’யிகளின் விசுவாசத்தையும், வாழ்க்கையின் எல்லா துறைகளிலுள்ள மக்களின் வியப்பினையும் பெற்றது. ஆனால், மதப்பிடிவாத முஸ்லீம் குருமார்களும் பொறாமை அடைந்திருந்த தமது சகோதரர் மிர்ஸா யாஹியாவும், இவ்வளவு அதிகமான ஆன்மாக்கள் மீது பஹாவுல்லா செலுத்திய பிரமாண்டமான வசீகரச் சக்தியைக் கண்டு பொறுக்க முடியவில்லை. அவர்கள் அதிகாரிகளிடம் புகார் மேல் புகார் செய்து, இறுதியில் பாரசீக அரசாங்கம், ஒட்டொமான் சாம்ராஜ்யத்தின் சில அதிகாரிகளுடன் இணைந்து, இம்முறை, பஹாவுல்லாவைத் தமது தாய்நாட்டிலிருந்து, மேலும் வெகு தூரத்திலுள்ள, கான்ஸ்டாண்டினோப்பில் நகரத்திற்கு, நாடு கடத்தினர்.

1863-ஆம் வருடம் ஏப்ரல் திங்கள், பாக்தாத் ஜனத்தொகைக்கு ஒரு துக்கமான மாதமாக இருந்தது. தாங்கள் நேசிக்கத் துவங்கிய அவர், தங்களது நகரை விட்டு, தாங்கள் அறியாத ஓர் இடத்திற்குச் செல்லவிருந்தார். பஹாவுல்லா தாம் செல்வதற்குச் சில நாட்களுக்கு முன் நகரின் வெளிப்புறத்தில் இருந்த ஒரு தோட்டத்திற்குச் சென்று, அங்கு ஒரு கூடாரத்தை எழுப்பி, 12 நாட்களுக்குத் தமக்குப் பிரியாவிடை கூற வருகை தந்தோரை வரவேற்றார். பாப் அவர்களைப் பின்பற்றியவர்கள், வருத்தம் நிறைந்த உள்ளங்களுடன் இத்தோட்டத்திற்கு வந்தனர். இவர்கள் சிலர் பஹாவுல்லாவின் நாடுகடத்துதலின் அடுத்தக் கட்டத்திற்கு அவருடன் செல்வர். ஆனால், பலர் அவருடன் நெருங்கியிருக்கும் பாக்கியத்தை இழந்து,

அங்கேயே தங்க வேண்டியிருக்கும். ஆனால், அந்த நேரம் ஒரு துக்கமான நேரமாக இருக்க இறைவன் விரும்பவில்லை. எல்லையற்ற அவரது அருட்கொடையின் கதவுகள் அகலத் திறக்கப்பட்டு, பாப் பெருமானாரால் வாக்களிக்கப்பட்டவர்—கடவுள் வெளிப்படுத்தவிருக்கும் அவர்—தாமே என பஹாவுல்லா அவரைச் சுற்றியுள்ளோருக்குப் பிரகடனம் செய்தார். துக்கமானது எல்லையற்ற மகிச்சிக்கு வழிவகுத்தது; உள்ளங்கள் ஊக்குவிக்கப்பட்டு, ஆன்மாக்கள் அவரது அன்பெனும் நெருப்பினால் தூண்டப்பட்டன. ஏப்ரல் மாதத்தின் இந்த பன்னிரண்டு நாள்களும், ரித்வான் திருவிழாவாக, பஹாவுல்லாவினால் உலகைத் தழுவும் அவரது அருட்பணி பிரகடனத்தின் ஆண்டுவிழாவாகக் கொண்டாடப்படுகின்றன.

கான்ஸ்டாண்டினோப்பில், ஒட்டொமான் சாம்ராஜ்யத்தின் ஆசனமாக இருந்தது. இங்கே, பஹாவுல்லாவின் மிகுந்த ஞானமும், தனிப்பட்ட வசீகரமும் மீண்டும் அதிகப்படியான மக்களைக் கவர்ந்திடத் துவங்கின. மதப்பிடிவாத முஸ்லீம் மதகுருக்கள், அவர் இனிமேலும் கான்ஸ்டான்டினோப்பிலில் இருக்கக்கூடாது என முணுமுணுக்கத் துவங்கி, ஏட்ரியனோப்பில் நகருக்கு அவரை நாடுகடத்தும்படி அதிகாரிகளை வற்புறுத்தினர். தாம் நான்கு வருடங்கள் வாழ்ந்த ஏட்ரியனோப்பிலில், பஹாவுல்லா உலகின் மன்னர்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் நிருபங்கள் எழுதி, கொடுமைப்படுத்தும் வழிமுறைகளைக் கைவிட்டு, மக்களின் நலனுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். பிறகு அவரது பகைவர்கள் ஒரு மிகவும் கொடூரமான தண்டனையை மனதில் எண்ணினர். அந்தச் சாம்ராஜ்யம் முழுவதிலும் மிக மோசமான தண்டனைக்குரிய குடியிருப்பாக இருந்த அக்கா சிறைநகருக்கு அவரும் அவரது குடும்பமும் நாடு கடத்தப்படுவர். “அந்தச் சிறை நகரத்தின் கொடுமையான சூழ்நிலைகளில் அவர் நிச்சயமாக அழிந்து விடுவார்” என அந்த அற்பமனங் கொண்ட மனிதர்கள் நினைத்தனர். இறைவனே ஆரம்பித்து விட்டதைத் தாங்கள் தடுக்க இயலும் என அவர்கள் கற்பனை செய்தனர்.

அக்காநகரில், பஹாவுல்லா அனுபவித்த துன்பங்கள், இங்கு விவரிக்க முடியாத அளவிற்கு ஏராளமானவை. சௌகர்யத்திற்கான ஒவ்வொரு உபாயத்தையும் அவர் இழந்திருந்து, இரவும் பகலும் பகைவர்களால் சூழப்பட்டிருந்தார். ஆனால் சிறைவாச சூழ்நிலைகள் படிப்படியாக மாறின. அக்காநகரில் வசித்தவர்களும் அதன் அரசாங்கமும், தங்கள் நகரத்திற்கு நாடுகடத்தப்பட்ட பஹாய்கள் அடங்கிய சிறிய கூட்டத்தினரின் கபடமற்ற தன்மையை உணர ஆரம்பித்தனர். இங்கே மீண்டும், அவரது உயர்ந்த ஸ்தானத்தைப் பெரும்பாலான மக்கள் உணராமல் இருந்தபோதும் இந்தச் சிறப்பு மிகுந்தவரின் ஞானத்தினாலும், அன்பினாலும் அவர்கள் கவரப்பட்டனர். ஒன்பது வருடங்களுக்குப் பிறகு, இந்தச் சிறை நகரின் கதவுகள், பஹாவுல்லாவிற்காகவும் அவரைப் பின்பற்றியவர்களுக்காவும் திறக்கப்பட்டன. அவரது அன்புத் திருமகனாரான அப்துல்-பஹா நகரின் வெளிப்புறத்தில் ஓர் இல்லத்தை வாடகைக்கு அமர்த்திட முடிந்தது. அங்கு பஹாவுல்லா மீதமிருந்த தமது பதின்மூன்று

வருடகாலத்தை அமைதியாகவும் மனச்சாந்தியுடனும் கழித்திட முடிந்தது. இவ்விடத்தை இன்று நாம் பாஹ்ஜி மாளிகை என அறிகின்றோம். இங்குதான் பஹாவுல்லா 1892-ஆம் ஆண்டு மே மாதம் தமது மாட்சிமை மற்றும் புகழின் உச்சக்கட்டத்தில் விண்ணேற்றம் அடைந்தார்.

பஹாவுல்லா உலக அமைதி, சகோதரத்துவம் ஆகியவற்றின் கொடியை உயர்த்தி, கடவுள் திருவாக்கை வெளிப்படுத்தினார். தமது எதிரிகள் தமக்கு எதிராகச் சக்திகளை ஒன்று திரட்டியபோதும், தெஹ்ரான் சிறையில் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தபோது இறைவன் பஹாவுல்லாவுக்கு வாக்களித்தபடி, அவர் அவர்களை வெற்றி கொண்டார். தமது சொந்த வாழ்நாளின்போது அவரது தெய்வீகச் செய்தி, ஆயிரக்கணக்கான மக்களின் உள்ளங்களை மீண்டும் உயிர்பித்து. இன்று அவரது போதனைகள் உலகமெங்கும் தொடர்ந்து பரவுகின்றன. மனிதகுலத்தை ஒரே சர்வலோக சமயத்தில், ஒரே பொதுவான நம்பிக்கையில் ஒன்று படுத்துவது என்ற அவரது இறுதி குறிக்கோள் நிறைவேற்றப்படுவதை எதுவுமே தடுக்க முடியாது.

பஹாவுல்லாவின் வாழ்க்கை வரலாறு பற்றிய மேற்கண்ட குறிப்பு சற்று நீளமாக உள்ளது. கீழ்க்கண்ட பயிற்சிக் குறிப்புக்களை மேற்கொள்வதற்கு முன் நீங்கள் மேற்கண்ட குறிப்பினை உங்கள் குழுவில், பகுதிப் பகுதியாக பல முறைப் படித்து இந்தக் குறிப்பிலுள்ள விஷயங்களை நன்றாக அறிந்து கொண்டு, அவ்விஷயங்களை உங்கள் சொந்த வார்த்தைகளில் வழங்க முடியும் வரை ஒருவருக்கொருவர் கேள்விகள் கேட்க வேண்டும். பின்வரும் வரைபடம் பஹாவுல்லா நாடுகடத்தப்பட்ட பாதையையும் அதன் வழியே நடைபெற்ற சம்பவங்களையும் ஞாபகப்படுத்திக்கொள்ள உங்களுக்கு உதவிடும்.




1. மேற்கண்ட விவரக்குறிப்புகளின் அடிப்படையில், பஹாவுல்லாவின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளின் தொடர்வரிசையை கீழே வழங்கப்பட்டுள்ள காலியிடத்தில் எழுதுவது உங்களுக்கு உதவியாக இருக்கும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

2. பஹாவுல்லாவின் வாழ்க்கை என்னும் கருப்பொருள் பற்றிய ஒரு கலந்துரையாடலில், சம்பவங்களின் தொடர்வரிசைக்கு அப்பாற்பட்டு அடிக்கோடிடப்பட வேண்டிய பல கருத்தாக்கங்கள் உள்ளன. அவற்றுள், மானிடத்தின்பாலான அவரது அன்பின் காரணமாக அவர் அனுபவித்த துன்பங்கள், எதிர்ப்பு ஆகிவற்றின் எதிரிலும் அவரது சமயம் அடைந்துள்ள அசாதாரன வெற்றி மீதான பிரதிபலிப்பு குறிப்பான முக்கியத்தும் உடையது. பின்வரும் சொற்கள் நமது சிந்தனையிலும் உள்ளங்களிலும் பொறிக்கப்படுமாக:

**“புராதன அழகானவர், மனித இனம், அதன் அடிமைத்தளையிலிருந்து விடுதலைப்பெற வேண்டும் என்பதற்காகவே, அவர் சங்கிலியினால் பிணைக்கப்படுவதற்கு இணங்கி இருக்கின்றார்; உலகனைத்தும் உண்மையான சுதந்திரம் பெறக்கூடும் என்பதற்காகவே, அவர், அதி வலுமிக்கக் கோட்டையினுள் கைதியாக்கப்படுவதை ஏற்றுக் கொண்டுள்ளார்! உலக மக்கள் எல்லையிலாக் களிப்புற்று, மகிழ்ச்சியினால் நிரப்பப்பட வேண்டும் என்பதற்காக அவர் கடுந்துன்பமெனும் கிண்ணத்தை அடிமண்டிவரை உலரச் செய்துள்ளார். இதுவே இரக்கமும், அதி கருணையும் மிக்க உங்களது பிரபுவின் அருளிரக்கமாகும். இறைவனின் ஒருமைத்தன்மையில் நம்பிக்கையுடையோரே, நீங்கள் மேன்மைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக யாம் இழிவுப்படுத்தப்படுவதை ஏற்றுக் கொண்டோம். நீங்கள் வளம் பெற்றுத் தழைத்தோங்க வேண்டும் என்பதற்காகவே யாம் பல்வேறு துன்பங்களை அனுபவித்திட்டோம். உலகனைத்தையுமே புதுப்பிக்க வந்துள்ள அவரை, எவ்வாறு, இறைவனுடன் பங்காளிகளாகச் சேர்ந்துள்ளவர்கள் மிகப்பாழடைந்த நகரங்களுள் ஒன்றினில் வற்புறுத்திக் குடியிருக்கச் செய்துள்ளனர் என்பதைப் பாருங்கள்!”**[10]

3. பஹாவுல்லாவின் துன்பங்களைப் பற்றிப் பேசும்போது, தமது எதிரிகளுக்கு முன் திக்கற்ற பலியாளாக அவரை அறிமுகப்படுத்தாமல் இருப்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். மனிதக் குலத்தை விடுவிப்பதற்காக, அவர் சங்கிலிகளால் பிணைக்கப்பட சம்மதித்தார். அவரது வாழ்க்கையின் கதை பெருந்துயரங்களால் நிறைந்திருந்தாலும், அதன்

சாராம்சத்தில் அது வெற்றியின் கதையே ஆகும். பஹாவுல்லாவின் வாழ்க்கை வரலாறு பற்றிய உங்களது தற்போதைய அறிவின் அடிப்படையில், உங்கள் பயிற்றுநரின் உதவியுடன் அவரது துயரங்கள் மற்றும் வெற்றிகள் பற்றி ஒரு சிறிய உரையைத் தயாரிக்க முடியுமா? கீழ்க்காணும் கேள்விகள் உங்களுக்கு உதவியாக இருக்கும்.

அ. சங்கிலிகளால் பிணைக்கப்பட பஹாவுல்லா ஏன் சம்மதித்தார்? ______________________

______________________________________________________________________

ஆ. தாம் ஒரு கைதியாக்கப்படுவதற்கு பஹாவுல்லா ஏன் சம்மதித்தார்? ____________________

______________________________________________________________________

இ. துன்பமெனும் கிண்ணத்திலிருந்து பஹாவுல்லா ஏன் பருகினார்? ____________________

______________________________________________________________________

ஈ. தாம் தாழ்த்தப்படுவதை பஹாவுல்லா ஏன் ஏற்றுக்கொண்டார்? ______________________

______________________________________________________________________

உ. பன்மடங்கான சித்திரவதைகளை பஹாவுல்லா ஏன் அனுபவித்தார்? ________________

______________________________________________________________________

ஊ. தாம் ஒரு சக்தியற்றவர் என்னும் காரணத்தினால்தான் பஹாவுல்லா தமது துன்பங்களை ஏற்றுக்கொண்டாரா? ________________________________________________

ஈ. பஹாவுல்லா தமது எதிரிகளின் முன் சக்தியற்றவராக இல்லை என்றால் அவர் ஏன் துன்பப்பட சம்மதிக்க வேண்டும்? __________________________________________________

______________________________________________________________________

## பகுதி 7

அலெயான்ட்ராவின் இரண்டாவது வருகையும் முதலாவது போன்றே மகிழ்ச்சிமிக்கதாக இருந்தது. பஹாவுல்லாவின் வாழ்க்கை பற்றி சாஞ்செஸ் தம்பதி நன்கு பரிச்சயமாகியும் அலெயான்ட்ராவின் வழங்கல்களிலிருந்து மேலும் அறிந்துகொள்ளவும், பஹாவுல்லாவின் துன்பங்கள் பற்றிய விவரங்கள் அவர்களின் மனதைத் தொட்டிருந்தன. “தலைமைத்துவம் மற்றும் லௌகீக அதிகார வெறி கொண்டோரின் கரங்களில் கடவுளின் அவதாரபுருஷர்கள் எப்போதும் கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளனர் என்றே தோன்றுகிறது” என திருமதி ஸாஞ்செஸ் சிந்தனையோடு இடையில் கூறினார். தான் மனனம் செய்திருந்த மேற்கோளை பகிர்ந்துகொள்வதற்கு அது பொருத்தமான தருணம் என அலெயான்ட்ரா தீர்மானித்தார்—அதை கடைசி பகுதியின் படிப்பாய்விலிருந்து நீங்களும் அறிவீர்கள். அதில், நாம்

ஒடுக்குமுறையிலிருந்து விடுபடவும் நிலையான மகிழ்ச்சியை அடையவும் மானிடத்திற்காக தாம் சகித்துக்கொண்ட துண்பங்கள் பற்றி பஹாவுல்லா பேசுகிறார். மூன்று நண்பர்களும் அன்றைய கலந்துரையாடலினால் மிகவும் உற்சாகமடைந்திருந்தனர்.

தனது அடுத்த வருகை குறித்து சிந்திக்கையில், அப்துல்-பஹாவின் ஸ்தானமே கலந்துரையாடலுக்குப் பொருத்தமான ஒரு கருப்பொருளாக இருக்குமென தீர்மானித்தார். கலந்துரையாடலில் பின்வரும் விவரங்கள் பகிர்ந்துகொள்ளப்படுவதை அலெயான்ட்ரா உறுதிப்படுத்திகொள்வார்.

> பஹாவுல்லாவின் மூத்த குமாரராகிய அப்துல்-பஹா மனித வரலாற்றில் மிகவும் அபூர்வமான ஒரு மனிதராவார். கடந்தகால சமயம் எதிலும் அவரைப் போன்ற ஒருவரை நாம் காண முடியாது. அப்துல்-பஹா தமது தந்தையாரின் தெய்வீக ஸ்தானத்தை தமது சிறுவயதிலேயே கண்டுணர்ந்திருந்தார்; அவரது நாடுகடப்பு, துன்பங்கள் ஆகியவற்றில். பங்கேற்றிருந்தார். பஹாவுல்லா தமது மறைவுக்குப் பிறகு பஹாய் சமூகத்தை அப்துல்-பஹாவின் கவனம் மற்றும் பாதுகாப்பில் விட்டுச்சென்றார். பஹாவுல்லா தமது அதி மகத்துவமிக்க திருவெளிப்பாட்டை மட்டுமின்றி, எவரது அறிவு விவேகம் ஆகியவற்றின் மூலம், உலகம் வழிகாட்டப்பட்டு ஒளிபெறும் என்று அவர் கூறிய அந்த அவரது திருமகனாரையும் நமக்கு வழங்கியுள்ளதன் மூலம் மானிடத்திற்கு அவர் எத்தகைய ஒரு மகத்தான அருட்கொடையை அருளிச்சென்றுள்ளார் என்பதை நம்மால் முழுமையாக உணர்ந்து பாராட்ட முடியாது.
>
> அப்துல்-பஹாவின் வாழ்க்கை மற்றும் உரைகளைப் படிப்பாய்ந்திடும்போது, இந்த அருளாட்சியில் அவர் வகிக்கும் தனித்துவமான ஸ்தானத்தைப் பற்றிய அகப்பார்வைகளை நாம் பெறுகின்றோம். இந்த ஸ்தானம் குறித்த மூன்று அம்சங்கள் நாம் மனதில் கொண்டிருக்க வேண்டியவையாகும்.
>
> முதாலவதாக, அப்துல்-பஹா, பஹாவுல்லாவினுடைய திருவொப்பந்தத்தின் திருமையம் ஆவார். பஹாவுல்லா தமது நம்பிக்கையாளரிடையே ஓர் உடன்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு, அந்த திருமையத்தின்பால் தங்கள் உள்ளங்களைத் திருப்புமாறும், அதற்கு முற்றிலும் விசுவாசமாக இருந்திடவும் கூறினார். அப்துல்-பஹா தமது உயில் மற்றும் சாசனத்தில், தமது மறைவுக்குப் பிறகு அனைவரும் திரும்ப வேண்டிய மையமாக ஷோகி எஃபென்டியைப் பெயரிட்டார். இன்று, பஹாவுல்லாவின் மிகவும் வெளிப்படையான கட்டளை, அப்துல்-பஹா, பாதுகாவலர் இருவரும் வழங்கியுள்ள தெளிவான வழிகாட்டல் ஆகியவற்றின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உலக நீதிமன்றமே அந்த மையமாக இருக்கின்றது. திருவொப்பந்தத்தின் சக்தியே பஹாய் சமூகத்தை ஒன்றாக இணைத்தும், அதை பிரிவினை மற்றும் சிதைவிலிருந்து பாதுகாக்கின்றது.

இரண்டாவதாக, அப்துல்-பஹா பஹாவுல்லாவின் திருவாக்குகளுடைய தவறுபடா விளக்கவுரையாளர் ஆவார். பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு அவ்வளவு பரந்ததாகவும், அவற்றுள் கோவில் கொண்டுள்ள அர்த்தங்கள் அவ்வளவு ஆழமாக இருக்கின்ற காரணத்தினால், தாமே அருட்தூண்டலூட்டும் ஒரு விளக்கவுரையாளரை நியமிப்பது அவசியமென அவர் கருதினார். ஆதலால், அப்துல்-பஹாவின் பன்மடங்கான நிருபங்களையும் அவரது அதிகாரபூர்வ உரைகளின் எழுத்துவடிவங்களையும் படிப்பாய்வு செய்வதன் மூலம் இனி வரும் பல தலைமுறைகளாக பஹாவுல்லாவின் போதனைகளை மானிடம் புரிந்துகொள்ள இயலும். அப்துல்-பஹாவுக்குப் பிறகு பாதுகாவலரே பஹாவுல்லா போதனைகளின் விளக்கவுரையாளராக இருந்தார்; அவருடன் விளக்குவுரை செய்திடும் பணி முடிவுற்றது; இனி பஹாவுல்லா அருளாட்சியின் மீதமுள்ள காலத்தில் அவரது சொற்களை விளக்கவுரை செய்திடும் அதிகாரம் எவருக்கும் கிடையாது.

கடந்தகாலத்தில், அவற்றின் புனித சாஸ்திர உரைப்பகுதிகளின் வெவ்வேறு விதமான விளக்கவுரைகளினால் ஒவ்வொரு மதமும் பிரிவினைகளால் பாதிக்கப்பட்டது. ஆனால், இந்த அருளாட்சியில்,பஹாவுல்வா கூற்றுகளின் அர்த்தம் குறித்த எவ்வித சந்தேகமும் இல்லாத நிலையில், எல்லாரும் அப்துல்-பஹா, பாதுகாவலர் இருவரின் விளக்கவுரைகளின்பால் திரும்புகின்றனர். சந்தேகம் ஏதும் இருப்பின், தெளிவுரைக்காக நாம் உலக நீதிமன்றத்தின்பால் திரும்பலாம். இதன்மூலம் போதனைகளின் அர்த்தம் குறித்து எவ்வித முரண்பாடுகளுக்கும் இடமில்லாமலும் சமயத்தின் ஒருமை பாதுகாக்கப்பட்டுமுள்ளது.

மூன்றாவதாக, அப்துல்-பஹாவே அவரது திருத்தந்தையாரின் பூரண விளக்கவுரையாளர் ஆவார். அத்தகைய பூரணத்துவத்தின் அளவை அடைய நாம் எதிர்ப்பார்ப்பது இயலாத ஒன்றெனினும், அவரை நாம் நமது கண்களுக்கு முன் நிறுத்தி அவரது உதாரணத்தைப் பின்பற்ற முயலவேண்டும். அன்பு குறித்து திருவாக்குகளில் நாம் படிக்கும்போது நாம் அப்துல்-பஹாவின்பால் திரும்பலாம், அங்கு அன்பு மற்றும் கருணையின் சாரத்தையே நாம் காணலாம். தூய்மை, நீதி, நேரிமை (rectitude), மகிழ்ச்சி, வள்ளன்மை ஆகியன பற்றி படிக்கும்போது நாம் அவர்பால் திரும்பி, அவரது வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கலாம்; அவர் இப்பண்புகளை மிகுந்த பூரணத்துவத்துடன் எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதைக் காணலாம்.

நிச்சயமாகவே,, அவரது சேவகத்தன்மையே அப்துல்-பஹாவின் அடையாளமாகும். அப்துல்-பஹா என்னும் பெயரின் அர்த்தம் “பஹாவின் சேவகர்” என்பதாகும். அவுருக்கு சாற்றப்பட்ட சிறப்புப்பெயர்களில் அவர் இந்தப் பெயரையே மற்ற பெயர்களுக்கு மேல் விரும்பினார்.

பின்வரும் அப்துல்-பஹாவின் சொற்கள், சேவை செய்வதற்கான அவரது பேராவலின் வெளிப்பாடுகளாகும்.

**“என் பெயர் அப்துல்-பஹா. என் தகுதி அப்துல்-பஹா. என் மெய்நிலை அப்துல்-பஹா. என் புகழ் அப்துல்-பஹா. திவ்ய பேரழகர்பால் என் அடிமைப்பாடே என் பேரொளியும் பிரகாசமும் மிக்க கிரீடமாகும். மனிதகுலத்திற்கான என் சேவகமே எனது நிரந்தர சமயம்... அப்துல்-பஹாவைத் தவிர எனக்கு வேறு பெயரோ, பட்டமோ, குறிப்பீடோ, பாராட்டோ கிடையாது இனி எனக்கு இருக்கப் போவதும் இல்லை. இதுவே என் பேராவல். இதுவே என் பெரும் ஏக்கம். இதுவே என் நித்திய வாழ்வு. இதுவே எனது என்றும் நிலையான புகழொளி.”**[11]

தெளிவாகவே, தனது அடுத்த விஜயத்தின்போது மிகவும் தனித்துவமான ஒருவரைப் பற்றிய ஓர் அறிமுகத்தையே அலெயான்ட்ரா சாஞ்ச்செஸ் தம்பதியுடன் பகிர்ந்துகொள்ள திட்டமிடுமிடுகிறார்; இந்த அருளாட்சியில் அப்துல்-பஹாவின் ஸ்தானம் குறித்த அவர்களின் பாராட்டுணர்வு இனி வரும் வருடங்களில் தொடர்ந்து வளர்ச்சயுறும். உங்கள் சொந்த வாழ்க்கையிலும் நீங்கள் உங்கள் சேவை பாதையில் நடக்கும்போது, அவரது உதாரணத்தை மனதில் நினவுகூர்ந்திடவும் அவரது சொற்கள் மீது பிரதிபலித்திடவும் நீங்கள் பல வாய்ப்புகளைப் பெறுவீர். ஏற்கனவே, கடந்த பாடப்பிரிவில், அவரது சில கூற்றுகளுடன் நீங்கள் பரிச்சயப்படுத்திக் கொண்டுள்ளீர். அவரது நிருபங்களிலும் பொது சொற்பொழிவுகளிலும் தமது எண்ணங்களை வெளிப்படுத்தியுள்ள அதே விதத்தில் நீங்களும் வெளிப்படுத்திட ஊக்குவிக்கப்பட்டீர். இப்போதைக்கு, அவரது ஸ்தானம் குறித்த உங்களுடைய தற்போதைய புரிதலை வலுப்படுத்திக்கொள்ள, மேலே குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விஷயங்களை உங்கள் குழுவினருடன் சேர்ந்து நீங்கள் கலந்தாலோசித்து அவற்றை நன்றாக உச்சரிக்கப் பழக வேண்டும். மேற்கோளிடப்பட்ட உரைப்பகுதியைப் பிரதிபலிப்பது சேவை பாதையில் நீங்கள் மேம்பாடு காண்பதற்கான உங்கள் முயற்சிகளில் உங்களுக்கு உத்வேகமூட்டிடும்.

## பகுதி 8

ஸாஞ்ச்செஸ் தம்பதியை சென்று காண ஆரம்பித்ததிலிருந்து அலெயான்ட்ராவின் மனதில் ஒரு கேள்வி எழுந்துகொண்டிருந்தது: அவர்கள் அந்த அண்டைப்புறத்தில் சமூக நிர்மாணிப்பு செயல்முறையின் உறுதிபடுத்தப்பட்ட மற்றும் ஆக்ககரமான முதன்மையாளர்களாகிட கலந்துரையாடல்களுக்கான எந்தக் கருப்பொருள்கள் உதவியாக இருக்கும் என்பது. ஒருபுறம், பிரார்த்தனை, ஆன்மாவின் அமரத்துவம் (immortality) கடவுளின் அன்பில் பற்றுறுதி போன்ற கருப்பொருள்களை அவர்களுடன் கலந்துரையாட அலெயான்ட்ரா நோக்கங்கொண்டுள்ளார்,

ஏனெனில், அவர்களின் ஆன்மீக வாழ்வின் அடித்தலங்கள் தொடர்ச்சியாக வலுப்படுத்தப்பட்டு வரவேண்டும். மறுபுறம், படிப்படியாக உருவாக்கப்பட்டுவரும் சமூகம் குறித்த ஒரு தொலைநோக்கை அவர்கள் பெறுவதும் அதனை நனவாக்கிட தங்களால் மதிப்புமிக்க பங்களிப்புகளை அவர்கள் செய்திட முடியும் என்பதை அவர்கள் அறிவதும் முக்கியம். சாஞ்செஸ் தம்பதிகளுடன் அப்துல்-பஹாவின் ஸ்தானம் குறித்த தனது உரையாடலுக்குப் பிறகு, அவர்களுடன் தனது அடுத்த வருகையின் கருப்பொருள் என்னவாக இருக்க வேண்டுமென்பதை அலெயான்ட்ரா படிப்படியாக உணர்ந்தார். "மக்களை ஒன்றுபடுத்துவதற்கான சமயத்தின் நோக்கம் குறித்து அவர்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றனர்," என அவர் நினைத்தார். "ஆதலால், ஓர் ஒற்றுமையான சமூகத்தை எவ்வாறு உருவாக்கி பராமரிப்பது என்பதே நாம் ஆராய வேண்டிய அடுத்த கருப்பொருளாக இருக்க வேண்டும்."

தனது அடுத்த வருகையை, தற்போது அண்டைப்புறத்தில் ஒரு சிறு நண்பர்கள் குழுவினரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை வர்ணிப்பதன் மூலம் அலெயான்ட்ரா ஆரம்பிக்கின்றார். "நமது எண்ணிக்கை அதிகரித்து வரும்போது, நாம் நமது சிந்தனையிலும் நமது செயல்களிலும் மேன்மேலும் அதிக ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதே நாம் தாங்க வேண்டிய மிகவும் சவால்கள்மிக்க அடுத்த கடமையாகும்," என அவர் விளக்குகிறார். இதை நீங்கள் ஒப்புக்கொண்டால், இன்று நாம் ஒற்றுமை குறித்த கருப்பொருளை ஆராயலாம்."

"சமூகத்தின் மேம்பாட்டிற்கு ஒற்றுமை எவ்வளவு முக்கியம் என்பதை என்னால் காண முடிகிறது," என திருமதி ஸாஞ்செஸ் கூறுகிறார்.

"பார்க்கப்போனால் ஒற்றுமை குறித்த பஹாவுல்லாவின் செய்தியே எங்கள் உள்ளங்களை அவரது போதனைகளின்பால் ஈர்த்தது," என்றார் திரு சாஞ்செஸ்.

"நான் பல கருத்துகளைத் தேர்ந்தெடுத்து அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு மேற்கோளைத் தேடி எடுத்துள்ளேன். உங்களுக்கு ஆட்சேபனை இல்லையெனில் அவற்றை ஒவ்வொன்றாக நாம் விவாதிக்கலாம்,"என்றாள் அலெயான்ட்ரா.

கீழே அலெயான்ட்ராவினுடைய யோசனைகளின் பட்டியல் உள்ளது:

- நமது சமூகம் உண்மையாகவே ஒற்றுமையுடன் இருக்க வேண்டுமானால் நாம் ஒவ்வொருவரும் சச்சரவு, பகைமை ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். பஹாவுல்லா பின்வருமாறு கூறுகின்றார்:

**"நித்திய மெய்ம்மையான அவரே எனக்குச் சாட்சி பகர்கின்றார்! இந்நாளில், இறைவனின் நேசர்களிடையே கருத்துவேறுபாடு, பூசல், சச்சரவு, பகைமை, அக்கறையின்மை ஆகியவைப்போன்று, இச்சமயத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடியவை வேறெதுவுமே இருக்க முடியாது. "இறைவனின் சக்தியையும் அவரது மாட்சிமையின் உதவியையும் கொண்டு அவற்றிலிருந்து தப்பி விரைந்தோடிடுங்கள். சர்வ விவேகியான, சகலத்தையும் அறிந்தவரான, ஒருமைப்படுத்துபவரும் சர்வஞானியும் சர்வவிவேகியுமான, அவரது திருநாமத்தினால் மனிதரின் உள்ளங்களை ஒன்றிணைக்கக் கடும் முயற்சி செய்யுங்கள்."[12]**

- சமூகத்தில் உள்ள ஒவ்வொருவர்பாலும் நாம் அன்புடன் நாம் இருக்க வேண்டும். அவ்வன்பு கடவுளின்பாலான நமது அன்பின் பிரதிபலிப்பாக இருக்கவேணடும். அப்துல்-பஹா கூறுவதாவது:

**“பூரண ஒற்றுமையுடன் இருங்கள். ஒருவர் மற்றொருவர் மீது, ஒருபோதும் கோபம் கொள்ளாதீர். படைப்பினங்களை அவர்களுக்காகவின்றி இறைவனின் நிமித்தம் அவர்களை நேசிப்பீர்களாயின், நீங்கள் ஒருபோதும் கோபமடையவோ அல்லது, பொறுமை இழக்கவோ மாட்டீர்கள். மனிதக்குலம் குறைவின்றி இல்லை. ஒவ்வொரு மனிதனிடத்திலும் குறைகள் உள்ளன. மக்களின்பால் நீங்கள் நோக்கினால், நீங்கள் எப்போதும் மகிழ்வின்றி இருப்பீர்கள். ஆனால், நீங்கள் இறைவன்பால் நோக்கும்போது, நீங்கள் அவர்களை நேசித்து அவர்களிடம் அன்பாக இருப்பீர்கள். ஏனெனில், இறைவனுடைய உலகம், குறைவற்ற மற்றும் பரிபூரண கருணையின் உலகமாகும்.”[13]**

- நாம் ஒவ்வொருவரும் ஒருவர் மற்றவர் மீது கொண்டுள்ள அன்பிற்கு பிறகும் நம்மிடையே மனஸ்தாபங்கள் தோன்றுமாயின் நாம் பின்வரும் அப்துல்-பஹாவின் அறிவுரையை உடனடியாக நினைவகூர்ந்திட வேண்டும்:

**“நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் உள்ளங்களின் சிந்தனைகள் அனைத்தையும் அன்பு, ஒற்றுமை ஆகியவற்றின் மீதே ஒருமுனைப்படுத்த வேண்டும் என நான் உங்கள் அனைவருக்கும் பொறுப்பாணையிடுகிறேன். போர் என்னும் எண்ணம் வரும்போது, அதனை அதனினும் மேலும் பலமான அமைதி என்னும் எண்ணத்தைக் கொண்டு எதிர்த்திடுங்கள். வெறுப்பு என்னும் எண்ணம், அதனினும் மேலும் சக்தி வாய்ந்த அன்பு என்னும் எண்ணத்தால் அழிக்கப்பட வேண்டும். போரைப் பற்றிய எண்ணங்கள் ஒற்றுமை, நல்வாழ்வு, ஓய்வு மற்றும் மனநிறைவு ஆகியவற்றை அழித்துவிடுகின்றன.**

**அன்பைப் பற்றிய எண்ணங்கள், சகோதரத்துவம், அமைதி, தோழமை மற்றும் மகிழ்ச்சி ஆகியவற்றை நிர்மாணிக்கின்றன.”[14]**

- தீவிர உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காக நாம் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்ட பின்னும், அவ்வுணர்ச்சிகள் நம்மை ஆட்கொண்டு நாம் பிறருடன் விரோதம் கொள்ளும் நேரத்தில், பஹாவுல்லாவின் இந்தச் சொற்களை நாம் நினைவுகூர்ந்திட வேண்டும்.:

**“உங்களிடையே வேற்றுமைகள் ஏதேனும் தோன்றுமாயின், யாம் உங்கள்முன் நிற்பதைப் பாருங்கள்; எனது நாமத்தின் பொருட்டும், எனது தெளிவான, ஒளிமயமான, சமயத்தின் மீதுள்ள அன்பின் அடையாளமாகவும், ஒருவர் மற்றவரின் தவறுகளைப் பொருட்படுத்தாதீர்.”[15]**

- மற்றவர்களின் குற்றங்களைப் பொருட்படுத்தாமல், அவர்களுடைய போற்றத்தக்க குணங்களை மட்டும் பார்த்து, புறங்கூறுவதிலிருந்து முற்றிலும் விலகிக்கொள்வது என்ற ஆன்மீக ஒழுக்கமே, ஒற்றுமையின்மைக்கு எதிரான மிகச் சிறந்த நடவடிக்கையாகும். நாம் நேசிப்பவர்களின் குற்றங்களை நாம் இயல்பாகவே பொருட்படுத்த மாட்டோம். பாவங்களை மறைக்கும் கண்ணுடன் அவர்களைப் பார்ப்பதில் நமக்கு எவ்வித கஷ்டமும் இல்லை என்பதையும் நாம் நினைவுப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்துல் பஹா கூறுகிறார்:

**“குறையுள்ள கண் குறைகளைக் காண்கின்றது. குற்றங்களை மறைக்கும் கண்ணோ, ஆன்மாக்களைப் படைத்தவரைப் பார்க்கின்றது. அவரே அவற்றைப் படைத்து, அவர்களைப் பயிற்றுவித்து, அவர்களுக்கு வேண்டியன கொடுத்துதவி, அவர்களுக்குத் திறமையும் உயிரும் பார்வையும் கேட்கும் திறனும் அளிக்கிறார். ஆகவே அவர்கள், அவரது மேன்மையின் அடையாளங்கள் ஆவர். நீங்கள் எல்லாரையும் நேசித்து, அவர்கள் மீது பாசம் செலுத்தி ஏழைகளைக் கவனித்து, பலமற்றவர்களைப் பாதுகாத்து, நோயுற்றவர்களைக் குணப்படுத்தி, அறியாதவர்களுக்குக் கல்வியளிக்க வேண்டும்.”[16]**

பஹாவுல்லா நமக்குக் கூறுகிறார்:

**“எனது அரியாசனத்தின் தோழனே! தீயதைச் செவிமடுக்காதே, தீயதைக் கண்ணுறாதே, உன்னை இழிவுபடுத்திக் கொள்ளாதே; பெருமூச்சு விடவோ, கண்ணீர் வடிக்கவோ செய்யாதே. தீயதைப் பேசாதே, அதனால், உன்னிடம் அது பேசப்படுவதை நீ கேட்கத் தேவையிராது; மற்றவரின் குறைகளைப் பெரிது படுத்தாதே; அதனால் உனது குறைகள் பெரிதாகத் தோன்றாதிருக்கக் கூடும்; எவ்வொருவரின் தாழ்வையும் விரும்பாதே; அதனால் உனது தாழ்வு அம்பலமாகாதிருக்கும். எனவே, கறையற்ற மனதுடன்,**

**களங்கமற்ற உ ள்ளத்துடன், தூய சிந்தனையுடன், உனது இயல்பு புனிதமாக்கப் பட்டுக், கண நேரத்திற்குக் குறைவான காலமேயுள்ள உனது வாழ்நாள்களைக் கழிப்பாயாக; அதனால், நீ, சுதந்திரமாகவும் மனநிறைவுடனும், இவ்வநித்திய கூட்டினை அப்பால் வைத்து, மறைபொருளான சுவர்க்கத்தை நாடிச் சென்று, நிலையான இராச்சியத்தினில் என்றென்றும் வாழக்கூடும்."[17]**

அவர் நமக்கு மேலும் கூறுவதாவது:

**"குடிபெயர்வோரே! என்னை உச்சரிப்பதற்கெனவே நாவினை அமைத்துள்ளேன்; அவதூறினால் அதனைக் கறைப்படுத்திடாதீர். தான் எனுந் தீ உங்களை வென்றிடுமாயின், எனது உயிரினங்களின் குறைகளையல்லாது உங்களின் குறைகளையே நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள்; ஏனெனில் நீங்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களை அறிந்து கொள்வதைவிடத் தன்னைத்தானே நன்கு அறிந்திருக்கின்றீர்."[18]**

- ஒற்றுமையென்பது பூசல் மற்றும் கருத்து வேறுபாடு ஆகியவை இல்லாமல் இருப்பது மட்டும் அல்ல. அன்பை வெறும் வார்த்தைகளால் மட்டும் வெளிப்படுத்தக் கூடாது. நாம் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பானது, சேவையாக உருமாறி, ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஆகிய உணர்வுகள் நமது நடவடிக்கைகளை ஆளும்போதுதான், நமது பஹாய் சமூகத்தில் உண்மையான ஒற்றுமை நிலவுகிறது எனக் கூறிட முடியும். அப்துல்-பஹா நம்மிடம் கூறுவதாவது:-

**"ஒரு நொடி கூட ஓய்வாக இருந்திடாதீர், ஒரு கணங்கூட வசதியை நாடாதீர்; மாறாக, நண்பர்களுள் ஒருவருக்காவது நீங்கள் அர்ப்பணமிக்க சேவை செய்திடவும் ஒரு பிரகாசமான இதயத்திற்கு ஆனந்தம், மகிழ்ச்சி ஆகிவற்றைக் கொண்டுவரவும் உளமாரவும் ஆன்மபூர்வமாகவும் உழைத்திடுங்கள். இதுவே உண்மையான அருட்கொடை; அதன்மூலம் அப்துல்-பஹாவின் நெற்றி ஒளிரச் செய்யப்படுகின்றது. அதில் எனது கூட்டாளியும் துணைமையாளராகவும் இருப்பீராக."[19]**

அவர் மேலும் கூறுவதாவது:

**"ஒத்துழைப்பும் பரஸ்பரத்தன்மையும் மானிடத்தின் விழுமிய தேவையாகும். மனிதரிடையே தோழமை, ஒருமைப்பாடு ஆகியவற்றின் பந்தம் எந்த அளவிக்கு வலுவாக இருக்கின்றதோ, அந்த அளவிற்கு எல்லா மானிட நடவடிக்கை தளங்களிலும் ஆக்கபூர்வம், சாதிப்புகள் ஆகியவற்றின் சக்தி அதிகமாக இருக்கும்."[20]**

- எல்லா விஷயங்களிலும் வெளிப்படையான, அன்பான கலந்துரையாடலே, வெற்றிகரமான சமூகச் செயல்பாட்டிற்கு ஒரு மிக முக்கிய வழிமுறையாகும். கலந்துரையாடல் மூலம் நாம் ஒரு விஷயத்தை நோக்கும் பல்வேறு வழிகள் ஒன்றுசேர்ந்து, நமது கூட்டான செயல்களில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய மிகச் சிறந்த திசையை நாம் கண்டுபிடிக்கின்றோம். கலந்துரையாடல் மூலம், நாம் சிந்தனையில் ஒற்றுமையை அடைந்து, நமது ஒன்றுபட்ட எண்ணங்கள், கருத்துக்கள் ஆகியவற்றைக் கொண்டு, நமது சமூகங்களின் வளர்ச்சிக்காக விளைவுத்திறம் மிக்க திட்டங்களை உருவாக்குகின்றோம். கலந்தரையாடுபவர்களைப் பற்றி, அப்துல் பஹா கூறுகிறார்:-

  **“ஒன்றாகக் கலந்தாலோசனை செய்வோருக்குத் தூய்மையான எண்ணம், பிரகாசமான ஆவி, கடவுளைத் தவிர மற்றேல்லாவற்றிளிருந்தும் பற்றின்மை, அவரது தெய்வீக நறுமணத்தின்பால் கவர்ச்சி, அவரது அன்புக்குரியவர்கள் முன் பணிவும் தாழ்மையும், இன்னல்களில் பொறுமையும் சகிப்புத்தன்மையும், அவரது உயர்வான சந்நிதானத்தில் சேவகம் ஆகியவை பிரதான தேவைகளாகும். இப்பண்புகளைப் பெற்றிட அவர்கள் அருள்கூர்ந்து துணைபுரியப்படுவார்களாயின், பஹாவின் காணவியலா இராஜ்யத்திலிருந்து அவர்களுக்கு வெற்றி அருளப்படும்.”**[21]

- சிந்தனையில் செயல்பாட்டில் ஒற்றுமையாக மாறவில்லையென்றால் அது நிறைவேற்றம் காணாது. ஒற்றுமையுடன் செயல்படுவது என்றால் நாம் அனைவரும் ஒரே விஷயத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதல்ல. மாறாக சமூகமானது ஒன்றுபட்ட செயலுக்காக ஒரு திட்டத்தை வகுக்கும்போது, தனிநபர் ஒவ்வொருவரின் பலதரப்பட்ட திறமைகள் முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றன. நமது சக்திகள் பெருகுகின்றன. உலகின் மிகப் பெரிய, சக்தி வாய்ந்த அமைப்புக்கள் எதை அடைய முடியாதோ அதனை ஒரு சிறிய சமூகம் அடைந்திட முடிகிறது. அப்துல் பஹா கூறுகிறார்:-

  **“எப்போதெல்லாம், புனித ஆன்மாக்கள், விண்ணுலகச் சக்தியைப் பெற்றுக் கொண்டு, ஆவியின் அத்தகைய பண்புகளைக் கொண்டு முன்னெழுந்து, ஒன்றுசேர்ந்து அணி அணியாக நடந்தால், அந்த ஆன்மாக்கள் ஒவ்வொருவரும் ஓராயிரம் ஆன்மாக்களுக்குச் சமமாவர், மற்றும் அந்த வலுமிக்கச் சமுத்திரத்தின் பொங்கி எழும் அலைகள் விண்ணுலகத் திருக்கூட்டத்தினரின் படைகளைப் போல் ஆவர்.”**[22]

மேற்கண்ட கருத்துக்களை உங்கள் குழுவில் பலமுறை கவனமாகப் படித்து உள்ளடக்கத்தை ஒவ்வொரு விஷயமாக நீங்கள் கலந்துரையாடிய பிறகு, கடந்த மூன்று பகுதிகளையும் போலவே கருப்பொருளை வழங்கிடும் பயிற்சியில் நீங்கள் ஒவ்வொருவரும் ஒருவர் மற்றவருக்கு உதவிட விரும்புவீர்கள். உங்கள் முயற்சிகளுக்கு பின்வரும் பயிற்சி உதவியாக இருந்திடும்.

1. கீழ்க்கண்ட வாக்கியங்களை நிறைவு செய்க :

அ. இந்நாளில் கடவுளின் நண்பர்களுக்கிடையே ______________ பூசல், சச்சரவு, பகைமை, அக்கறையின்மை ஆகியவற்றைப் போல் இச்சமயத்தின்பால் கேடு விளைவிக்கக் கூடியவை வேறு எதுவுமே இருக்கவியலாது.

ஆ. இந்நாளில் கடவுளின் நண்பர்களுக்கிடையே கருத்துவேறுபாடு ________, சச்சரவு, பகைமை, அக்கறையின்மை ஆகியவற்றைப் போல் இச்சமயத்தின்பால் கேடு விளைவிக்கக் கூடியவை வேறு எதுவுமே இருக்கவியலாது.

இ. இந்நாளில் கடவுளின் நண்பர்களுக்கிடையே கருத்துவேறுபாடு பூசல், சச்சரவு, பகைமை, அக்கறையின்மை ஆகியவற்றைப் போல் இச்சமயத்தின்பால் கேடு விளைவிக்கக் கூடியவை ___________ இருக்கவியலாது

ஈ. இந்நாளில் கடவுளின் நண்பர்களுக்கிடையே கருத்துவேறுபாடு பூசல், சச்சரவு, பகைகமை, ____________ ஆகியவற்றைப் போல் இச்சமயத்தின்பால் கேடு விளைவிக்கக் கூடியவை வேறு எதுவுமே இருக்கவியலாது.

உ. இந்நாளில் கடவுளின் நண்பர்களுக்கிடையே கருத்துவேறுபாடு பூசல், ___________, பகைமை, அக்கறையின்மை ஆகியவைகளைப் போல் இச்சமயத்தின்பால் கேடு விளைவிக்கக் கூடியவை வேறு எதுவுமே இருக்கவியலாது.

ஊ. இந்நாளில் கடவுளின் நண்பர்களுக்கிடையே கருத்துவேறுபாடு பூசல், சச்சரவு, _______________, அக்கறையின்மை ஆகியவற்றைப் போல் இச்சமயத்தின்பால் கேடு விளைவிக்கக் கூடியவை வேறு எதுவுமே இருக்கவியலாது.

எ. இந்நாளில் கடவுளின் நண்பர்களுக்கிடையே கருத்துவேறுபாடு பூசல், சச்சரவு, பகைமை, அக்கறையின்மை ஆகியவற்றைப் போல் ________________ கேடு விளைவிக்கக் கூடியவை வேறு எதுவுமே இருக்கவியலாது.

2. இரண்டாவது திருவாசகத்தில் அப்துல் பஹா நமக்குக் கூறுவதாவது

அ. நாம் பூரண _________________ வாழ வேண்டும்.

ஆ. ஒருவர் __________________ மீது ஒருபோதும் _________________ கொள்ளக்கூடாது.

இ. மக்கள் அனைவரையும் நாம் _________________ நிமித்தம் நேசிக்க வேண்டும். அவர்களுக்காக அல்ல.

ஈ. ___________________ நாம் மக்களை நேசிப்போமாயின், நாம் ஒருபோதும் _____________ அல்லது ________________ மாட்டோம்.

உ. மனுக்குலம் __________________ இல்லை.

ஊ. __________________ நாம் நோக்கினால் நாம் எப்போதும் _______________ இருப்போம்.

எ. நாம் _______________ நோக்கும்போதும், நாம் மக்களை _______________ அவர்களிடம் ________________ இருப்போம்.

3. மூன்றாவது திருவாசகத்தில் அப்துல் பஹா நமக்குக் கூறுவதாவது :-

அ. நாம் நமது உள்ளங்களின் சிந்தனைகள் அனைத்தையும் _______________ மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மீதே ஒருமுனைப்படுத்த வேண்டும்.

ஆ. போர் என்னும் எண்ணம் வரும்போது அதை நாம் _______________ கொண்டு எதிர்க்க வேண்டும்.

இ. வெறுப்பு என்னும் எண்ணம் ________________ என்ற எண்ணத்தால் அழிக்கப்படலாம்.

ஈ. போரைப் பற்றிய எண்ணங்கள் ________________ அழித்து விடுகின்றன.

உ. அன்பைப் பற்றிய எண்ணங்கள் ___________________ நிர்மாணிக்கின்றன.

4. உங்கள் சமூகத்தில் உங்களுக்கும் சமூகத்திலுள்ள பிறருக்கும் இடையில் மனக்கசப்பு தோன்றுமாயின் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? ____________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

5. உங்கள் சமூகத்தில் ஒற்றுமைக்குப் பங்களிப்பதற்கு உதவக்கூடிய ஆன்மீக ஒழுங்குமுறையை வர்ணிக்கவும்: ____________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

6. பின்வருவனவற்றுள் எவை ஒற்றுமைக்குப் பங்களிக்கின்றன?

_______ மற்றவர்களின் குறைகளைப் பார்ப்பது

_______ மற்றவர்களின் குறைகளைப் பொருட்படுத்தாமல் இருப்பது

_______ மற்றொரு நபர் குறைபாடுகளைப் பற்றி உள்ளூர் ஆன்மீகச் சபைக்குத் தெரிவிப்பது

_______ மற்றொரு நபர் குறைபாடுகளைப் பற்றி ஒரு நண்பரிடம் விமர்சிப்பது

_______ மற்றொரு நபர் கெட்டவராகத் தெரியும் வகையில் ஒரு கதையை மிகைப்படுத்துவது அல்லது மாற்றுவது

_______ மற்றவர்கள் குறைகளைப் பற்றி சிந்திப்பது

7. சிலர் தவறு செய்யும்போது நாம் குறைகூறுகிறோம். ஆனால், மற்றவர்கள் அதே தவறு செய்யும்போதும் நாம் குறைகூறவதில்லை. இது ஏன்? ____________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

8. மக்கள் ஒருவரைப் பற்றி ஒருவர் புறங்கூறிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் ஒற்றுமையாயிருக்க முடியுமா? ஏன் முடியாது? ___________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

9. ஒருவரைப் பற்றி வேண்டுமென்றே பொய் கூறுவது தவறே. ஆனால், ஒருவர் செய்த காரியத்தைப் பற்றிக் குறைக் காணும் குறிப்புகளை மற்றவர்களிடம் கூறுவது சரியா? ______

________________________________________________________________________________

10. வீண்பேச்சு, புறங்கூறுதல், குறைகூறுதல் ஆகியவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு என்ன?_

________________________________________________________________________________

________________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

11. வீண்பேச்சு, புறங்கூறுதல், எப்போதும் குறைகாண்பது ஆகியவை ஒரு சமூகத்தின் மீது என்ன விளைவை ஏற்படுத்தும்? ________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

12. இப்பழக்கங்களை நாம் நமது வாழ்விலிருந்து எவ்வாறு அகற்றுவது? ________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

13. ஒருவரைப் பற்றிப் பேசும்போது அவர்கள் அங்கே இருப்பதாக நினைத்துக்கொண்டு நாம் பேசினால் என்னவாகும்? ______________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

14. குழந்தைகளுக்கு முன் நாம் புறங்கூறினால் அது அவர்கள் மீது என்ன பாதிப்பினை ஏற்படுத்தும்? ______________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

15. வீண்பேச்சு மற்றும் புறங்கூறும் போக்கு எங்கிருந்து தோன்றுகிறது? ________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

16. “தான் எனுந் தீ உங்களை வென்றிடுமாயின், ________________ ________________ அல்லாது ________________________________________; ஏனெனில் நீங்கள் ஒவ்வொருவரும் ______________________________________________________ ______________ நன்கு அறிந்திருக்கின்றீர்.”

17. அன்பு வெறும் வார்த்தைகளால் மட்டும் வெளிப்படுத்தப்படுவதில்லை? வேறு என்ன தேவைப்படுகின்றது? ______________________________________________

18. “ஒரு நொடி கூட ____________________________, ஒரு கணங்கூட ____________________________; மாறாக, நண்பர்களுள் ஒருவருக்காவது நீங்கள் _______________ _____________ செய்திடவும் ஒரு பிரகாசமான இதயத்திற்கு ________________ __________________ ஆகிவற்றைக் கொண்டுவரவும் ________________ ____________________ உழைத்திடுங்கள்.”

19. “__________________ __________________ மானிடத்தின் விழுமிய தேவையாகும். மனிதரிடையே __________________, __________________ ஆகியவற்றின் பந்தம் எந்த அளவிக்கு வலுவாக இருக்கின்றதோ, அந்த அளவிற்கு எல்லா மானிட நடவடிக்கை தளங்களிலும் __________________, __________________ ஆகியவற்றின் சக்தி அதிகமாக இருக்கும்.”

20. வெற்றிகரமான சமூக நடவடிக்கைக்கு மிகவும் முக்கியமாக விளங்கும் திறவுகோல் போன்ற ஒன்று யாது? ____________________________________________________________________

21. கலந்தாலோசனை செய்வோரைப் பற்றி அப்துல்-பஹா பின்வருமாறு கூறுகின்றார்: “ஒன்றாகக் கலந்தாலோசனை செய்வோருக்குத் ____________________________________________________ ______________________________________________________________________________________ ________________________________________________________ அவரது அன்புக்குரியவர்கள் முன் __________________________________, கஷ்டங்களில் ______________________________________, அவரது உயர்வான சந்நிதானத்தில் ______________________________ ஆகியவை பிரதான தேவைகளாகும். இப்பண்புகளைப் பெற்றிட அவர்கள் அருள்கூர்ந்து துனைபுரியப் படுவார்களாயின், பஹாவின் காணவியலா இராஜ்யத்திலிருந்து அவர்களுக்கு ___________________________________.”

22. “ஒற்றுமையுடன் பணிபுரிவதன் சக்தியைப் பற்றி அப்துல்-பஹா கூறுகின்றார்: “எப்போதெல்லாம், புனித ஆன்மாக்கள், ___________________________________________ பெற்றுக் கொண்டு, ____________________________________________________________ கொண்டு முன்னெழுந்து, ____________________ அணி அணியாக நடந்தால், அந்த ஆன்மாக்கள் ________________ ஓராயிரம் ஆன்மாக்களைப் போல் ஆவர், மற்றும் அந்த வலுமிக்கச் சமுத்திரத்தின் பொங்கி எழும் அலைகள் ____________________________________________________________ போல் ஆவர்.”

## பகுதி 9

சாஞ்செஸ் தம்பதியுடனான தன் நான்காவது வருகையின்போது, அருகிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் பயின்று, தங்களுடன் தங்க வந்திருக்கும் அவர்களுடைய பேத்தியான பீட்ரிஸை

சந்திக்கும் ஒரு வாய்ப்பு அலெயான்ட்ராவுக்குக் கிட்டியது. பீட்ரிஸ் ஒற்றுமை குறித்த கருப்பொருளில் மிகவும் ஆர்வமாக இருந்து, கலந்துரையாடல்களில் மிகவும் உற்சாகமாகப் பங்கேற்றாள். உரையாடல் ஒரு முடிவுக்கு வந்தவுடன், திருமதி சாஞ்செஸ் அனைவருக்கும் காப்பியும் தின்பண்டங்களும் கொண்டு வந்தார். பீட்ரிஸுடன் மேலும் நன்றாக அறிமுகமாவதற்கு இது அலெயான்ட்ராவுக்கு ஒரு வாய்ப்பை அளித்தது. மறுநாள் பீட்ரிஸை சந்தித்து அண்டைப்புறத்தில் சமூக நிர்மாணிப்பு முயற்சிகள் பற்றிப் பேசுவதற்கு அலெயான்ட்ரா ஏற்பாடு செய்துகொண்டார். "பிரதான பயிற்சி வரிசையைப் பயில்வதற்கு அவளுக்கு ஆர்வம் இருக்கலாம்," என அலெயான்ட்ரா தனக்குள் கூறிக்கொண்டார். "முதல் சில நூல்களைச் சீராகப் பயில்வதற்கு என்னால் அவளுக்கு உதவமுடியும். அதன் பின்னர் அவள் ஒரு சிறார் வகுப்பை ஆரம்பிக்கவோ, அண்டைப்புறத்தில் ஓர் இளைய இளைஞர் குழுவை உருவாக்குவதற்கோ எனக்கு உதவிட அவள் விரும்பலாம். அப்படியாயின், தன்னை ஓர் எனிமேட்டராகப் பணிபுரிவதற்கு ஆயத்தமாக்கும் நூல் 5 வரை அவள் மேம்பாடு காணும்போது அவள் மேலும் அதிகப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளலாம்." பயிற்சி செயல்முறையில் பலர் பங்கெடுப்பதற்கு வழிவகுத்துள்ள, குறிப்பிட்ட சில கலந்துரையாடல் கருப்பொருள்கள் பற்றிய பல இளைஞர் ஒன்றுகூடல்களில் அலெயான்ட்ரா பங்கெடுத்துள்ளார் அடுத்த நாள், பீட்ரிஸுடனான தனது உரையாடலின்போது அதே யோசனை வரிசையை தானும் பின்பற்றிட அலெயான்ட்ரா தீர்மானித்தார். உரையாடல் பின்வருமாறு ஆரம்பித்தது:

> உலகம் ஒரு சிறந்த இடமாக மாற நாம் அனைவரும் விரும்புகிறோம். சர்வலோக அமைதி ஸ்தாபிக்கப்பட்டு மனிதகுடும்பம் நல்லிணக்கத்துடன் வாழும் எதிர்காலத்தை நாம் எதிர்பார்க்கிறோம். அத்தகைய எதிர்காலம் ஒரு கனவு அல்ல. உலகின் முன்னேற்றத்திற்குப் பங்களிக்க நம்மில் மேன்மேலும் அதிகமானோர் முயலும்போது அது உருவாக்கப்பட முடியும். நம் மன ஆழத்தில் நமது சமூகங்களுக்குச் சேவை செய்வதற்கான ஆசை நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. பொது நன்மைக்காகத் தன்னலமற்றச் சேவையை மேற்கொள்ளும் திறனை வளர்க்க வேண்டியதே நமது தேவை.
>
> நாம் ஒன்றாகப் பயணிக்கும் ஒரு சேவை பாதையைக் கற்பனை செய்வதன் மூலம் மானிடத்திற்கான சேவையைப் பற்றி நாம் சிந்திக்கலாம். இந்தப் பாதை அனைவருக்கும் திறந்திருக்கின்றது. அதில் பயணிக்க நாம் ஒவ்வொருவரும் தேர்வு செய்கின்றோம், மற்றும் அதில் நமது சொந்த வேகத்திற்கு ஏற்ப நாம் மேம்பாடு காண்கின்றோம். இப்பாதையில் நாம் தனியாகப் பயணிப்பதில்லை; அதில் நமது நண்பர்களுடன் ஒன்றாகப் பணியாற்றுகின்றோம், ஒன்றாகக் கற்கின்றோம், ஒருவருடன் ஒருவர் உடன்செல்கின்றோம். நாம் எடுக்கும் ஒவ்வோர் அடியும் மகிழ்ச்சி, உறுதி ஆகியவற்றை உருவாக்குகின்றது, மற்றும் நமது ஒவ்வொரு முயற்சியும் தெய்வீக உறுதிப்பாடுகளைக் கொண்டுவருகின்றது.

தன்னிடம் கூறப்படுகின்றவற்றில் பீட்ரிஸ் ஆர்வம் காட்டுகிறாள். இந்த குறுகிய வழங்கலுக்குப் பிறகு ஒரு துடிப்பான உரையாடல் ஆரம்பிக்கின்றது. மேற்கொண்டு தொடர்வதற்கு முன், சற்று இடைநிறுத்தி, இந்த இரண்டு புதிய நண்பர்களுக்கிடையில் நடைபெறும் பரஸ்பர செயல்பாட்டின் இயல்பைப்பற்றிப் பிரதிபலிப்போம். பயிற்சி செயல்முறையில் பங்கேற்பதற்கு பீட்ரிஸுக்கு அழைப்பு விடுப்பதற்காக அலெயான்ட்ரா ஒரு திடமான உரையாடலில் ஈடுபட தீர்மானிக்கின்றார். பயிற்சிக்கழகத்தினால் ஒரு பயிற்சிகளின் வரிசை வழங்கப்படுகிறது என பீட்ரிஸிடம் கூறி அதில் பங்குப் பெற அவளுக்கு அழைப்பு விடுப்பது மட்டும் ஏன் இதற்குப் போதுமானதாக இருந்திருக்காது?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

## பகுதி 10

அலெயான்ட்ராவுக்கும் பீட்ரிஸுக்கும் இடையிலான உரையாடல் சுமார் இரண்டு மணி நேரம் தொடர்கிறது. அலெயான்ட்ரா பீட்ரிஸுடன் பகிர்ந்துகொண்ட பல கூடுதல் யோசனைகள் கீழே உள்ளன. நிச்சயமாகவே அவர் இடைநிறுத்தமில்லா நீண்ட வழங்கலை செய்யவில்லை என்பதை நாம் அறிவோம். அந்த இரண்டு மணி நேரத்தின் பெரும்பாலான நேரத்தை அவ்விருவரும் இந்தப் பத்திகளில் வரையறுக்கப்பட்டுள்ள யோசனைகளைக் கலந்தாய்வு செய்வதற்குச் செலவிட்டனர்.

> நாம் இளம் பருவத்தினர், நமக்கு ஆற்றல் உள்ளது, மற்றும் நமக்கு பெரும் உற்சாகமுள்ளது. நாம் ஏதோ கவலையற்றுத் திரிவதாக மக்கள் நினைக்கின்றனர். ஆனால், நிலைமை அதற்கு நேர்மாறானது; நாம் மானிடத்தின் நிலைமை குறித்து கவலை கொண்டுள்ளதுடன் சமுதாயத்தில் ஓர் உண்மையான மாற்றம் ஏற்படுதலைக் காண விரும்புகின்றோம். கல்வி, பணி, நண்பர்கள், குடும்பம் என நாம் நமது சொந்த வாழ்க்கையைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் நம் வயது அதிகரிக்கும்போது, நாம் மேன்மேலும் அதிகக் கடமைகளைச் சுமப்பதைக் காண்கின்றோம்; நம் பெற்றோர் நம்மிடமிருந்து அதிகமாக எதிர்பார்க்கின்றனர். சில நேரங்களில், எனது கடமைகள் அனைத்தைப் பற்றியும் சிந்திக்கும்போது, நான் திணறிவிடுகின்றேன். அவ்வேளை, நான் பஹாய் திருவாக்குகளில்

மனனம் செய்துள்ள ஒரு மேற்கோள் நினைவுக்கு வருகின்றது: "மனிதனின் வாழ்க்கைக்கு அதன் வசந்தகாலம் உள்ளது, அதற்கு அற்புத மகிமை வழங்கப்பட்டுள்ளது. இளமைப் பருவமானது வலிமை, வீரியம் ஆகியவற்றினால் தன்மைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் மனித வாழ்க்கையில் மிகவும் விரும்பத்தக்க ஒரு காலமாகவும் இருக்கின்றது."

நான் உன்னுடன் பகிர விரும்புவது என்னவென்றால், உலகம் முழுவதும் நம்முடையதைப் போன்ற சமூகங்களில் வாழும் இளைஞர்கள் பலர் தங்களின் ஆற்றல்கள் ஓர் இரட்டை நோக்கத்தினால் வழிகாட்டப்படுவதை உணருகின்றனர்: தங்களின் சொந்த அறிவாற்றல், ஆன்மீக வளர்ச்சி ஆகியவற்றுக்குப் பொறுப்பேற்றுக்கொள்ளுதல் மற்றும் சமுதாயத்தின் தன்மைமாற்றத்திற்குப் பங்களித்தல். நமது நோக்கத்தின் இந்த இரண்டு அம்சங்களும் பரஸ்பரமான தொடர்பைக் கொண்டுள்ளன. நமது செயல்திறன்களை நாம் மேம்படுத்தி வரும்போது, நாம் பிறருக்கு நல்ல முறையில் சேவையாற்றிட முடிகிறது, மற்றும் ஒருவருக்கு ஒருவர் உதவிடுவதில், தனிநபர்கள் என்னும் முறையில் வளர்ச்சியுற்றும், நாம் பெற்றிருக்கும் பண்புகளைப் பலப்படுத்திக்கொள்ளவும் செய்கின்றோம்.

இங்குதான் நான் ஏற்கனவே குறிப்பிட்ட சேவை பாதை குறித்த யோசனை சம்பந்தப்படுகின்றது. அதில் பயணிப்பதை நாம் நமது வாழ்க்கைகளில் ஒரு சாதாரண நடவடிக்கையாகச் சேர்த்துக்கொள்ள முடியாது; அது நாம் செய்கின்ற அனைத்திற்கும் அர்த்தம் புகட்டுகின்றது. சமூகத்திற்கான சேவை, நமது கல்வியின் நோக்கத்தை நன்கு புரிந்துகொள்ளவும் வருங்காலம் குறித்த நமது சிந்தனைகளைத் தெளிவுபடுத்திக்கொள்ளவும் நமது குடும்பங்களின் நல்வாழ்வுக்குப் பங்களிக்கத் தேவைப்படும் பண்புகளை உருவாக்கிக்கொள்ளவும் உதவுகின்றது. அது நட்புகளை பலப்படுத்துகின்றது. அது நாம் நமது ஆற்றல்களை அற்ப முயற்சிகளில் வீணடிப்பதைத் தடுக்கின்றது.

நமது ஆன்மீக மற்றும் அறிவாற்றல் வளர்ச்சி குறித்து சிந்திப்பதில், நம்மீது செல்வாக்குச் செலுத்தும் பல ஆற்றல்களைப் பற்றி நாம் நனவுடன் இருக்கவேண்டும். அறிவு, நீதி, அன்பு போன்ற ஆற்றல்களுள் சில, நம்மை சரியான திசையில் வழிநடத்துகின்றன; நாம் அவற்றுடன் நம்மை இணைவாக்கிக்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். லௌகீகவாதம், தன்னலம் போன்ற வேறு சில ஆற்றல்கள், நேரெதிரானவற்றைச் செய்கின்றன; அவற்றை நாம் தடுத்திட வேண்டும். தெய்வீக உறுதிப்பாடுகளால் நமது முயற்சிகள் ஆசீர்வதிக்கப்படும் என்னும் நம்பிக்கையுடன் உன்னதம் அடைந்திட நாம் முயல வேண்டும்.

சமுதாய தன்மைமாற்றத்திற்கான—வன்முறைமிகு உலகின் தன்மைமாற்றம், வறுமை, துன்பம் ஆகியன நிறைந்த உலகை அமைதி, செழுமை, நல்லிணக்கம் ஆகியன நிறைந்த

ஓர் உலகமாக மாற்றுவதற்கான—நமது பங்களிப்புகள் பற்றி சிந்திக்கையில் நாம் லௌகீக மற்றும் ஆன்மீக மேம்பாடு இரண்டைப் பற்றியும் கருத வேண்டும். லௌகீக மேம்பாட்டுடன் நாம் ஆன்மீக மேம்பாடும் காணாவிட்டால் எல்லா மக்களுக்குமான லௌகீக மேம்பாடு அடையப்பட இயலாது. இவை இரண்டும் கைக்கோர்த்துச் சென்றாலொழிய உலக முன்னேற்றம் அடையப்பட முடியாது. நான் மனனம் செய்துள்ள மேலும் ஒரு மேற்கோள் இதோ: "லௌகீக நாகரீகம் ஒரு விளக்கைப் போன்றது; ஆன்மீக நாகரீகம் அதனுள் காணப்படும் ஒளியைப் போன்றது. லௌகீக நாகரிகமும் ஆன்மீக நாகரிகமும் ஒன்றுபட்டால், ஒளியும் விளக்கும் ஒன்றாவதை நாம் காண்போம், அதன் விளைவு பூரணமாக இருந்திடும்."

சேவை பாதையில் நாம் பயணிக்கும்போது, தனிநபர் குழுக்களுடன், குறிப்பாக சிறார்களுடனும் இளைய இளைஞர்களுடனும் சேர்ந்து பணிபுரிய நாம் கற்கின்றோம், அவர்கள் அறிவு, திறன், ஆன்மீகப் பண்புகள் ஆகியன அடைந்திட உதவுகின்றோம். நமது சமூகங்களின் ஒற்றுமைக்குக் கவனம் செலுத்தக் கற்கின்றோம். நமது சமூகங்களின் முன்னேற்றத்திற்குப் பங்களித்திட விரும்பும் தனிநபர்கள், குடும்பங்கள், அமைப்புகள் அனைத்தும் உடனுழைத்திட வேண்டும். அவை ஒரு பகிரப்பட்ட தொலைநோக்கையும் குறிக்கோளையும் உருவாக்கி முரண்பாட்டின் வழிகளைக் கைவிட வேண்டும்.

இளைஞர்களெனும் முறையில் பிறருடன் நல்லிணக்கமிக்க பரஸ்பர செயல்பாட்டின் பழக்கங்களை நாம் உருவாக்கிக்கொள்வது முக்கியமாகும். நாம் நண்பர்களாக இருக்கவேண்டும்: நாம் ஆற்றும் பணியில் ஒருவருடன் ஒருவர் உடன்செல்தல், ஒருவர் மற்றவரின் பங்களிப்புகளை ஏற்றுக்கொள்தல், ஒருவர் மற்றவருக்கு ஆதரவு நல்குதல், ஒருவர் மற்றவரின் வலிமைகளைக் கண்ணுறுதல், ஒருவர் மற்றவரிடம் பயனுள்ள ஆலோசனைகளை நாடுதல் மற்றும் வழங்குதல், பிறகு ஒருவர் மற்றவரின் சாதனைகளில் மகிழ்ச்சியடைதல். சேவை பாதையில் காலடி எடுத்துவைப்பதில், நாம் செயல்பட வேண்டும், நமது செயல்களைப் பற்றி பிரதிபலித்திட வேண்டும், ஒன்றாக கலந்தாலோசித்தும் படிப்பாய்வு செய்திடவும் வேண்டும்.

கடந்த சில தசாப்தங்களாக, ஏறத்தாழ உலகின் எல்லா நாடுகளிலும் ஒரு மிகவும் விசேஷமான ஸ்தாபனத்தை நிருவுவதில் பஹாய் சமூகம் வெற்றிகண்டுள்ளது. பயிற்சிக்கழகங்கள் என நாம் குறிப்பிடக் கூடிய இவை, சமூகத்திற்குச் சேவை செய்வதற்கான நமது செயல்திறன்களை பலப்படுத்தும் பயிற்சிகளை வழங்குகின்றன. இந்தப் பயிற்சிப்பாடங்களைப் படிப்பாய்வு செய்வதன் மூலம், சேவை பாதையில் ஒன்றாகப் பணிபுரிவதற்குத் தேவைப்படும் ஆன்மீக அகப்பார்வைகளையும் நடைமுறை திறன்களையும் நாம் பெறுகின்றோம். அவற்றினூடே நாம் மேம்பாடு காண்கையில், மேன்மேலும் அதிக பலக்கியமான (complex) நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நமது

திறனாற்றல் வளர்ச்சியுறுகின்றது. ஆரம்பத்திலிருந்தே நம்மைவிட அதிக அனுபவம் பெற்றோரினால் நாம் உடன்வரப்படுகின்றோம், காலப்போக்கில், குறைந்த அனுபவமுடைய நண்பர்களுடன் இயல்பாகவே நாமும் உடன்செல்வோம். ஆரம்பத்தில் இருந்தே, நாம் சுய மற்றும் சமுதாய தன்மைமாற்றத்திற்கான முதன்மையாளர்களாக இருக்கின்றோம், நமது சொந்த கற்றலுக்கும் சமூகத்திற்கான சேவைக்கும் ஆர்வத்துடன் பொறுப்பேற்கின்றோம்.

“முதன்மையாளராக இருப்பது” என்பதன் அர்த்தம், சிந்தனையுடன் செயல்படுவதற்கான சித்தம் (will) பெற்றிருத்தல், நமது முனைவுகளில் விடாமுயற்சியுடன் இருத்தல், ஒவ்வொரு படியிலும் அறிவை அடைதல் மற்றும் பயன்படுத்தல் என்பதாகும். ஒரு முதன்மையாளர் என்பவர் செயல்படாமலேயே பயன் பெறுபவர் அல்லர், மாறாக அவர் மேம்பாட்டிற்கான ஓர் ஆக்ககரமான பங்களிப்பாளர் ஆவார். ஒரு முதன்மையாளர் ஆவதற்கு, ஒருவர் ஆக்ககரமான மற்றும் கட்டுப்பாட்டுடனான முன்முனைவுகளைப் பயன்படுத்திடக் கற்றுக்கொள்ள வேண்டும். பயிற்சிக்கழக பாடங்கள் சமூக நிர்மாணிப்பு செயல்முறையில் முதன்மையாளர்கள் ஆவதற்கான நமது திறனாற்றலை மேம்படுத்துகின்றன.

நாம் சிறிது நேரம் எடுத்து மேலே உள்ள பத்தியில் காணப்படும் யோசனைகளைப் பற்றி பிரதிபலிக்க வேண்டும். பகுதியின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளபடி, அலெயான்ட்ரா தனது யோசனைகளை ஒன்றன் பின் ஒன்றாக விடாது வெளிப்படுத்திட மாட்டார், மாறாக அந்த யோசனைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் பீட்ரிஸ் சிந்திப்பதற்கும் கலந்துரையாடலுக்குப் பங்களிப்பதற்கும் நிறைய வாய்ப்புகள் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்வார். உங்கள் குழுவில் ஒவ்வொரு பத்தியைப் பற்றியும் கலந்துரையாடவும் அவற்றிலுள்ள யோசனைகளை நீங்களே நன்கு வெளிப்படுத்தக் கற்பதற்கும் வாய்ப்பைப் பெற்ற பிறகு, ரூஹி பயிற்சிக்கழகத்தின் சில பாடங்களைப் பற்றி சில கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளவும் நூல் 1’ஐப் பயில்வதற்கு பீட்ரிஸுக்கு அழைப்பு விடுக்கவும் அலெயான்ட்ரா உறுதிபெறும் அளவுக்கு உரையாடல் மேம்பாடு கண்டுள்ளதா என்பதை நீங்கள் பரிசீலிக்க விரும்புவீர்கள். நீங்கள் அவரது இடத்தில் இருந்தீர்களானால் என்ன சொல்வீர்கள் என்பதைப் பற்றி கீழ்காணும் காலியிடத்தில் எழுத முடியுமா? நூல் 1, நூல் 2, மற்றும் அவை கோரும் சேவை நடவடிக்கைகளை நீங்கள் எவ்வாறு வர்ணிப்பீர்கள்? அவை இரண்டிற்கும் பிறகு வரும் நூல்களில் மேற்கொள்ளப்படும் சேவை நடவடிக்கைகள்—குறிப்பாக சிறுவர்களின் ஆன்மீக கல்விக்கான வகுப்புகளில் போதித்தல் மற்றும் ஓர் இளைய இளைஞர் குழுவிற்கு அதன் எனிமேட்டராக வழிகாட்டுதல்—குறித்த ஒரு மேலோட்டமான பார்வையிடல் வருங்காலத்தில் பீட்ரிஸ் எவ்விதமான சேவையில் ஈடுபட விரும்புவார் என்பதில் அவருக்கு சந்தேகமின்றி உதவிடும். பீட்ரிஸை நூல் 1’ஐப் பயில்வதற்கு அழைப்பு விடுப்பதில் அலெயான்ட்ரா கூறக்கூடியது போன்றே, உங்கள் குழுவின் பயிற்றுநர் இந்த இரண்டு சேவை நடவடிக்கைகள் குறித்தும் சில வாக்கியங்கள் எழுதிட உங்களுக்கு உதவலாம்.

## பகுதி 11

ஸாஞ்செஸ் இல்லத்திற்கு அலெயான்ட்ரா அடுத்து வருவதற்கு இரண்டு வாரங்கள் ஆயின. அந்தக் காலகட்டத்தில், பீட்ரிஸ் ஒரு தீவிர பரப்பியக்கத்தில் பங்குபெறவும் நூல் 1'இல் முதல் இரண்டு பாடப்பிரிவுகளைப் பூர்த்தி செய்யவும் முடிந்தது. இப்பொழுது, வாரம் இரண்டு முறை சந்திக்கும் ஐந்து பேர் அடங்கிய ஒரு குழுவினருடன் நூல் 1'இன் மூன்றாவது பாடப்பிரிவை பீட்ரிஸ் பயின்று வருகிறாள். இப்பொழுது சாஞ்செஸ் குடும்பத்தினருடன் பிரார்த்தனை கருப்பொருள் பற்றிப் பேசுவதற்கு இது பொருத்தமான தருணம் என எண்ணி, அதற்கு உதவிட முடியுமாவென பீட்ரிஸைக் கேட்கிறார். நீங்களும் நூல் 1'இல் இரண்டாவது பாடப்பிரிவைப் பயின்றுள்ளீர்கள், ஆதாலால் அந்த வருகையின்போது அலெயான்ட்ராவும் பீட்ரிஸும் வழங்கிய பிரார்த்தனை பாடப்பிரிவின் உள்ளடக்கத்தை உங்களுக்கு சுருக்கியளிப்பது அவசியமாக இருக்காது. அந்தப் பாடப்பிரிவை பார்வையிட்ட பிறகு, இந்தக் கருப்பொருளைப் சுற்றிய ஒரு கலந்துரையாடலில் நீங்கள் உரைத்திட முயலும் சில முக்கிய விஷயங்களை நீங்கள் இப்பொழுது பட்டியலிட முடியும். அவற்றை எழுதுவதற்கு கீழே உங்களுக்கு இடம் உள்ளது.

## பகுதி 12

ஸாஞ்செஸ் குடும்பத்திற்கான அலெயான்ட்ராவின் வருகை சில வாரங்களுக்குத் தொடர்ந்தது, மற்றும் அவ்வேளைகளில் நடைபெற்ற கலந்துரையாடல்களிலிருந்து இயல்பாகவே வெளிவந்த பல கருப்பொருள்களைக் கலந்தாய்வு செய்திட அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. ஒரு முறை நிர்வாக அமைப்புமுறையின் ஸ்தாபனங்கள் பற்றியும், குறிப்பாக உள்ளூர் மற்றும் தேசிய ஆன்மீக சபைகள் பற்றியும் அவர்கள் சிறிது கலந்துரையாடினர். தொடர்ந்து வந்த வருகைகளின்போது நடைபெற்ற உரையாடல்களின் உள்ளடக்கங்களை நாம் பரிசீலிக்க வேண்டியதில்லை. இருப்பினும், நாம் தொலைநோக்காகக் காணும் இத்தகைய தொடர் உரையாடல்வரிசைகளில் பங்கேற்பாளர்களிடையே எழக்கூடிய இரண்டு கேள்விகள் உள்ளன. முதலாமது, சமூகத்தினால் நடத்தப்படும் கூட்டங்களின் இயல்பு பற்றியது, மற்றும் இரண்டாவது நிதிவளங்கள் குறித்தது. இந்தப் பகுதியில் கூட்டங்கள் பற்றிய, குறிப்பாக பத்தொன்பது நாள் விருந்து பற்றிய கருப்பொருளை எடுத்துக்கொள்வோம், அடுத்தப் பாடப்பிரிவில் நிதி பற்றிய கேள்வியின் மீது கவனம் செலுத்துவோம்.

தொடர்ந்து வரும் விஷயங்கள், பத்தொன்பது நாள் விருந்து என்னும் கருப்பொருள் சார்ந்த ஓர் உரையாடலுக்கான அடிப்படையாகிடக் கூடும்.

- பஹாய் சமூகத்தில் பல்வேறு காரணங்களுக்காக ஒன்றுகூடல்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன—பிரார்த்திப்பதற்கு, விசேஷ தினங்களைக் கொண்டாடுவதற்கு, சமூக விவகாரங்கள் பற்றியும் சமுதாய சேவை குறித்தும் கலந்தாலோசிப்பதற்கு, செயல்திட்டங்களைக் கலந்துரையாடுவதற்கும். பஹாவுல்லா பின்வருமாறு வாக்களிக்கின்றார்:

  **“எமது உயிரின் மீதும், எமது சமயத்தின் மீதும் ஆணை! இறையன்பர்கள் நுழையும் எந்த வாசஸ்தலத்திலிருந்தும், தேவனை அவர்கள் போற்றிப் புகழும் குரல் எழும்போது, அவ்விடத்தைச் சுற்றி, உண்மையான நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்களும், அருள் பெற்ற தேவகணங்கள் அனைவரும் வலம் வருவார்கள்.”**[23]

- நண்பர்களிடையிலான ஒன்றுகூடல்களில் கடவுளின் திருவாக்குகளைச் செவிமடுப்பதானது இதயங்களுக்கு மகிழ்ச்சியையும் ஒற்றுமையின் பந்தங்களை பலப்படுத்தவும் செய்கின்றது. பஹாவுல்லா பின்வருமாறு அறிவுறுத்துகின்றார்:

  **“நண்பர்கள் அவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும், கூட்டங்களில் ஒன்றுகூடி, அங்ஙனம், விவேகத்துடனும், சொல்லாற்றலுடனும், பேசி இறைவனின் திருவாசகங்களைப்**

**படிப்பது, அவர்களுக்கு மிகவும் பொருத்தமானது. ஏனெனில், இறைவனின் திருமொழிகளே, அன்பெனும் நெருப்பினைத் தூண்டி, அதனை எரியச் செய்யும்.”**[24]

அப்துல் பஹா எழுதுகின்றார்:

**“கூட்டங்களை நடத்தி, தெய்வீகப் போதனைகளைப் படித்து குரலிசை எழுப்புங்கள். அதனால், அந்த நாடு மெய்மையெனும் ஒளியால் பிரகாசமடைந்து, புனித ஆவியின் சக்தியால், நிலம் உண்மையான சுவர்க்கமாக ஆகும். ஏனெனில், இந்தக் காலவட்டம், மேன்மை பொருந்திய தேவனின் காலவட்டமாகும். மனிதக்குலத்தின் ஒருமைப்பாடு மற்றும் ஐக்கியம் ஆகியவற்றின் இன்னிசை, கிழக்கு மற்றும் மேற்கிலுள்ளவர்களின் செவிகளை எட்ட வேண்டும்.”**[25]

- எல்லா பஹாய் கூட்டங்களைப் பார்க்கிலும் பத்தொன்பது நாள் விருந்துக்கு விசேஷ குறிப்புரை தேவைப்படுகின்றது. பஹாய் நாள்காட்டிக்கு, ஒவ்வொன்றும் பத்தொன்பது நாள்கள் கொண்ட பத்தொன்பது மாதங்கள் உள்ளன. ஒவ்வோர் உள்ளூரிலும் பஹாவுல்லா தாமே விதித்துள்ள இந்தக் கூட்டத்திற்கு மாதம் (பஹாய்) ஒருமுறை பஹாய்கள் ஒன்றுகூடுவர்.

**“மெய்யாகவே, மாதம் ஒரு முறை விருந்தளிக்குமாறு உங்களுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. அதில் தண்ணீர் மட்டுமே பரிமாறப்படினும் போதுமானதாகும்; ஏனெனில் உள்ளங்களைப் பிணைக்க இறைவன் சித்தம் கொண்டுள்ளார். அது மண்ணுலக, விண்ணுலக வழிகளாகிய இரண்டின் மூலமாக இருந்திடினும் சரி.”**[26]

- பத்தொன்பது நாள் விருந்து மூன்று பாகங்களைக் கொண்டது. முதலாவது, வழிபாட்டுக்கானப் பகுதியாகும். இப்பகுதியில் பிரார்த்தனைகள் கூறப்பட்டு, சமயத்தின் புனித வாசகங்கள் வாசிக்கப்படுகின்றன. இரண்டாவது, நிர்வாகப் பகுதியாகும். இப்பகுதியில் சமூகத்தின் விவகாரங்கள் பற்றிய கலந்துரையாடல் நடைபெறுகிறது. மூன்றாவது பகுதி, விருந்து பகுதியாகும். விருந்து மற்றும் கேளிக்கை அடங்கிய நண்பர்களின் கூட்டம் அது.

- அப்துல்-பஹாவின் பின்வரும் சொற்களிலிருந்து பத்தொன்பது நாள் விருந்தின் வழிபாட்டுப் பகுதியின் முக்கியத்துவம் குறித்த ஒரு நுண்காட்சியை நாம் பெறுகின்றோம்:

**“ஆதி அழகானவரின், விசுவாசமுள்ள ஊழியர்களே! ஒவ்வொரு காலவட்டத்திலும், சகாப்தத்திலும் விருந்தானது ஆதரிக்கப்பட்டும், விரும்பப்பட்டும் வந்துள்ளது. இறைவனுடைய அன்பர்களுக்காக மேசையை விரிப்பது, போற்றத்தக்கச் செயலாகக்**

**கருதப்பட்டு வந்துள்ளது. ஈடிணையற்ற இச்சகாப்தத்தில், காலங்களில் மிகவும் பெருந்தன்மையுள்ள இக்காலத்தில், இவ்விஷயம் பிரத்தியேகமானது. அது உயர்ந்த ஆரவாரத்துடன் கருதப்படுகின்றது. ஏனெனில் அது, இறைவனை வழிபட்டுப் போற்றிப் புகழ்வதற்காக நடத்தப்படும் கூட்டங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது. இங்குப் புனித வாசகங்கள், தெய்வீக எழுச்சிப் பாடல்கள் மற்றும் போற்றுதல்கள் இசையோடு ஓதப்பட்டு, உள்ளம் ஆன்மீக எழுச்சியூட்டப்பட்டு, தன்னிடத்திலிருந்து அப்பால் அழைத்துச் செல்லப்படுகிறது."[27]**

- விருந்தின் நிர்வாகப் பகுதியின்போது, அருகிலும் தூரத்திலுமுள்ள பஹாய் சமூகங்களின் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகளை நண்பர்கள் கேட்டறிந்து, தங்களுடைய சமூகத்தில் சமய விவகாரங்கள், சமுதாய நல்வாழ்விற்கான தங்களின் பங்களிப்பு ஆகியவற்றைப் பற்றி கலந்துரையாடி, உலக நீதிமன்றத்திடமிருந்து பெறும் வழிகாட்டுதலை நன்றாகத் தெரிந்து கொண்டு, தங்கள் திட்டங்களின் முன்னேற்றம் மீது பிரதிபலித்தும் சமய ஸ்தாபனங்களுக்குப் பரிந்துரைகளும் வழங்குவர். பத்தொன்பது நாள் விருந்தின்போது நடைபெறும் கலந்துரையாடல்கள் மிக முக்கியமானவை. ஏனெனில் இதன் மூலமாக ஒவ்வொரு தனிநம்பிக்கையாளரும், உலகளாவிய பஹாய் சமூகத்தின் விவகாரங்களில் பங்கேற்கிறார்.

- விருந்தின் சமூகப் பகுதி சம்பந்தமாக—தோழமை, விருந்தோம்பல், அன்பு ஆகியவற்றிற்கான நேரம். இப்பகுதியின்போது இசை நிகழ்ச்சியிருக்கலாம். ஆன்மீக உற்சாகமூட்டும் சொற்பொழிவுகள் ஆற்றப்படலாம். குழந்தைகள் நிகழ்ச்சிகள் வழங்கப்படலாம். சுருங்கக் கூறின், கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கௌரவமான மற்றும் மகிழ்ச்சிமிக்க கலாச்சாரத்தின் வெளிப்படுத்துதல்கள், பயன்படுத்தப்பட்டு, விருந்தின் இப்பகுதிக்குச் சுவாரசியம் ஊட்டலாம்.

- பத்தொன்பது நாள் விருந்து சமயத்தின் நிர்வாக அமைப்பின் ஒரு முக்கிய அம்சமாகும். சமூக வாழ்வின் பக்தி, நிர்வாக மற்றும் சமூக அம்சங்களை அது ஒன்று சேர்க்கின்றது. இந்த அம்சங்கள் அனைத்தும் சமமாக வலியுறுத்தப்பட வேண்டும். ஏனெனில் விருந்தின் வெற்றி, இம்மூன்று பாகங்களின் சமநிலையைச் சார்ந்துள்ளது. உலக நீதிமன்றத்தின் ஆகஸ்ட் 1989 கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

**"பஹாவுல்லாவின் உலக அமைப்புமுறையானது, மனித சமுதாயத்தின் எல்லா அடிப்படைகளையும் தழுவியுள்ளது. வாழ்வின் ஆன்மீக, நிர்வாக, மற்றும் சமூக முறைகளை இணைத்து, அதன் பல்வேறு வடிவங்களில் மனித வெளிப்படுத்தல்களை ஒரு புதிய நாகரீகத்தை நிர்மாணிக்கும் வகையில் ஒருங்கிணைத்திட கால்வாய் போல**

**செயல்படுகிறது. சமூதாயத்தின் அடி மட்டத்திலேயே, 19-ஆம் நாள் விருந்து இவ்வனைத்து அம்சங்களையும் தழுவுகின்றது. கிராமம், பட்டணம், நகரம் ஆகியவற்றில் செயல்படும் இது, பஹாய்கள் இதன் உறுப்பினராக இருக்கும் நிறுவனமாகும். ஒற்றுமையை வளர்த்து, முன்னேற்றத்தை நிச்சயித்து, மகிழ்ச்சியை, அன்பாக வளர்ப்பதே அதன் நோக்கமாகும்.”[28]**

- 19ம் நாள் விருந்து போன்ற ஒரு முக்கியமான நிகழ்ச்சியை அவசரத்தில் ஏற்பாடு செய்திட முடியாது. ஒவ்வொரு நம்பிக்கையாளரும் பிரார்த்தனை மற்றும் தியானம் ஆகியவற்றின் மூலம் விருந்துக்குத் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். விருந்தின்போதும், பக்திப் பகுதியில் வாசிக்கும்போதும் அல்லது திருவாசகங்களை வாசிக்கும்போதும் அவற்றைக் கேட்பதிலோ, அறிக்கைகள் வழங்குவதிலோ, வழிகாட்டுதல் பெறுவதிலோ, ஆலோசனைகள் வழங்குவதிலோ, விருந்து வழங்குபவராகவோ, பிரகாசத்துடனும் மகிழ்ச்சியுடனும், விருந்தோம்பலில் பங்கேற்பவரோ, அவர்கள் ஒவ்வொருவரும் உள்ளத்தாலும், மனதாலும் பங்கேற்க வேண்டும். பத்தொன்பது நாள் விருந்து பற்றிய அதே கடிதத்தில் உலக நீதிமன்றம் இவ்வாறு கூறுகின்றது:

**“விருந்துக்கு ஆயத்தமாவதில் முக்கிய அம்சங்களாவன: புனித வாசகங்களை உகந்த முறையில் தேர்ந்தெடுத்து, முன்கூட்டியே நல்ல முறையில் வாசிப்பவர்களைத் தெரிவு செய்து, ஒப்படைப்பது மற்றும் பக்தி நிகழ்ச்சியினை வழங்குவதிலும், ஏற்பதிலும் சீரொழுங்குமிக்க உணர்வும் ஆகும். கட்டிடங்களுக்கு உள்ளேயோ, வெளியிலோ விருந்து நடத்தப்படவிருக்கும் சுற்றச்சூழலின் மீது செலுத்தப்படும் கவனமானது, அந்நிகழ்ச்சியின் மீது பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. தூய்மை, சாத்தியமான மற்றும் அலங்கார வழிமுறைகளைக் கொண்டு, இடத்தைச் சீராக அமைப்பது - ஆகியன யாவும், ஒரு சிறப்பான இடத்தை வகிக்கின்றன. காலந்தவறாமையும் நல்ல ஏற்பாட்டின் ஓர் அறிகுறியாகும்.”**

**“பெரும்பாலும் விருந்தின் வெற்றி, தனிநபர் அதற்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளும் முறையையும், அதில் பங்கேற்கும் விதத்தையும் சார்ந்துள்ளது. பேரன்புக்குரிய மாஸ்டர் அவர்கள், பின்வரும் அறிவுரையை வழங்குகின்றார். “பத்தொன்பதாம் நாள் விருந்து கூட்டங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்குங்கள், அதனால், இவ்வேளைகளில், தேவனின் அன்புக்குரியவர்களும், கருணைமிக்கவரின் பணிப்பெண்களும் இராஜ்ஜியத்தின்பால் தங்கள் வதனங்களைத் திருப்பி, ஆன்மீக உரையாடல்களைப் பாடி, இறைவனுடைய உதவியை மன்றாடி, ஒருவர் மற்றொருவரை மகிழ்வித்து, தூய்மையிலும், புனிதத் தன்மையிலும், இறைவனிடத்தில் அச்சமென்பதிலும், உணர்ச்சி, தன்னலம் ஆகியவற்றினை எதிர்ப்பதிலும்,**

**வளர்ச்சியுறக்கூடும். இவ்வாறு அவர்கள் இந்த லௌகீக உலகிலிருந்து தங்களைத் தாங்கள் துண்டித்துக் கொண்டு, ஆவியின் ஆவல்களில் மூழ்கிக் கொள்ளக்கூடும்.”**[29]

எப்போதும் போன்று, உங்கள் குழுவில் மேற்கண்ட யோசனைகளை, அவற்றை நீங்கள் எளிதாகக் கூறமுடியும் வரை பலமுறை படித்தும் கலந்துரையாடவும் வேண்டும். பின்வரும் பயிற்சிகள் பத்தொன்பது நாள் விருந்தின் முக்கியத்துவம் குறித்து கூடுதல் அகப்பார்வைகள் பெற உங்களுக்கு உதவிடும்:

1. கடவுளை மகிமைப்படுத்துவதற்காக நாம் ஒன்றுகூடும் ஒவ்வொரு இருப்பிடத்தையும் அடையாளப்படுத்தக்கூடியது எதுவென பஹாவுல்லா கூறுகிறார்? ________________________

   ________________________________________________________________________________

2. மேலேயுள்ள இரண்டாவது மேற்கோளில், நாம் கூட்டங்களில் ஒன்றுகூடும்போது, அங்ஙனம், ________________________, ___________________________, பேசி ________________________ ________________________________, படிக்கவேண்டும்; ஏனெனில், இறைவனின் திருமொழிகளே, ____________________________________________, _____________________ .

3. நாம் கூட்டங்களில் ஒன்றுகூடி, அங்ஙனம், விவேகத்துடனும், சொல்லாற்றலுடனும், பேசி இறைவனின் திருவாசகங்களைப் படிக்க வேண்டுமென கூறுகின்றார், அதனால்:

   – நாம் வாழும் அந்த நாடு ______________________________________________________________

   – நாம் வாழும் அந்த நிலம் _____________________________________________________________

4. பஹாய் நாள்காட்டியில் எத்தனை மாதங்கள் உள்ளன? ____________________________________

5. ஒவ்வொரு மாதத்திலும் எத்தனை நாள்கள் உள்ளன? ______________________________________

6. மாதம் ஒரு முறை பஹாய்களுக்கிடையில் என்ன விசேஷ ஒன்றுகூடல் நடைபெறுகிறது? _

   ________________________________________________________________________________

7. பத்தொன்பது நாள் விருந்தின் மூன்று பாகங்கள் யாவை? _______________________________

   ________________________________________________________________________________

   ________________________________________________________________________________

8. பத்தொன்பது நாள் விருந்தின் எல்லா அங்கங்களும் ஏதாவது ஒரு வரிசைப்படி நடத்தப்படுகின்றனவா?

   ________________________________________________________________________________

9. விருந்தின் வழிபாட்டு அங்கத்தின் நோக்கம் என்ன? ______________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

10. விருந்தின் நிர்வாகப் பகுதியின் நோக்கமென்ன? ______________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

11. விருந்தின் தோழமைப் பகுதியின் நோக்கமென்ன? ______________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

12. பின்வருவனவற்றுள் விருந்தின் நிர்வாகப் பகுதியின்போது கலந்துரையாடுவதற்குத் தகுதியானவை எவை?

- _______ சமூகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் நிதித் தேவை
- _______ தேசிய காற்பந்தாட்டக் குழுவின் கோல் கணக்கு
- _______ சமூகத்தின் இரண்டு உறுப்பினர்களுக்கிடையிலான கருத்துவேறுபாட்டை எவ்வாறு தீர்த்தல்
- _______ சமூகத்தின் பஹாய் சிறுவர் வகுப்பின் மேம்பாடு
- _______ வார ஆரம்பத்தில் சமூகத்தினர் ஒருவர் படிப்பாய்வு செய்த திருவாக்குகளிலிருந்து ஒரு பத்தியின் அர்த்தம்
- _______ சமூகத்தின் இளைய இளைஞர் திட்டத்தின் உத்வேகம்
- _______ உள்ளூரில் இளைஞர்களுக்காகத் திறந்திருக்கும் வேலை வாய்ப்புகள்
- _______ சேவைத் திட்டங்கள் பலக்கியம் அடைந்துள்ள இளைய இளைஞர் குழுக்களுக்கு சமூகம் வழங்கக்கூடிய ஆதரவு
- _______ பயிற்சிக்கழகம் ஊக்குவிக்கும் கல்வித் திட்டங்களில் பங்கேற்கும் சிறார்கள் மற்றும் இளைய இளைஞர்களின் பெற்றோருக்கு விஜயம் செய்தல்
- _______ சமூகத்தின் பக்திப் பண்பை பலப்படுத்தல்

_______ தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நிகழ்சிகளின் நிரல்

_______ படிப்பு வட்டங்களில் பராமரிக்கப்பட வேண்டிய மகிழ்ச்சிமிகு மற்றும் கட்டுப்பாட்டுடனான சூழ்நிலை குறித்து அடையப்பட்டுள்ள அகப்பார்வைகள்

_______ எதிர்வரும் புனிதநாள் கொண்டாட்டம்

_______ சமூக நிர்மாணிப்பு செயல்முறையிலிருந்து எழும் சமுதாய நடவடிக்கை சார்ந்த முன்முனைவுகள்

13. பின்வரும் கேள்வியை உங்கள் குழுவினருடன் விவாதிக்கவும்: விருந்தின் மூன்று பாகங்களுக்கிடையில் சமநிலை ஏன் முக்கியமாகின்றது?

14. இப்பொழுது பின்வரும் இரண்டு கேள்விகளையும் விவாதிக்கவும்

அ. நீங்களே விருந்தின் ஏற்பாட்டாளராக இருப்பின் அதை எவ்வாறு ஏற்பாடு செய்வீர்கள்?

ஆ. நீங்களே விருந்தில் பங்கேற்பாளர் மட்டுமே எனும்போது அதற்காக நீங்கள் உங்களை எவ்வாறு ஆயத்தப்படுத்திக்கொள்வீர்?

## பகுதி 13

பெரும்பாலும் சமயத்தைப் பற்றிய உரையாடல்களில் எழக்கூடிய இரண்டாவது கேள்வி, பஹாய் சமூகம் தனது நிதித் தேவைகளை எவ்வாறு சந்திக்கின்றது என்பது பற்றியதாகும். அத்தகைய கேள்விகளுக்குப் பதிலாக கீழே சில குறிப்புகள் வழங்கப்படுள்ளன.

- பஹாய் சமூகமானது தனது நிதித் தேவைகளைக் கவனித்துக்கொள்வதற்குப் பயன்படுத்தும் கருவி பஹாய் நிதியமாகும். வெவ்வேறு மட்டங்களில் சமய ஸ்தாபனங்களினால் நிர்வகிக்கப்படுகின்றது: உள்ளூர், தேசிய, கண்ட, மற்றும் அனைத்துலகம். தங்களின் சமயத்தை மேம்படுத்துவதற்கான செலவுகளை தாங்கள் மட்டுமே ஏற்று நடத்த வேண்டுமென பஹாய்கள் நம்புகின்றனர். ஆதலால், பஹாய் நிதியம் பஹாய் சமூக உறுப்பினர்களிடமிருந்து மட்டுமே நிதிகளைப் பெறுகின்றது.

- பஹாய் நிதியத்திற்குப் பங்களித்தல் ஒரு தன்னார்வமான செயலாகும். அது தனிநபர்க்கும் சமயத்தின் ஸ்தாபனங்களுக்கும் இடையிலான ஒரு விஷயமாக இருப்பதால் அது இரகசியமான ஒன்றாகும்; பங்களிப்பாளர்களின் பெயர்களும் வழங்கப்பட்ட தொகைகளும் அறிவிக்கப்படுவதில்லை; பங்களிக்க வேண்டுமென சமூக உறுப்பினர்கள் வற்புறுத்தப்படுவதுமில்லை. ஸ்தாபனங்கள் சமூகத்திற்குப் பொதுவான அறைகூவலே

விடுக்கின்றன, நிதியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி சமூகத்திற்கு நினைவூட்டுகின்றன, மற்றும் நிதித் தேவைகளின் விவரங்களைக் குறிப்பிடுகின்றன. அவ்வப்போது ஒரு சமூகம் தனக்கென ஒரு நிதி இலக்கை விதித்துக்கொள்கின்றது. ஆனால் தனிநபர்களுக்குத் தொகைகள் விதிக்கப்படுவதில்லை, அவர்களிடமிருந்து பணமும் கோரப்படுவதில்லை. சம்பந்தப்பட்ட கொள்கைகள் பற்றிய அவரவர் புரிதலுக்கு ஏற்ப எவ்வளவு பங்களிக்க விரும்புகின்றனர் என்பது தனிநபர் தீர்மானத்திற்கே விடப்படுகின்றது.

- பஹாய்களாகிய நாம் நிர்மாணித்து வரும் நாகரீகமானது லௌகீக ரீதியிலும் ஆன்மீக ரீதியிலும் வளமான ஒன்றாக இருக்கும். செல்வம் என்பது சில நிபந்தனைகளின் அடிப்படையில்தான் ஏற்றுக் கொள்ளப்படும். அதை நாம் நேர்மையான உழைப்பினால்தான் பெறவேண்டும். மனுக்குலத்தின் நன்மைக்காக நாம் அதைச் செலவு செய்ய வேண்டும். சமூகம் முழுவதுமே உயர்த்தப்பட வேண்டும். சிலர் அதிக அளவில் செல்வந்தர்களாக இருந்து, பெரும்பான்மையினர், வாழ்வின் அடிப்படைத் தேவைகளுமின்றி இருப்பது என்ற சூழ்நிலை ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. பஹாவுல்லா நமக்குக் கூறுவதாவது:

**வாழ்க்கைத் தொழிலின் மூலம் ஜீவனம் தேடி, உலகங்களுக்கெல்லாம் பிரபுவாகிய இறைவன்பால்கொண்ட அன்பின் பொருட்டு, அதனைத், தங்களுக்காகவும் தங்களின் உறவினருக்கும் செலவு செய்பவர்கள் மனிதர்களுள் மிகச் சிறந்தவர்கள்”**[30]

**“...நீங்கள் நேர்த்தியான, வியத்தகு கனிகளைக் கொடுக்கவேண்டும்; அதனால் நீங்களும் மற்றவர்களும் அதிலிருந்து பலன் பெறக் கூடும். எனவே, அனைவரும் கைத்தொழில்களிலும், வாழ்க்கைத் தொழில்களிலும் ஈடுபடவேண்டியது கடமையாகின்றது. அறிவாற்றலுடைய மனிதர்களே! அதனில்தான் செல்வத்தின் இரகசியம் அடங்கியிருக்கின்றது!”**[31]

அப்துல்-பஹா விளக்குகின்றார்:

**“மக்கள் அனைவரும் செல்வச்செழிப்புடன் வாழும்போது செல்வம் மிகவும் போற்றத்தக்க ஒன்றாகிறது. ஆனால், சிலர் அதிகப்படியான செல்வம் படைத்தவர்களாகவும், மற்றவர்கள் வறியவர்களாகவும் வாழும்போதும், குறிப்பிட்ட அச்செல்வத்தால் யாருக்குமே பலனோ பயனோ இல்லாதபோதும், அச்செல்வமானது அதன் உரிமையாளருக்கு ஒரு சுமையே ஆகும்.”**[32]

- அநீதி, அவலம் ஆகியவை அற்ற ஒரு சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கு நாம் அனைவருமே வள்ளன்மைமிக்கவர்களாகவும் கொடுப்போராகவும் இருக்க வேண்டும். நமது பொருள்வளம்

அற்பமாக இருப்பினும், நாம் மானிடத்தின் முன்னேற்றத்திற்காக ஏதாவது பங்களிக்கவே வேண்டும், ஏனெனில் கொடுத்தலின் மூலமாக மட்டுமே உண்மையான செழுமை அடையப்பட இயலும். வள்ளன்மை என்பது மனித ஆன்மாவின் ஒரு பண்பாகும்; அதற்கும் நமது லௌகீக சூழ்நிலைக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. மறைமொழிகளில் பஹாவுல்லா கூறுவதாவது:

**“அளிப்பதுவும் தாராளமாய் இருப்பதுவும் எனது பண்புகளாகும்; எனது பண்புகளினால் தன்னை அலங்கரித்துக்கொள்ளும் ஒருவன் நன்மை பெறுவான்.”[33]**

- நாம் பெற்றிருக்கும் செல்வம் எதுவாயினும் அதன் உண்மையான மூலாதாரம் சர்வ-வள்ளன்மையாளரான கடவுளே ஆவார் என்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். அவர் நமக்கு வாழ்வாதாரத்தை வழங்குகின்றார்; நாம் முன்னேற்றம் அடைவதை அவர் சாத்தியமாக்குகின்றார். நாம் நிதியத்திற்குப் பங்களிக்கும்போது, கடவுள் நமக்கு ஏற்கனவே வழங்கியுள்ளவற்றிலிருந்து ஒரு பகுதியைச் செலவு செய்கின்றோம். பஹாய்களைப் பொறுத்தவரை, நிதியத்திற்கு வழங்குதல் என்பது வெறும் வள்ளன்மை தொடர்பான செயல் மட்டுமல்ல; அது ஆன்மீக அருட்கொடையும் ஒரு பெரும் தனிநபர் கடமையும் ஆகும். பாதுகாவலர் பின்வருமாறு ஆலோசனை வழங்கின்றார்:

**“அது பெற்றிருக்கும் அனைத்தையும் தொடர்ச்சியாகப் பொழிந்துகொண்டும் ஒரு மர்ம மூலாதாரத்திலிருந்து தொடர்ச்சியாக மீண்டும் நிரப்பப்படும் ஒரு நீர்த்தாரை அல்லது ஒரு நீரூற்றைப் போன்று நாம் இருந்திட வேண்டும். வறுமை குறித்த பயத்தினால் தடைபடாமலும் சகல செல்வங்கள் மற்றும் நன்மையின் மூலாதாரத்தின் தவறாத கொடையில் நம்பிக்கை வைத்தும் தொடர்ச்சியாக வழங்கிக்கொண்டிருப்பது—அதுவே நேர் வாழ்வின் இரகசியமாகும்.”[34]**

இந்தத் தொடர்வரிசையில் பின்னர் வரப்போகும், லௌகீக வழிமுறைகள் பற்றிய கருப்பொருளை உரைக்கும் பாடம் ஒன்றில் இங்கு வழங்கப்பட்டுள்ள யோசனைகளில் சிலவற்றை மேலும் ஆழமாகப் பரிசீலிப்பதற்கான வாய்ப்பை நாம் பெறுவோம். எப்போதும் போன்று, மேற்கண்ட உள்ளடக்கத்தை ஒவ்வொரு விஷயமாக விவாதிக்கவும் பின்னர் யோசனைகளை இயல்பாகவும் சுலபமாகவும் வெளிப்படுத்தக் கற்பதற்கும் பின்வரும் பயிற்சிகளை மேற்கொள்ளுமாறு நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள்:

1. வழங்கப்பட்ட மேற்கோள்களின் அடிப்படையில், கீழே உள்ள வாக்கியங்களில் உள்ள காலியிடங்களைப் பூர்த்தி செய்யவும்.

அ. வாழ்க்கைத் தொழிலின் மூலம் ____________ தேடி, அதனைத், ____________ ____________ ____________ ____________ ____________ பஹாவுல்லா நமக்குக் கூறுகின்றார்.

ஆ. நாம் ____________, ____________ கனிகளைக் கொடுக்கவேண்டும்; அதனால் நாமும் மற்றவர்களும் ______________________________________________________________.

இ. நாம் அனைவரும் ________________________ __________________ ஈடுபடவேண்டும்; அதனில்தான் ____________ ____________ அடங்கியிருக்கின்றது

ஈ. மக்கள் அனைவரும் ________________________ வாழும்போது செல்வம் மிகவும் ________________________ ஒன்றாகிறது என அப்துல்-பஹா கூறுகின்றார்.

உ. __________ அதிகப்படியான _______________ படைத்தவர்களாகவும், _______________ _______________ வாழும்போதும், குறிப்பிட்ட _______________ _______________ ______________ இல்லாதபோதும், _______________ அதன் _______________ ஒரு _______________ ஆகும்.

ஊ. _______________ _______________ இருப்பதுவும் எனது பண்புகளாகும்; எனது பண்புகளினால் தன்னை _______________ _______________ கொள்ளும் ஒருவன் நன்மை பெறுவான், என பஹாவுல்லா கூறுகின்றார்.

எ. அது பெற்றிருக்கும் அனைத்தையும் தொடர்ச்சியாகப் _____________________ ஒரு மர்ம மூலாதாரத்திலிருந்து தொடர்ச்சியாக ______________________ ஒரு _______________ அல்லது ஒரு _______________ போன்று நாம் இருந்திட வேண்டுமென பாதுகாவலர் கூறுகின்றார்.

ஏ. _____________________________________ சகல செல்வங்கள் மற்றும் நன்மையின் _____________________________________________ நம்பிக்கை வைத்தும் தொடர்ச்சியாக ________________________ நேர் வாழ்வின் இரகசியமாகும்."

2. மேற்கண்ட வழங்களில் பின்பற்றப்பட்டுள்ள யோசனை வரிசையை எழுதவும்:

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

## பகுதி 14

நடவடிக்கைகள் பெருகிவரும் ஒரு கிராமத்தில் அல்லது அண்டைப்புறத்தில் மடிப்பவிழும் உரையாடல்வகைகள் குறித்த அகப்பார்வைகள் பெற, ஓர் இளம் பல்கலைக்கழக மாணவியான அலெயான்ட்ராவின் முயற்சிகளை நாம் பின்தொடர்ந்தோம். பல வாரங்கள் தொடர்ந்த விஜயங்களின்போது, சமயம் பற்றிய சாஞ்செஸ் தம்பதியின் அறிவையும் அவர்கள் தழுவியுள்ள போதனைகளின்பால் அவர்களின் கடப்பாட்டைப் பலப்படுத்தவும் உதவும் என தான் நம்பும் பல கருப்பொருள்களை அலெயான்ட்ரா அவர்களுடன் கலந்தாய்வு செய்தார். இறுதியில், அங்கு சாஞ்செஸ் தம்பதியின் பேத்தியான பீட்ரிஸின் வருகை, கற்பதற்கு ஆர்வம் கொண்ட இரண்டு இளைஞர்களுக்கிடையிலான மற்றொரு வகையான உரையாடலை ஆராய்ந்திட வகை செய்தது. விவரக்குறிப்புகளைப் படித்து பயிற்சிகளை பூர்த்தி செய்வதில், பொருத்தமான கருப்பொருள்களில் அறிவு வளர்ச்சிக்கும் கூடுதலாக, இங்கு நாம் பரிசீலிக்கும் உரையாடல்களைப் பராமரிப்பதற்குத் தேவையான குறிப்பிட்ட சில ஆன்மீகப் பண்புகள், மனப்பான்மைகள், மற்றும் திறன்கள் தேவைப்படுவதை நாம் கண்டோம்.

இந்தப் பகுதியிலும், அடுத்து வரும் பகுதியிலும் வேறு விதமான கருப்பொருள்களை நாம் ஆராயவிருக்கின்றோம்—அதாவது, பயிற்சிக்கழகத்தினால் ஊக்குவிக்கப்படும் கல்வியல் திட்டங்களில் பங்கேற்கும் இளையோரின் குடும்பங்களுக்கான விஜயங்களின்போது கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்படுபவை. ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தலும் ஓர் எனிமேட்டர் என்னும் முறையில் இளைய இளைஞர்களுக்கான வழிகாட்டலும் அடுத்து வரும் நூல்களான முறையே நூல் 3 மற்றும் 5'இல் உரைக்கப்படுகின்றன. இந்த இரண்டு திட்டங்களிலும் உங்கள் சிறு வயதில் உங்களின் பங்குபெறலை பொருத்து, இணைவாக வரும் இந்த இரண்டு திட்டத்துடனும் நீங்கள் பரிச்சயமாகி அல்லது ஆகாமலும் இருக்கலாம்.

முதலில், இளைய இளைஞர் குடும்பங்களுடனான நடப்பிலிருக்கும் உரையாடலுக்கு ஓர் அடித்தலமாக அமையும் உள்ளடக்கத்தை நாம் பார்க்கலாம். நமது விவரக்குறிப்பை நாம் விட்டுவந்து சில காலம் கடந்துவிட்டதாகவும், இப்பொழுது பீட்ரிஸ் நூல் 2'ஐப் பயில்வதாகவும் கற்பனை செய்துகொள்வோம். அலெயான்ட்ராவின் உதவியுடன் ஸ்தாபிக்கப்படவிருக்கும் ஒரு குழுவின் இளைய இளைஞர் பலரின் குடும்பங்களுக்கான வருகையின்போது தன்னோடு உடன்வரும்படி தனது தோழியை கேட்கிறார். பீட்ரிஸ் அதற்கு ஆர்வத்துடன் ஒப்புக்கொள்கிறாள்.

அலெயான்ட்ரா தொலைநோக்காக எதைக் காண்கின்றார் என்பதை பீட்ராஸுக்கு விளக்குகிறார். “தங்கள் மகன் அல்லது மகள் சேர்ந்திட ஆர்வம் காண்பித்துள்ள திட்டத்தை பெற்றோருக்கு அறிமுகப்படுத்துவதன் மூலமும் அது அண்டைப்புறத்தில் முன்னோக்கி நகர்ந்துகொண்டிருக்கும் சமூக நிர்மாணிப்பு செயல்முறையின் ஒரு பகுதி என தெரிவிப்பதன் மூலமும் நாம் ஒவ்வொரு விஜயத்தையும் ஆரம்பிக்கலாம். அதன் பிறகு திட்டத்தின் அகத்தில் உள்ள கருத்தாக்கங்களையும் யோசனைகளையும் அவர்களுடன் நாம் ஆராய்வோம். இதுவே நமது விஜயங்களின் வரிசையில் முதலாவதாகும். காலப்போக்கில் உரையாடல் மேம்பாடு காண்கையில், அக்குடும்பமானது குழுவிற்கு பல்வேறு வழிகளில் ஆக்ககரமான ஆதரவு நல்குவது மட்டுமின்றி, சமூகத்தின் இளைய இளைஞர் ஆன்மீக சக்தியூட்டலின் ஊக்குவிப்பாளர்கள் ஆகிடவும் கூடும் என்பதே நமது நம்பிக்கை.”

தொடர்ந்து, அலெயான்ட்ராவும் பீட்ரிஸும் ஒவ்வொரு குடும்பத்துடனும் தாங்கள் எழுப்ப திட்டமிடும் சில விஷயங்களை விவாதித்தனர். முதல் வருகையின்போது சிலவற்றை மட்டுமே முடிக்கவியலும், மற்றும் எஞ்சியவற்றை அடுத்த விஜயத்தின்போது உரைக்கலாம் என்னும் அறிவோடு முக்கியமென தாங்கள் நினைத்த யோசனைகளை எழுதி வைக்க அவர்கள் தீர்மானித்தனர் இளைய இளைஞர்களின் சாத்திய ஆற்றல்கள் குறித்து அவர்கள் பட்டியலிட்ட சில விஷயங்கள் இதோ கீழே:

- ஒரு தனிநபரின் வாழ்வில் 12 வயத்திற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்ட மூன்று வருடகாலம் மிகவும் முக்கியமான காலகட்டமாகும்—குழந்தைப்பருவத்திலிருந்து முதிர்ச்சிக்கு மாற்றம் காணும் ஒரு காலகட்டம்

- இந்த வயது நெடுக்கத்திலுள்ள இளையோர்களை நாம் “இளைய இளைஞர்” என பெரும்பாலும் அழைக்கின்றோம். அவர்கள் இனியும் சிறுவர்கள் அல்லர், இருப்பினும் முழுமையான இளமைப் பருவத்தையும் இன்னமும் அடைந்திலர்.

- துரதிர்ஷ்டவசமாக, இந்த இளைய இளைஞரை முரட்டு சுபாவத்தினர், எதிர்மாறான, சுயநலமிக்க, நெருக்கடிகள் நிறைந்தோரெனத் தவறாக ஆனால் பரவலாகப் பரப்பப்பட்டுவரும் ஒரு கருத்து உள்ளது. ஆனால் நாம் அவர்களை வேறுவிதமாகக் காண்கின்றோம். இந்தக் குறுகிய காலகட்டத்தில் நாம் விரைவான உடலார்ந்த, உணர்ச்சியார்ந்த, மனோரீதியான மாற்றங்களுக்கு, உட்படுகின்றோம். இதன் விளைவாக நாம் சிறிது எதிர்மாறான குணத்தை வெளிப்படுத்தக்கூடும். ஆனால், மெய்நிலையில், இது பெரும் சாத்தியங்களும் வாக்குறுதிகளும் மிக்க ஒரு காலமாகும்.

- நாமும் சில காலத்திற்கு முன் இளைய இளைஞர்களாக இருந்தவர்களே, நாமும் இந்த மாற்றங்களுக்கு உட்பட்டவர்களே என்பதை எண்ணிப்பாருங்கள். சில நேரங்களில் தைரியத்தோடும், சில நேரங்களில் பயந்தோராகவும் இருந்தோம். சில நேரங்களில் நன்றாகப் பழகவும், சில நேரங்களில் கூச்சமுடையவர்களாகவும் இருந்தோம். கவனம் செலுத்தப்பட எதிர்ப்பார்க்கும் அதே வேளை தனிமையில் இருக்கும் விருப்பத்தையும் வெளிப்படுத்தினோம். நாம் எதில் திறமைசாலிகளாக இருக்கின்றோம், என்ன திறன்களும் திறமைகளும் நமக்கு உள்ளன என்பதைப் புரிந்துகொள்ள விரும்பினோம். மக்கள் நம்மை எப்படி கண்ணுறுகின்றனர், நமது யோசனைகளைப் பற்றி என்ன எண்ணுகின்றனர் என்பது நமக்கு மிகவும் முக்கியமாக இருந்தது.

- இவ்விதமான நடத்தை தற்காலிகமானதே என்பதை உணர்வது முக்கியமாகும். மனித வாழ்வில், இந்த வருடங்களின்போது தான் குறிப்பிட்ட சில மனோசக்திகள் விரைவாக உருவாகின. வாழ்க்கை குறித்த அடிப்படையான கேள்விகளுக்குப் பதில்கள் காண ஆரம்பித்தோம். நம்மைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதை ஆராய்ந்தோம்; நமக்கு போதிக்கப்பட்ட பெரும்பாலான விஷயங்கள் குறித்து கேள்விகள் எழுப்பினோம். முன்பைப் போன்று முதியவர்கள் கூறும் எதையும் தானியங்கியாகப் பின்பற்ற விருப்பம் அற்றவர்களாக இருந்தோம், குறிப்பாக அவர்களின் சொற்களுக்கும் செயல்களுக்கும் இடையில் முரண்பாடுகளை நாம் காணும்போது.

- இளைய மக்கள் வெளிப்பட்டு வரும் தங்களின் சக்திகளை பயனான முறையில் பயன்படுத்திட உதவப்பட வேண்டுமானால், அவர்கள் குழந்தைகளாகப் பார்த்தல் தவிர்க்கப்படுவது முக்கியம். இக்காலகட்டத்தை அப்துல்-பஹா பின்வருமாறு வர்ணிக்கின்றார்:

  **சில காலத்திற்குப் பிறகு அவன் இளமைப் பருவத்திற்குள் நுழைகின்றான். அப்பருவத்தில், தனது கடந்த நிலைகளும் தேவைகளும், தனது நிலையின் மேம்பாட்டுக்கு ஏற்புடைய புதியத் தேவைகளினால் தள்ளிவைக்கப் படுகின்றது. அவனது கூர்ந்தாராயும் தன்மைகள் விசாலமாக்கப்பட்டும் ஆழப்படுத்தவும் படுகிறது, அவனது அறிவுத் திறன்கள், பயிற்றுவிக்கப்பட்டு, விழிப்புட்டப்படுகிறது, குழந்தைப் பருவத்தின் கட்டுப்பாடுகளும் சூழ்நிலைகளும் அவனது சக்திகளையும் சாதனைகளையும் இதற்கு மேற்பட்டுக் கட்டுப்படுத்துவதில்லை.”[35]**

- பஹாய் சமயத்தின் நிர்வாக அமைப்பான உலக நீதிமன்றம் இளைய இளைஞர்களுடன் செயல்பட நாம் பயன்படுத்தும் அணுகுமுறை குறித்து இவ்வாறு கூறுகின்றது:

  **“உடல் ரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும் கொந்தளிப்புக் கடலில் மூழ்கிய நிலையில் இந்த பால்ய வயதினர் பிரச்சினைகளை உருவாக்குபவர்கள் என்னும் பொதுவான கருத்து உலகம் முழுவதும் நிலவி வரும் அதே வேளையில், பஹாய் சமூகம் அந்த வயதினரை வருணிப்பதிலும், அணுகுமுறைகளை விவரிப்பதிலும் பயன்படுத்தும் மொழியில் அந்த உலகளாவிய கருத்துக்கு எதிர் திசையில் செல்கின்றது. அதாவது, அவர்களிடத்தில் அந்தக் கொந்தளிப்பு உணர்வுகளுக்குப் பதிலாக, பொதுநலப் பண்புகளையும், நீதிக்கான ஒரு சீரிய உணர்வையும், இப்பிரபஞ்சத்தைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தையும், ஒரு மேம்பட்ட உலகை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்வதில் ஆர்வம் உள்ளவர்களாகவும் பஹாய் சமூகம் அவர்களைக் காண்கின்றது.”[36]**

அடுத்து அலெயான்ட்ராவும் பீட்ரிஸும் ஆன்மீக சக்தியூட்டல் திட்டத்தின்பால் தங்கள் கவனத்தைத் திருப்பி, அதன் அம்சங்கள் சிலவற்றை அடையாளங்காண முயல்கின்றனர்:

- பன்னிரண்டு வயதிற்கும் பதினைந்து வயதிற்கும் இடைப்பட்டோர், கருத்தாக்கங்களை ஆராய கற்றல், கண்டனம் அல்லது கிண்டலின் பயமின்றி தங்கள் சிந்தனைகளைப் பகிர்தல், திட்டங்களில் ஈடுபடுதல், விளையாடுதல் போன்றவற்றில் தாங்களும் சேர்ந்து ஈடுபடக்கூடிய நண்பர்கள் குழுவைச் சேர்ந்தவர்களாவர். இதன் காரணமாக, இத்திட்டம் “இளைய இளைஞர் குழு” என்னும் கருத்தாக்கத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குழுவும் பெரும்பாலும் சற்று மூத்த இளைஞரும் குழு உறுப்பினர்களுக்கு ஓர் உண்மையான நண்பராகவும், அவர்களின் திறனாற்றல்களை மேம்படுத்த உதவிடும் ஓர் "எனிமேட்டர்" என்பவரால் வழிகாட்டப்படுகின்றது.

- குழுக்கள் வழக்கத்துடன் சந்திக்கின்றன. அவற்றின் சந்திப்புகளில், தங்களின் கருத்துகளை கற்றல், கண்டனம் அல்லது கிண்டலின் பயமின்றி ஆராயக் கற்கின்றனர். செவிமடுக்கவும், பேசவும், பிரதிபலிக்கவும், பகுப்பாய்வு செய்யவும், முடிவுகள் எடுக்கவும், அவற்றைச் செயல்படுத்தவும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

- இளைய இளைஞர் சிந்திக்கும் நடந்துகொள்ளும் விதத்தின் மீது தாக்கம் செலுத்தும் பற்பல எதிர்மறை ஆற்றல்கள் நிறைந்த ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்கின்றோம். இந்த ஆற்றல்களை எதிர்த்திட எனிமேட்டர்கள் உதவுகின்றனர்—சமுதாயத்தின் தார்மீக சிதைவிலிருந்து தங்களைத் தற்காத்துக்கொள்வதற்கு மட்டுமின்றி, உலகின் மேம்பாட்டுக்காகவும் உழைத்தல்.

- மனித ஆன்மாவில் உள்ளார்ந்துள்ள, வளரிளம்பருவத்தின் ஆரம்பத்தில் மேன்மேலும் அதிக அளவில் தங்களை வெளிப்படுத்திக்கொள்ள ஆரம்பிக்கும் சக்திகளைப் பேணிட திட்டம் நோக்கங்கொண்டுள்ளது. குறிப்பாக, சிந்தனை மட்டும் வெளிப்படுத்துதலுக்கான சக்திகள் முக்கியமானவை. உலகைப் பற்றிய ஆழ்ந்த கருத்துகளை வெளிப்படுத்தவும் உலகில் என்னவிதமான மாற்றத்தைத் தாங்கள் காண விரும்புகின்றனர் என்பதை உரைக்கவும் தேவைப்படும் மொழியாற்றலை இளைஞர்கள் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

- இளைய இளைஞர் ஒரு நோக்கம் நிறைந்த வாழ்க்கைக்கு அடிப்படையான கருத்தாக்கங்களின் அர்த்தம் குறித்து பிரதிபலித்திட ஆர்வமாக இருக்கின்றனர். மகிழ்ச்சி, ஆர்வநம்பிக்கை, அதிசிறப்பு ஆகியன சில உதாரணங்களாகும். வருந்தத்தகும் முறையில் இந்த யோசனைகளைப் பற்றி மக்கள் மிகவும் மேலோட்டமான முறையிலேயே பேசுகின்றனர். இத்தகைய கருத்துகள் குறித்த ஆழமான புரிதலைப் பெறுதல், தினசரி வாழ்க்கையில் அவை எவ்வாறு வெளிப்பாடு காண்கின்றன என்பதைக் கண்டுணர்தல் ஆகியவை இளம் உள்ளங்கள் சமுதாயத்தின் எதிர்மறை சக்திகளை எதிர்கொள்ளவும் ஓர் உறுதியான தார்மீக கட்டமைப்பை உருவாக்கிக்கொள்ளவும் உதவுகின்றன.

- கருத்தாக்கங்களைப் புரிந்துகொள்தல் அறிவாற்றல் மேம்பாட்டுக்கு இன்றியமையாதது. சில சமயங்களில் இளைய இளைஞர் பள்ளியில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர், ஏனெனில் அவர்கள் வெவ்வேறு கருப்பொருகள்கள் பற்றி நிறைய தகவல்களைக் கற்கவேண்டியுள்ளது, அதே வேளை அவற்றின் அடித்தல கருத்தாக்கங்களைக்

கிரகிப்பதற்குப்போதுமான உதவி அவர்களுக்குக் கிட்டுவதில்லை. இளைய இளைஞர் திட்டம், தார்மீக, கணிதவியல், அறிவியல், மற்றும் பிற யோசனைகளைப் பற்றி ஆழமாகச் சிந்திக்க தூண்டலளிக்கின்றது மற்றும், இது பள்ளியில் அவர்களின் செயல்பாட்டை மேம்படுத்துகின்றது.

- (தங்களைச் சுற்றியுள்ள) விஷயங்களைப் பற்றி புரிந்துகொள்ள இளைய இளைஞர் பெரும் ஆவல் கொண்டுள்ளனர். அவர்களைச் சுற்றி நடப்பவற்றிற்கான காரணங்களை அவர்கள் புரிந்துகொள்ள விரும்புகின்றனர். வெற்றிபெற வேண்டுமானால், புறக்கண்களால் மட்டுமின்றி அவர்கள் அகக்கண்கலாலும் பார்க்க முடிய வேண்டும். ஆதலால், ஆன்மீகப் புலனுணர்வின் மேம்பாடு திட்டத்தின் ஒரு முக்கிய நோக்கமாகும்: ஆன்மீக ஆற்றல்களைக் கண்டுணரும் திறன், மற்றும் எதிர்நோக்கும் சூழ்நிலைகளில் ஆன்மீகக் கொள்கைகளை அடையாளங் காணுதல்.

- இந்தத் திட்டம் தார்மீக நெறிகளின் மேம்பாடு, ஆன்மீகப் புலணுனர்வு, உரைக்கும் சக்திகள் போன்ற தனது பல்வேறு குறிக்கோள்களை, சில ஏட்டுரைகளின் உதவியுடன் சாதிக்கின்றது. உரைகள், உலகின் வெவ்வேறு பாகங்களிலுள்ள இளையோர்களின் வாழ்க்கைகள் பற்றிய எளிமையான கதைகளை உள்ளடக்கியுள்ளன. இந்த உரைகளை ஒன்றாகப் படித்தல், அவற்றின் உள்ளடக்கங்களை விவாதித்தல், தேவைப்படும் பயிற்சிகளைப் பூர்த்தி செய்தல் ஆகியன தவிர்த்து, விளையாட்டுகளில் பங்கேற்றும் கலைகள், கைத்திறன்கள் ஆகியவற்றைப் பற்றியும் இளைய இளைஞர்கள் கற்கின்றனர்.

- எனிமேட்டர்களின் உதவியுடன், திட்டத்தின் ஒரு பிரதான அம்சமான சேவை திட்ட வரிசைகளையும் குழுக்கள் வடிவமைத்து மேற்கொள்கின்றன. இந்தத் திட்டங்கள் மூலமாக, சமூகத்தைப் பற்றியும் அதன் தேவைகள் குறித்தும் தங்களுக்கிடையிலும் சமூகத்திலுள்ள பிறருடனும் உடனுழைக்கக் கற்றுக்கொள்கின்றனர்.

- உரைப்பகுதிகளால் உள்ளடக்கப்பட்ட கருப்பொருள்கள் பல்வேறானவை; அவை ஒவ்வொன்றும் இளைய இளைஞர் ஆன்மீக சக்தியூட்டலுக்கு இன்றியமையாத கருப்பொருள் மீது கவனம் செலுத்துகின்றன. உதாரணத்திற்கு, முதாலாவது உரையான, “உறுதிப்படுத்தல்” என்பது மேன்மையான இலக்குகளை அடைவதற்கு நாம் எடுக்கும் முயற்சிகளை கடவுள் உறுதிப்படுத்துகிறார் என்னும் கருப்பொருளைப் பற்றி உரைக்கின்றது. மற்றொரு ஏட்டுரை “ஆர்வநம்பிக்கை” பற்றியது—மிகவும் சிரமமான காலங்களிலும் கூட எவ்வாறு நாம் எதிர்காலத்தை ஆர்வநம்பிக்கையுடன் எதிர்நோக்க வேண்டும் என்பது பற்றியதாகும். மற்றொன்று “அதிசிறப்பு” குறித்த கருத்தாக்கத்தைப் பகுப்பாய்கிறது. “மகிழ்ச்சி” என்பது மற்றொரு கதையின் கருப்பொருள்; “திருவாக்கின் சக்தி” மற்றொன்றில்

பிரதிபலிப்புக்கான கருப்பொருளாகும். கணிதவியல் கருத்தாக்கங்களை உரைக்கும் ஏட்டுரைகளில் ஒன்று, ஓர் ஒழுங்கியலான மனதின் பழக்கங்களை ஆராய்கிறது. அறிவியல் களத்தில், உடல், மனம் மற்றும் ஆன்மீக ரீதியில் நாம் நமது சுகாதாரத்தின் மீது கவனம் செலுத்துவது குறித்த மற்றோர் ஏட்டுரை உள்ளது. மற்றும், மூன்று வருடங்களுக்கு இளைய இளைஞர் பயிலும் சுமார் ஒரு டஜன் நூல்கள் உள்ளன.

ஒரு வேளை பெற்றோர் இளைய இளைஞர்களுக்கான நூல்களைக் காண விரும்பும் பட்சத்தில், தங்களுடன் அந்த நூல்களில் ஒன்று அல்லது இரண்டைக் கொண்டுவருவதற்கு அலெயான்ட்ராவும் பீட்ரிஸும் திட்டமிடுகின்றனர். நீங்கள் அந்த நூல்களுடன் பரிச்சயமாக இல்லையெனில் உங்களால் முடிந்த அளவு அக்கதைகளில் பலவற்றைப் படிப்பதற்கு நேரம் ஒதுக்குவது உதவியாக இருக்கும். இடையே, நூல் 5'இல் அதிக ஆழமாக பாவிக்கப்படும், மேலே வழங்கப்பட்டுள்ள யோசனைகளை உங்கள் குழுவின் பிற பங்கேற்பாளர்களுடன் முழுமையாக கலந்தாய்வு செய்திட ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.  ஒரு வேளை, அந்த நூலைப் பயின்ற பிறகு நீங்கள் ஓர் இளைய இளைஞர் குழுவிற்கு ஓர் எனிமேட்டராகச் செயல்பட தீர்மானித்தீர்களானால், அதன் உறுப்பினர் குடும்பங்களுக்கு முறைமையுடன் விஜயம் செய்து, அவர்களுடன் இவற்றையும் இதே போன்ற வேறு பல யோசனைகளையும் நீங்கள் ஆராய்வீர்கள். இப்பொழுதும் கூட, பீட்ரிஸ் போன்று, உங்கள் சமூகத்திலுள்ள இளைய இளைஞர் குடும்பங்களுக்கு சில விஜயங்கள் மேற்கொள்ள சற்று அனுபவமுடைய யாருடனாவது நீங்கள் உடன்செல்ல விரும்புவீர்கள்.

## பகுதி 15

அடுத்த நாள், அண்டைப்புறத்தில் உருவாகிவரும் ஒரு புதிய குழுவில் சேரவிருக்கும் மூன்று இளைய இளைஞர்களின் இல்லங்களுக்கு அலெயான்ட்ராவும் பீட்ரிஸும் விஜயம் செய்தனர். ஆன்மீக சக்தியூட்டல் திட்டம் பற்றிய உரையாடலில் பெற்றோர்கள் உற்சாகத்துடன் ஈடுபடுவதைக் கண்டு பீட்ரிஸ் மகிழ்ச்சியடைந்தாள். அடுத்த நாள் மதியத்திற்குள், அந்த இளைய இளைஞர் குழுவுக்கு அலெயான்ட்ராவுடன்  தானும் உதவிடவும் அந்த வருடத்திற்குள்ளாகவே ஒரு புதிய குழுவிற்கு எனிமேட்டராகப் பணிபுரிவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டுமெனவும் பீட்ரிஸ் தீர்மானித்தாள்  இடையே, பயிற்சிக்கழகத்தின் சில நூல்களை தான் பூர்த்திசெய்திட வேண்டுமென்பதை உணர்ந்து, தான் இப்போதைய நிலையை அடைய உதவியுள்ள அதே சீரான வேகத்தில் அந்த நூல்களின் பயிற்சியில் மேம்பாடு அடைய அவள் தீர்மானித்தாள்.

அலெயான்ட்ராவின் தொடர்ச்சியான உதவி மற்றும் ஊக்குவிப்புடன், பீட்ரிஸ் சேவை பாதையில் முன்னோக்கிச் செல்கிறாள் என்பதை நாம் கண்டுள்ளோம். சில மாதங்களுக்குப் பிறகு, அவள் நூல் 2'இன் பயிற்சியை முடிக்கும் தருவாயில் அவளுடைய கதையை நாம் மீண்டும்

தொடர்கிறோம். அவளது படிப்பு வட்டத்தின் பயிற்றுநர், ஒரு குழந்தைகள் வகுப்பு ஆசிரியரான மாரிபெல்'லிடம், பீட்ரிஸையும் அவளது சக பங்கேற்பாளர்களையும் கிரேட் 1'க்காக புதிதாக உருவாக்கப்பட்ட வகுப்பின் சிறார்களுடைய பெற்றோர்களைச் சந்திக்க வருமாறு அழைப்பு விடுக்க கோரியிருந்தார். தனது நூல் 3'இன் பயிற்சி மூலம் தான் நிறையவே கற்றுக்கொண்டுள்ளதாக பீட்ரிஸ் உணர்கிறாள். மேலும், நூலில் இருந்து பெற்ற நுண்ணறிவு, ஓர் எனிமேட்டராகப் பணிபுரிவதற்கான தனது திறனை அதிகரிக்கும் என்று அலெயான்ட்ராவிடமிருந்து அவள் அறிந்திருக்கிறாள், அதை அலெயான்ட்ரா பீட்ரிஸிடம் பலமுறை கூறியுமுள்ளார்.

அவர்கள் ஒன்றுகூடியபோது, பீட்ரிஸிடம் அவர்கள் எம்மா'வின் தாயாரைச் சந்திக்கவிருப்பதாக மேபெல் கூறுகிறார். "எம்மா கற்பதில் ஆர்வமுடைய ஓர் உற்சாகமான பெண்," என மேரிபெல் கூறுகிறார். "நான் ஏற்கனவே ஒருமுறை அவளுடைய பெற்றோரைச் சந்தித்து பஹாய் சிறுவர் வகுப்பின் இயல்பை அவர்களிடம் விளக்கியுள்ளேன். அவ்வகுப்பில் எம்மா பங்குபெற அவர்கள் மகிழ்ச்சியுடன் அனுமதியளித்தனர். அவ்வகுப்பு குறித்து மேலும் அதிகமாகத் தெரிந்துகொள்ள எம்மாவின் தாயார் விருப்பம் தெரிவித்துள்ளார். நான் மீண்டும் சென்று, நாம் போதிக்கும் உபகரணங்களுக்கு அடித்தலமாக உள்ள கல்வியல் யோசனைகளைப் பற்றி அவர்களிடம் சிறிது பேசுவதாக நான் வாக்களித்துள்ளேன். உண்மையில், அது குறித்து நான் சில குறிப்புகளையும் எழுதிவைத்துள்ளேன். உனக்கு விருப்பமானால், அவற்றை ஒன்றாகப் படித்து அவற்றைப் பற்றி உரையாடலாம்." பீட்ரிஸ் ஒப்புக்கொண்டாள். அவர்கள் கலந்துரையாடிய அந்தக் குறிப்புகள் இதோ:

- முதலில், எம்மா என் வகுப்பில் இருப்பது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றது என்பதையும் அவளது சில அற்புதமான பண்புகள் பற்றியும் திருமதி மார்ட்டினெஸ்'சிடம் தெரிவிப்பேன்.

- அவருடனான உரையாடலை பஹாவுல்லாவின் பின்வரும் மேற்கோளை அவருடன் சேர்ந்து படிப்பதன் மூலம் ஆரம்பிப்பது சிறப்பாக இருக்கும்.
  **"மனிதனை விலைமதிப்பிடவியலாத இரத்தினங்களைக் கொண்ட சுரங்கமாகக் கருதுங்கள். கல்வி ஒன்றே, அதனைத் தன் பொக்கிஷங்களை வெளிப்படுத்தச் செய்து, மனிதனை அதிலிருந்து பயன்பெற உதவிடும்."**[37]

- ஓர் ஆசிரியர் என்னும் முறையில், இந்தக் கூற்று என்மீது எவ்வளவு செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பது குறித்து அவருடன் சில கருத்துகளைப் பரிமாறிக்கொள்வேன். வகுப்பில் உள்ள பிள்ளைகளை நான் பார்க்கும் போதெல்லாம் என் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்து, அவர்கள் அனைவரையும் விலைமதிப்பற்ற இரத்தினங்கள் அடங்கிய

சுரங்கங்களாக நினைத்துக்கொள்வேன். அவர்கள் ஒவ்வொருவரும், தெய்வீகப் பண்புகளை வெளிப்படுத்துவதற்கான சாத்தியங்களைக் கொண்டுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் கண்டறிந்து அபிவிருத்தியாக்கிடக் கூடிய திறன்களைக் கொண்டுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் சமூகத்தின் மதிப்புமிக்க உறுப்பினராக வளர்ச்சியடைந்து, உலகின் மேம்பாட்டிற்குப் பங்களித்திட முடியும்.

- அடுத்து, ஒவ்வொரு குழந்தையினுள்ளும் கல்வி வெளிப்படுத்த முயலவேண்டிய இரத்தினங்களின் சில உதாரணங்களை வழங்கலாம். இயற்கையின் சட்டங்கள், அழகிய கலைப்படைப்புகளை உருவாக்குதல், மேன்மையான சிந்தனைகளை வெளிப்படுத்துதல் போன்ற மனதின் சில சக்திகளை நான் குறிப்பிடக்கூடும். பிள்ளைகள் முறையான கல்வியைப் பெறும்போது, அவர்கள் இந்தச் சக்திகள் அனைத்தையும் உருவாக்கிக்கொள்ள ஆரம்பிப்பர். ஆனால், இது நடப்பதற்கு, அவர்கள் அவர்களின் சிறுவயதிலேயே சில நற்பண்புகளைப் பெற வேண்டும். உதாரணத்திற்கு, அவர்கள் கவனம் செலுத்த கற்க வேண்டும்; தேவைப்படும்போது கடுமையாக உழைக்க வேண்டும்; அவர்கள் செய்கின்றவற்றில் உன்னிப்பான கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் மற்றவர்களின் நல்வாழ்வு பற்றி அக்கறை கொண்ட, சமூகத்திற்கு சேவை செய்ய விருப்பமுள்ள மனிதர்களாக வளரவேண்டும். அதனால்தான் அவர்களின் இளம் வயதிலேயே அவர்கள் மேம்பாட்டின் மீது கவனம் செலுத்துவது முக்கியமாகும்.

- தனது மகள் எப்படிப்பட்ட ஒரு பெண்ணாக வளர வேண்டுமென திருமதி மார்ட்டினெஸ் விரும்புகிறார் என்பதை அவர் நம்முடன் பகிரும்படி கேட்பதற்கு இது சரியான தருணமாகும். எம்மாவுக்கு முக்கியமானவை என அவர் கருதும் சில பண்புநலன்கள் யாவை?

- அவர் குறிப்பிடும் பண்புகளில் சில நிச்சயமாக, நான் அறிமுகப்படுத்தும் அடுத்த பாடமான ஆன்மீக நற்பண்புகள் வகையில் அடங்கியிருக்கும். மனித வாழ்க்கைக்கு அடிப்படையான சில பண்புகளை ஒரு தனி மனிதன் பெற்றிருக்க வேண்டுமென நான் கூறுவேன். அவை மனிதனின் ஆன்மாவுக்குச் சொந்தமானவை. நமது உள்ளமெனும் கண்ணாடி கடவுளின் பண்புகளைப் பிரதிபலிப்பதற்கு ஏதுவாக அதற்கு மெருகூட்டும்போது அவற்றை நாம் உருவாக்கிக்கொள்கின்றோம். கிரேட் 1'க்கான நமது வகுப்புகளில் நாம் கற்பிக்கும் பாடங்கள் பெரும்பாலும் இந்தக் குணங்கள் மீதுதான் கவனம் செலுத்துகின்றன.

- நான் நினைப்பது என்னவென்றால், நூல் 3'இல் உள்ள கிரேட் 1 பாடங்களில் உரைக்கப்பட்டுள்ள சில ஆன்மீக நற்பண்புகளை நான் வரிசைப்படுத்தி, அவற்றுடன் இணைவாக வரும் மேற்கோள்களை அவருடன் பகிர்ந்துகொள்வேன். எம்மா அவற்றை

மனனம் செய்வாள் எனவும், அவள் கற்றுக்கொள்ளவிருக்கும் பிரார்த்தனைகளுடன் அந்த மேற்கோள்களையும் ஒப்புவிக்குமாறு தம் மகளிடம் அவர் கூறலாம்.

– அன்பு:

**“நண்பனே! உனது உள்ளமெனும் பூங்காவில் அன்பெனும் ரோஜாவைத் தவிர வேறெதனையும் பயிரிடாதே. . .”**[38]

– நீதி:

**“நீதியின் பாதையைப் பின்பற்றுங்கள்; ஏனெனில், மெய்யாகவே, இதுவே நேர் வழி.”**[39]

– வாய்மை:

**“வாய்மையே எல்லா மனித நற்பண்புகளுக்கும் அஸ்திவாரம்.”**[40]

– மகிழ்ச்சி:

**“மனிதனின் புத்திரனே! உனது உள்ள உவகையில் பூரிப்படைவாயாக; அதனால் நீ, என்னைச் சந்திக்க அருகதை பெற்று, எனது அழகையும் பிரதிபலிக்கக்கூடும்.”**[41]

மேற்கண்ட யோசனைகள் ஒரு விஜயத்திற்குப் போதுமானவை என மேரிபெல்'லும் பீட்ரிஸும் தீர்மானிக்கின்றனர். நீ விரைவில் நூல் 3'இன் படிப்பாய்வுக்குச் செல்வாய். அப்போது, சிறார்களின் ஆன்மீகக் கல்விக்கான ரூஹி பயிற்சிக்கழகத்தின் ஆறு ஆண்டு திட்டத்திற்கு வடிவம் கொடுக்கும் சில கொள்கைகளைப் பற்றி சிந்திக்க ஒரு வாய்ப்பும் கிடைக்கும். அதற்கு முன்பாக, ஒரு சிறார் வகுப்பு ஆசிரியருடன் சில பெற்றோரைச் சந்திக்கும் ஒரு வாய்ப்பு உனக்கு ஏற்பட்டால், இங்கு பதிவுசெய்யப்பட்டுள்ள யோசனைகள் உனக்கு உதவியாக இருக்கும். அவற்றை நீங்கள் உங்கள் படிப்பு வட்டத்தில் ஒவ்வொரு விஷயமாக கலந்தாய்வு செய்யலாம்.

## பகுதி 16

இதற்கு முன்பாக, அப்துல்-பஹாவின் பின்வரும் சொற்களை நாம் படித்தோம். “தோழமை, ஒருமைப்பாடு ஆகியவற்றின் பந்தங்கள் எத்துணை வலுவாக இருக்கின்றதோ, அத்துணை வலுவாக மனித நடவடிக்கைத் தளங்கள் அனைத்திலும் ஆக்ககரம், சாதனைகள் ஆகியவற்றின்

சக்தி இருந்திடும்.” இல்லங்களுக்கு விஜயம் செய்வதிலும் நம்முடைய இல்லங்களுக்கு அழைப்புகள் விடுப்பதிலும் “ஒரு சமூக உணர்வைப் பேணும் ஆன்மீக உறவுகளின் பந்தங்களை நாம் உருவாக்குகின்றோம்,” என உலக நீதிமன்றம் நமக்குக் கூறுகின்றது. ஆதலால், நமது வளர்ச்சியுறும் சமூகத்தினுடைய கலாச்சாரத்தின் மீது இந்த நடைமுறையின் விளைவை நாம் குறைத்து மதிப்பிடலாகாது.

கடந்த பகுதிகளில், நாம் ஒருவர் மற்றவரின் இல்லங்களுக்கு விஜயம் செய்யும்போது நடைபெறக்கூடிய பல தனித்துவமான உரையாடல் வகைகளைப் பார்த்தோம். நாம் அனைவரும், ஒரு சேவைப்பாதையில் பயணிக்கும்போது, நமது பிரத்தியேக மற்றும் கூட்டு வாழ்க்கைகளில் பஹாவுல்லா போதனைகளின் பயன்பாட்டைப் பற்றி நமது கிராமம், நகரம் அல்லது அண்டைப்புறத்தில் நடைபெறக்கூடிய ஒரு விரிவடையும் உரையாடலில் பங்கேற்போம். சில நேரங்களில், இந்தப் போதனைகளில் தங்களின் அறிவை ஆழப்படுத்திக்கொள்ள அதிகரிக்கும் எண்ணிக்கையினருக்கு உதவிட ஏற்பாடு செய்யப்படும் முறையான விஜயங்கள் வரிசையில் இது மடிப்பவிழக்கூடும். வேறு பல வேளைகளில், பயிற்சிக்கழகத்தின் கல்வியல் திட்டங்கள், அவற்றின் குறிக்கோள்களும் உள்ளடக்கங்களும் கலந்தாய்வுக்கான கருப்பொருளாகிடும். சமூக நிர்மாணிப்பு செயல்முறையில் ஈடுபடுவதற்கான அழைப்புகள் மேன்மேலும் அதிகமான அண்டையர்களுக்கும் நண்பர்களும் நீட்டிக்கப்படும். வருங்காலத்தையும் பின்னர் உங்களுக்கு முன் நீண்டு கிடக்கும் சேவைப்பாதையையும் நீங்கள் பார்க்கும்போது, இந்தப் பாடப்பிரிவில் வழங்கப்பட்டிருக்கும் உள்ளடக்கத்தை நன்கு கற்பதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்; கருப்பொருள் ஒவ்வொன்றைப் பற்றியும் உரையாடுவதற்கு நல்ல அனுபவம் பெறவேண்டும், மற்றும் நிச்சயமாக, பஹாவுல்லாவின் போதனைகளில் உங்கள் அறிவைத் தொடர்ந்து ஆழப்படுத்திக்கொள்ளவும் வேண்டும். இவ்வாறாக, பிறருடன் கடவுள் திருவாக்கைப் பகிர்ந்துகொள்ளும் எல்லையிலா மகிழ்ச்சி உங்களுடையதாகிடும்.

# குறிப்பீடுகள்


1. பஹாவுல்லா, *மறைமொழிகள்* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 2003, 2012 பதிப்பு), அரபு எண். 4, பக். 4.
2. பஹாவுல்லா, பஹாய் பிரார்த்தனைகள்: *பஹாவுல்லாவினால் வெளிப்படுத்தப்பட்ட பிரார்த்தனைகளின் தேர்வு* பஹாவுல்லா, பாப் பெருமானார், அப்துல்-பஹா (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 2002, 2017 பதிப்பு), பக். 4.
3. *பஹாவுல்லா, பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்,* பக். (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 1983, 2017 பதிப்பு), IV, பத்தி 1, பக். 5.
4. மேற்கண்ட., V, பத்தி 2, pபக். 6–7.
5. *பஹாய் பிரார்த்தனைகள்*, அப்துல்-பஹா பக். 81.
6. மேற்கண்ட., பக். 111.
7. மேற்கண்ட.
8. 1912 ஆகஸ்ட் 16'இல் வழங்கப்பட்ட ஓர் உரையிலிருந்து, *சர்வலோக அமைதிக்கான பிரகடனம்:* 1912'இல் அமெரிக்கா மற்றும் கனடாவுக்கு விஜயம் செய்தபோது 'அப்துல்-பஹா வழங்கிய உரைகள் (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 2012), பத்தி 23, பக். 364.
9. அப்துல்-பஹா , *பஹாய் பிரார்த்தனைகள்*, பக். 130.
10. *பஹாவுல்லா, பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்,* பக். , XLV, பத்தி 1, pபக். 111–12.
11. அப்துல்-பஹா, ஷோகி எஃபெண்டியினால் குறிப்பிடப்பட்டது *பஹாவுல்லாவின் உலக அமைப்புமுறை:* தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதங்கள் (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 1991, 2012 பதிப்பு), பக். 139.
12. *பஹாவுல்லா, பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்,* பக். , V, பத்தி 5, பக். 8.
13. பத்தி 4, பக். 128. 8. 1912 மே 5'இல் வழங்கப்பட்ட ஓர் உரையிலிருந்து, *சர்வலோக அமைதிக்கான பிரகடனம்*
14. அக்டோபர் 21 1911'இல் அப்துல்-பஹா ஆற்றிய ஓர் உரையிலிருந்து, *பாரீஸ் பேருரைகள்* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 2006, 2016 பதிப்பு), எண். 6.7–8, பக். 22.
15. *பஹாவுல்லா, பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்,* பக். , CXLVI, பத்தி 1, பக். 357.
16. அப்துல்-பஹா 5 மே 1912'இல் வழங்கிய ஓர் உரையிலிருந்து, *சர்வலோக அமைதிக்கான பிரகடனத்தில்* பிரசுரிக்கப்பட்டது:; பத்தி 4, பக். 128.
17. *மறைமொழிகள்*, பாரசீகம் எண். 44, பக். 37.
18. மேற்கண்ட., பாரசீகம் எண். 66, பக். 45.
19. அப்துல்-பஹாவின் நிருபம் ஒன்றிலிருந்து (அதிகாரபூர்வ மொழிபெயர்ப்பு)
20. *சர்வலோக அமைதிக்கான பிரகடனம்* , பத்தி 2, பக். 478–79.

21. *அப்துல் பஹாவின் எழுத்துகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம் , 2010, 2015 பதிப்பு), எண். 43.1, பக். 125. 22.
22. மேற்கண்ட, எண். 207.3, பக். 360.
23. பஹாவுல்லா, in *பஹாய் கூட்டங்கள் பஹாவுல்லா, அப்துல்-பஹா, ஷோகி எஃபெண்டி ஆகியோரின் எழுத்துகளிலிருந்து எடுபகுதிகள்*;, தொகுத்தல், ஆய்வுத் துறை, உலக நீதிமன்றம் (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம் , 1976, 1980 பதிப்பு), பக். 3.
24. மேற்கண்ட
25. அப்துல்-பஹா அப்பாஸ் நிருபங்கள் (நியூ யார்க்: பஹாய் பிரசுர செயற்குழு, 1916, 1930 பதிப்பு), vol. 3, பக். 631. (அதிகாரபூர்வ மொழிபெயர்ப்பு)
26. பஹாவுல்லா, *கித்தாப்-இ-அக்டாஸ், அதிப்புனித நூல்* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம், 1993, 2013 பதிப்பு), பத்தி 57, பக். 41.
27. *அப்துல்-பஹாவின் எழுத்துகளிலிருந்து சில தேர்வுகள்*, எண். 48.1, பக். 130.
28. உலக நீதிமன்றத்தின் செய்திகள் 1986-2001; 27 ஆகஸ்ட் 1989 எனத் தேதியிடப்பட்ட ஒரு கடிதம், உருவாக்க காலத்தின் நான்காவது சகாப்தம் (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம் 2010) எண். 69.2, பக். 132–33.
29. மேற்கண்ட, எண். 69.9–10, பக். 135.
30. பஹாவுல்லாவின் மறை மொழிகள், பாரசீகம் எண். 82, பக். 51.
31. மேற்கண்ட, பாரசீகம் எண். 80, பக். 51.
32. அப்துல்-பஹா,, *தெய்வீக நாகரிகத்திற்கான இரகசியம்* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம் 2007, 2016 பதிப்பு), பத்தி 46, பக். 33.
33. பஹாவுல்லாவின் மறை மொழிகள், பாரசீகம் எண். 49, பக். 39.
34. *பஹாய் செய்திகள்* பிரசுரத்தில் ஷோகி எஃபெண்டியின் குறிப்பீடு, எண். 13 (செப்டம்பர் 1926), பக். 1.
35. *சர்வலோக அமைதிக்கான பிரகடனம்*, 17 நவம்பர் 1912'இல் அப்துல்-பஹா ஆற்றிய ஓர் உரை பத்தி 3, பக். 617.
36. *செயல்பாட்டிற்கான கட்டமைப்பு: உலக நீதிமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்திகளும் துணை உபகரணங்களும்* 2006-2016 (மேற்கு பால்ம் பீச்: பாலாப்ரா பதிப்பகம், 2017), எண். 14.16, பக். 82.
37. *பஹாவுல்லா, பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்,* பக். CXXII, பத்தி 1, பக். 294.
38. *பஹாவுல்லாவின் மறை மொழிகள்* எண். 3, பக். 23.
39. பஹாவுல்லா, *பஹாவுல்லாவின் திருவாக்குகளிலிருந்து சில பொறுக்குமணிகள்,* பக்., CXVIII, பத்தி 1, பக். 283.
40. 'அப்துல்-பஹா, ஷோகி எஃபெண்டியினால் குறிப்பிடப்பட்டது, *தெய்வீக நீதியின் வெளிப்பாடு* (வில்மட்: பஹாய் பிரசுர காப்பகம் , 2006, 2018 பதிப்பு), பத்தி 40, பக். 39.
41. *பஹாவுல்லாவின் மறை மொழிகள்* அரபு எண். 36, பக். 12.